# தமிழரசு

ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதியும் வெளி வரும்.

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, சிலோன் உள்நாட்டிற்கு | 1—0—0 |
| | பர்மா, பினங்கு சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| | ஜீவிய சந்தா | 20—0—0 |
| | தனிப் பிரதி விலை | 0—1—0 |
| | மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது | 0---2---0 |

## சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகை முன் பணமாகவே மணியாடர் செய்ய வேண்டும். வீண் செலவு அதிகமாகிறபடியால் வி. பி. யில் அனுப்ப முடியாது.

2. விலாசம் மாறும் சந்தாதாரர்கள் புதிய விலாசத்தையும் சந்தா நம்பரையும் பத்திரிகை வெளியாவதற்கு ஒரு வாரம் முன்னதாகவே எழுத வேண்டும்.

3. பதிலுக்கு ரிப்ளை கார்டோ, தபால் தலையோ அனுப்ப வேண்டும்.

## கட்டுரை எழுதுவோருக்கு

1. கருத்தமைந்த கட்டுரைகள், ஹாஸ்ய வியாசங்கள், சிறு கதைகள் எளிய - இனிய நடையிலுள்ள பழைய - புதிய கவிதைகள், கலைகள் சம்பந்தமான கட்டுரைகள், நல்ல மொழி பெயர்ப்புகள், ஏற்றுக் கொள்ளப்படும்.

2. விஷயங்கள், நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதப்பட வேண்டும். சுருக்கமான விஷயங்கள் முன்னர் கவனிக்கப்படும்.

3. அனுப்பும் எல்லா விஷயங்களுக்கும் காப்பி வைத்துக் கொண்டே அனுப்ப வேண்டும். பிரசுரமாகாத விஷயங்களைத் திருப்பி அனுப்ப வேண்டுமானால் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

4. மதிப்புரைக்கு நூல்களும், மாற்றுப் பத்திரிகைகளும், வெளியிட வியாசங்களும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

ஆசிரியர்,

'தமிழரசு'

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

ச ன் னை

டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரவர்களுக்கு

சிவப்பிரகாச சுவாமிகளால் அருளப்பெற்ற

வரப்பிரசாதங்கள்.

OFFICE ... 17 APR 1939 ... MADRAS

பர்மாவில் சகலராலும் புகழ்ந்து

கொண்டாடப்படும் நவரத்தினங்கள்

## இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றிக் கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல், சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

# இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்



புத்திர உற்பத்தியை அளிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போ போது ஆள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பி வரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படு இரத்த விருத்தி யுண்டாகும். இம் மாத்திரையானது தங் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோ முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதி கரிக்கச் செய்வதோடு, இரு பாலர்களின் இச்சையையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள குழந்தையில்லாத தம்பதிகளுக்குப் புத்திரசந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும், சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற் றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப்போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராள மாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

## இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

### ஓர் அரிய சஞ்சீவி

14 வயதுள்ள பெண் குழந்தைக்குச் சன்னிபாத சுரமும், கப வாத சுரமும், அதிகரித்து அபாய நிலைமையில் இருக்கும்போது டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடத்தில் காண்பித்ததில் அபாய கரமான நிலையாயினும் இன்பசார மாத்திரையால் குணமடையும் என்று மூன்று மாத்திரை கொடுத்தார். முதல் மாத்திரை கொடுத்த அரைமணி நேரத்திற்கெல்லாம் 105 டிக்கிரி இருந்த சுரம் 102-க்கு இறங்கி விட்டது. மற்ற இரண்டு மாத்திரை கொடுத்ததும் 99-டிக் கிரிக்கு இறங்கி விட்டது. மீண்டும் சுரம் அதிகரிக்கவில்லை. பிறகு டாக்டர் காஞ்சிபுரம் உற்சவத்திற்குச் சென்றார். இப்போது குழந்தை சௌக்கியமாய் இருக்கின்றது. இன்பசாரம் என்னும் மாத்திரை ஓர் அரிய சஞ்சீவி எனவே சொல்லலாம்.

சாமி. வேங்கடேச பெருமாள் செட்டி.

## க்ஷயரோகம் நீங்கிற்று

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய நாயகிக்கு ஏற்பட்டிருந்த க்ஷயரோகம் காரணமாய் அதிகமாய்க் காய்ந்துகொண் டிருந்த சுரமும், இருமலும் தங்கள் இன்பசாரம் என்னும் மாத்திரைகளில் சில புட்டி சாப்பிட்டவுடன் நீங்கிவிட்டது. இப்போது நிறையிலும் அதிகப்பட்டிருக்கின்றது. இருமலும், சுரமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. தங்களுடைய இன்பசார மாத்திரை ஆச்சரியகரமான மருந்து என்பதில் சந்தேகமில்லை. இதை க்ஷயரோகத்தால் துன்பப்படும் என்னுடைய சிநேகிதர்களுக்கும் சொல்லி வருகின்றேன்.

வி. ராமநாத ஐயர்,

7—5—32. கார்ட்டன் வூட்ராம் கம்பெனி, மதராஸ்.

---

## குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று, பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானல் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானல் கிருஷ்ண அண்டு கம்பெனியாரையும், கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

கவனிப்பு:—இன்னும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் சில மாத்திரம் இங்குக் குறிப்பிட்டோம்.

ஒரு மாதம் சாப்பிடக் கூடிய

**30 மாத்திரைகள் அடங்கிய புட்டி விலை ரூபா 5.**

# சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு ஆழாக்கு பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கைகால் பிடிப்பு, உடம்பு வலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன் படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினர். அவர் வார்த்தைக் கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக்கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரி லுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30

இப்படிக்கு,
அண்ணுவையங்கார்.

---

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் ஒண்ணுக்குப் போகும்போது நீர்துவாரத்திலிருந்து இரத்தம் விழுந்து வந்தது. அதற்குத் தங்கள் சகலமேக சித்தாதி எண்ணெய் 3 வேளை சாப்பிட்டதில் பூரா குணம்பெற்றேன்.

இப்படிக்கு,
இராஜரத்தினம் செட்டி.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தங்கள் முன்னம் அனுப்பிய சகல மேக சித்தாதி எண்ணெயைச் சாப்பிட்டு என் வியாதி சௌக்கியமாய் நீங்கிவிட்டதற்காக நான் தங்களுக்கு மிகவும் நன்றியுள்ளவனு யிருக்கிறேன். இப்பவும் நமக்கு வேண்டியவர்களின் தேவைக்காக என் விலாசத்துக்கு சகல மேக சித்தாதி எண்ணெய் புட்டி 1 வி. பி. யில் அனுப்பி வைப்பதுடன் அனுபான பத்திய விவரமடங்கிய டைரக்ஷன் நோடீசும் அனுப்பி வைக்கவும்.

தங்களன்புள்ள,

கிருஷ்ணசாமி நாயகர்,

2—7—34. பாங்கி குமாஸ்தா, மேட்டுத்தெரு, ஆத்தூர்

சேலம் ஜில்லா.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

சகல மேக சித்தாதி எண்ணெய் புட்டி 1-க்கு விலை ரூ. 5.

# தைலாமிர்தம்



இத் தைலம் பலவித உயர்ந்த பச் சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலான உயர்ந்த வஸ் துக்களும், மூளையைக் குளிரச் செய் யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நா னம்செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவை களையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து புத்தித் [illegible] யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, [illegible] ழுத்து [illegible] மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் [illegible] உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

5-பலம் கொண்ட டின் விலை ரூபா [illegible]

# இணையற்ற அயத்தங்க திராவகம்



நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாது விருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி பதிகரிக்கும். இம்மருந்தைச் சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் இருபாலர்களும்

எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம். மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.

**நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணு 12.**

## அபிப்பிராயம்

அன்புள்ள உண்மை வைத்தியரே!

நான் அடைந்த சுகத்திற்கு என் ஆயுளுள்ளவரை உங்களை மறப்பது நீதியாகாது. என் உடல் மிகவும் மெலிந்திருந்தது; இரத்தம் வற்றியிருந்தது; சோம்பல் அதிகரித்திருந்தது; மயக்கம், அசதி, தூக்கம், செமியாகுணம் இவைகள் என்னை அடக்கியாண்டன. பல வைத்தியர்கள் என்னைக் கைவிட்டு விட்டனர். ஒரு பிரபல டாக்டர் இது உனக்கு முற்றிவிட்டது. இனி இதை நிவர்த்திப்பது மிகவும் கடினம்; ஆண்டவன் பிரசுப்திபடி நடப்பதே இனி ஆகக் கூடியது. நீ வைத்தியம், வைத்தியம் என்று ஏங்காதே! மனம் நாடிய சகல வஸ்துக்களையும் தின்று உன் ஜீவிய காலத்தை முடி. ஒருகால் இவ்வித வழியில் நீ சுகம் பெறலாம்; வைத்தியத்தினால் பெற முடியாது!' என உபதேசித்தார். என் வாழ்க்கையே சமாப்தி அடைந்ததாக நான் அப்பொழுது எண்ணினேன்.

நிற்க, உங்கள் 'தமிழரசு' பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்து, உங்கள் 'அயத்தங்க திராவகத்'திற்கு 3 பாட்டில்களுக்குச் சென்ற 1933-ம் வருடம் நவம்பர் மாதம் ஆர்டர் கொடுத்தேன். அதை தாங்கள் உடனே அனுப்பினீர்கள். அந்த மருந்தை இந்த 1934-ம் வருடம் டிசம்பர் 6௳ வரை சாப்பிட்டேன். அது எனக்குப் புத்துயிர் அளித்தது! புனர்ஜன்மம் கொடுத்தது' என்னை ஒரு வீரபுருடனாக ஆக்கியது. இப்போது நான் சரீர சுகஜீவியாய் இருந்து வருகிறேன். சரீர சம்பந்தப்பட்டமட்டில் உள்ள சுக அம்சங்கள் யாவும் எனக்கு உண்டாகி இருக்கிறது. நான் உங்களை வாழ்த்துகிறேன். உங்கள் குடும்பமும், மருந்தும் ஓங்குவதற்குக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். எனது இந்திய சோதர சோதரிகள் இதை உட்கொண்டு நன்மை அடைவார்களாக!

G. M. அலிஹுஸையன் M. H. A.

கௌரவ காரியதரிசி, 'ஹுஸைனியா சங்கம்'

ஜெனரல் அட்வர்ட்டைசர், ஆர்டிகலிபெட் நாகூர் 26–12–34.

எமது விலாசம்:

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,**

**31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.**

# சௌம்யன்

ஓர் இனிய

சினிமாக் கதை

207676

ஆசிரியர்:

பாரதிதாசன்

(காபிரைட்)

ஹிம்ஸையா?—அஹிம்ஸையா எது உபயோகமுள்ளது? உலகின் நிலை என்ன? அக்ரமம் ஜயிக்குமா?—இவைபற்றிச் சினிமா முறையில் இயன்ற ஓர் இனிய நாடகம்.—விலை அணு 6.

894.811.131TA
N39.M4

நூற்றுக்கணக்கில் வேண்டியவர்கள் விலை விவரம் எழுதித் தெரிந்து கொள்க.

விலாசம்:—

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| பிரமாதி வந்தது! | .... | 242 |
| ஆசிரியர் குறிப்புகள் | .... | 244 |
| காலிகள் | .... | 248 |
| மாதர் பகுதி—தமக்கையின் தபால் | .... | 249 |
| பாலனைப் பழித்தல் | .... | 252 |
| மூளைக்கு வேலை | .... | 254 |
| சிங்கவனம் சிங்கங்களுக்கே! | .... | 255 |
| துண்டு விழும் பணத்திற்கு வருமானம் | .... | 257 |
| இனியாள் | .... | 261 |
| இரு கைக்குட்டைகள் | .... | 265 |
| ஜானசீக்கியனின் வாள் | .... | 270 |
| காதலும் சாதலும் | .... | 273 |
| மங்கையர்க்கரசி | .... | 278 |
| பிச்சைக்காரன் | .... | 283 |
| காதல் மணம் | .... | 289 |
| முதலாளித் தன்மையின் அந்திய காலம் | .... | 290 |
| சிறுவர் பகுதி—தேவலோகம் சென்ற சிறுமி | .... | 293 |
| பொருத்தமற்ற தம்பதிகள் | .... | 296 |
| இலங்கை | .... | 299 |
| சோப்பு செய்யும் விதம் | .... | 302 |
| நகைச் சுவை | .... | 30[illegible] |
| வனிதா அல்லது கொலை யுண்ட காரிகை | .... | |
| தழுவியதும் உயிர் போயிற்று | .... | |
| சோமு செய்த சிறு பிழை | | |


குறிப்பு:—'தமிழர'சில் வெளி வரும் பெய
பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கு
ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் மூன்
யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவ

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

(மாத வெளியீடு)

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்....'

ஆசிரியர் : டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

| | | |
|---|---|---|
| மலர் 10 | பிரமாதி ௵ சித்திரை ௴ 1939௵ ஏப்ரல் ௴ 15௳ | இதழ் 4 |


## பிரமாதி வந்தது!

அக்ரமத்தின் முதிர்ச்சி, பொது மக்களின் வெறுப்பு தமிழர்களின் நெஞ்சப் புழுக்கம், இவைகளோடு சென்றது வெகுதானிய வருஷம்! காந்தீயம் இன்னும் இருக்கிறது. தொண்டையில் உயிரை வைத்துக்கொண்டு!

பிரமாதி வருக; தமிழர்கட்கு மகிழ்ச்சியைக் கொண்டு வருக; அக்ரமக் கரம்பை உழுது புரட்டிப் பொது நலப் பயிர் செழிக்கும்படி வருக.

தமிழுக்கு விடுதலை கொண்டு வருக; தமிழ்க் கலைக்கு விடுதலை கொண்டு வருக; புதுவருஷம்! தமிழின் விளைவுக்குக் களையான ஹிந்திக் கட்டாயத்தைத் தொலைக்க வருக! ஆச்சாரியாரின் வன்செயலுக்கு மாற்றுக்கொண்டு வருக பிரமாதிப் புது வருஷம்!

தமிழ்ப் பெருமக்களின் அபிலாஷை வேறு. காங்கிரஸின்—
...ன்—ஆச்சாரியாரின் போக்குகள் அதற்கு நேர்விரோத
...பிவாங்கும் தன்மையது; வகுப்பு வெறியை மேற்
...வது ஒழிக வெகுதானிய ஆண்டோடு!

...ா இகழ்ந்தவன் வாழ்ந்ததில்லை. பெரு மக்களை
...ருப்பட்டதில்லை. சார் சக்ரவர்த்தியைப் பார்த்
...ானிய வருஷங்கூட ஒழியாமல் இருக்கலாம்
...ந்து இப்போது ஆச்சாரியார் நினைப்பது
...மாதி நல்லதொரு தமிழ் நாட்டைத்

நாம் நல்லது என்று நினைத்த வெகுதானிய வருஷத்து ஆச்சாரி ஆக்கம் நெருப்பைத்தான் பொழிந்தது. வெகுதானிய ஒழிந்தது போல் ஆச்சாரியின் ஆட்சி ஒழியட்டும்.

காந்தியர்கள் விஷத்தைவிட்டுக் கலக்க நினைக்கும் புதிய பிரமாதி நல்லதாகட்டும் தமிழ்ப் பெருமக்களின் நெஞ்சத்தைப் போல!

வெகுதானிய வருஷத்தைக் காரியுமிழ வைத்தது, வெறுக்க வைத்தது, மக்கள் தூற்றும்படி ஆக்கியது அந்தக் காந்தியந்தான்.

பிரமாதியைப் போற்றும்படி, வைக்கப் போவது தமிழ்ப் பெருமக்களின் ஒன்று சேர்ந்த மலைப்புயக் கூட்டந்தான்!

அடக்கு முறைச் சட்டத்திற்கு ஆசீர்வாதமா? என்ன அவமானச் செயல்? பேசுவதெல்லாம் பொய்யா? பத்திரிகைகளெல்லாம் இதற்குத்தானு? ரத்தமில்லையா உடம்பில்?

தமிழர்கள் இறந்தா போனூர்கள்! உணர்வே இல்லாமல் போய் விட்டதென்ற எண்ணமா? தமிழர்கள் அக்ரமத்தை எத்தனை யுகத்திற்கு விட்டு வைப்பார்கள்?

இந்த நாட்டில் இப்படி! வெளி நாட்டிலும் இதே நிலை!

பிரஞ்சு நாட்டில் ஒரு காந்தி, இங்கிலந்து தேசத்தில் ஒரு ராஜாஜி, இத்தாலியில் ஒரு படேல், ஜெர்மனியில் ஒரு பந்த். ஸ்பெயினில் ஒரு ஜவஹர்! ஐரோப்பாவின் பெரும்பான்மை மக்கள் நெஞ்சம் துடிக்கிருர்கள். அவர்கள் அபிலாஷைகள் பாழ்! சிறு தேசங்கள் கொள்ளை! அங்குக் குடிகளின் கண்ணீருக்கு ஆறு என்று பெயர். அவர்களின் கொதிக்கும் ரத்தத்திற்குத்தான் பனிக் கட்டி என்று அர்த்தமாம்!

அக்ரமக்காரர்களின் ஒற்றுமையைப் பாருங்கள். சிறுதேசங்கள்—அமைதியாய்க் குடித்தனம் செய்திருந்த சுதேசிகள்—தமது சுதந்தரத்தைக் கூச்சல் போடாமல் பறிகொடுக்க வேண்டும். இதில் இன்னொரு திடுக்கிடக்கூடிய ஆச்சரியம் என்ன தெரியுமா?—இந்த அக்ரமங்களுக்குக் காரணம் முசோலினியும், ஹிட்லருமாம். மற்றவர்கள் நல்லவர்கள் என்று நம்ப வைக்கிருர்கள். இதற்குப்பின் டலாடியரும், சேம்பர்லேனும் கெட்டவர்களாக இருப்பார்களாம். அப்போது விதப்படி ஹிட்லரையும் முசோலினியையும் நாம் நல்லவர்கள் என்று நம்ப வேண்டுமாம்.

பெருமக்களின் நெஞ்சம் கொதிக்கிறது உலகில்! அவர்களுக்கு மதிப்பில்லை. படைப் பலத்தால் ஆட்சிக் கர்வத்தால் அந்தச் சிறு




## பெட்ரோல் வரி

இம் மாதம் முதல் தேதியிலிருந்து பெட்ரோல் வரியும் கிரிஸ்ணாயில் வரியும் முன்னிருந்ததைக் காட்டிலும் பெட்ரோலுக்கு 0—1—6 அணாவும் கிரிஸ்ணாயிலுக்கு 0—0—6 அணாவும் லூப்ரிக் கண்ட் ஆயிலுக்கும் புதிதாக வரி போட்டு அமுலுக்கு வந்து வசூலிக்கப்படுகின்றது. ஏற்கனவே பெட்ரோல் காலன் ஒன்றுக்கு 0—6—0 அணா இருந்த வரியை டோல்கேட்டின் நீக்கத்திற்குக் காரணமாக 0—4—0 அதிகப் படுத்தி 0—10—0 அணா ஆக்கினார்கள். அந்த வரியைக் கொடுப்பதே அதிகமாக யிருக்க மீண்டும் அதன்மேல் 0—1—6 விதித்தது பொருத்தமில்லை. பர்மாவிலிருந்து இங்கிலாந்துக்குப் பெட்ரோலை எடுத்துக் கொண்டுபோய் அங்கே காலன் 1-க்கு 0—8—0 அணாவுக்கு விற்கும்படி அரசாங்கம் செய்திருக்கிறது. ஆதலால், மேல் நாடுகளில் ஒவ்வொரு அரசாங்கத்திலும் அந்நாட்டுக் கைத்தொழிலும் போக்குவரத்து சாதனங்களும் மலிவாக இருக்க வேண்டுமெனக் கருதி ஜப்பான் காலன் 1-க்கு 0—4—0 விதமும் ரஷ்யா 0—3—0 அணா விதமும் ஜெர்மனியில் 0—2—0 விதமும் பிரான்சில் 0—6—0 அணா விதமும் ஐரோப்பாவில் 0—8—0 விதமும் பெட்ரோல் விற்கப்படுகிறது. மேற்சொன்ன பணக்காரர்களும் பெருத்த லாபம் சம்பாதிக்கும் வியாபாரிகளும் வசிக்கும் நாடுகளில் குறைந்த விலையில் பெட்ரோல் விற்க, ஏழை நாடாகிய இந்தியாவில் அதிலும் ஏழ்மையே குடி கொண்ட சென்னை மாகாணத்தில் ஒரு அணாவுக்கு வாங்கும் பெட்

---

பான்மைக் காந்திகள் கம்ஸ நாடகம் போடுகிறார்கள்! திருத்தம் சொல்லப் போனால், விண்ணப்பம் கொடுக்க நினைத்தால், ஜெயிலைத் திறந்து மக்களைத் திணிக்கிறார்கள். பல்லைப் பல்லாலேயே மென்று தின்னுகிறார்கள். அவ்வளவு கோபம் வருகிறது அவர்கட்கு.

உலக மக்கட்கு — தமிழர்கட்கு நல்லதொரு நிலையை — விடுதலையை இன்பத்தை அளிக்கட்டும் பிரமாதி வருஷ வருகை!

தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! ஜனநாயகம் வாழ்க!
காந்தியம் ஒழிக!

ரோலுக்குக் கப்பல் கூலி 0—1—6 வேஸ்டேஜ் 0—1—0 கம்பெனி லாபம் 0—3—0 ஏஜெண்ட் லாபம் 0—2—0 அரசாங்க வரி 0—11—6 அணுவும் கொடுத்து பெட்ரோல் வாங்கி எப்படிக் கைத்தொழிலும் போக்குவரத்து சாதனங்களும் அயல்நாடுகளுக்குச் சமமாய்ச் செய்ய முடியும் என்பதைப் பொது மக்கள் அறியவேண்டும்.

எப்படியும் பெட்ரோல் மேல் வரி போட்டு வசூலிக்கத் தலைப்பட்டு விட்டார்கள். இதனால் லாரி சொந்தக்காரர்களும் பஸ் சொந்தக்காரர்களும் ரயில்வேக் கட்டணம் குறைவா யிருப்பதால் பெட்ரோல் விலை ஏற்றத்தின் காரணமாகத் தங்கள் கட்டணங்களை உயர்த்த முடியாமல் தவிக்கின்றார்கள். எனவே அரசாங்கம் மேற்படி பஸ் சொந்தக்காரருக்கும் லாரி சொந்தக்காரருக்கும் நஷ்டம் உண்டாகாதபடி அவர்கள் தொழிலில் பாதுகாப்பு ஏற்பார்களேயானால் ரயில்வே கம்பெனிக்கு வரி போட வேண்டும். இல்லாவிடில் ரயில்வே கம்பெனிக்குப் பெரிய சலுகை காட்டுவதாக ஏற்படும். ஆதலால், 50 மைல்களுக்குள் பிரயாணம் செய்யும் பிரயாண டிக்கட்டுகளின் மேல் ஒரு அணுவும் 200 மைலுக்குள் 0—2—0 அணுவும் அதற்கு மேற்பட்ட டிக்கட்டுகளுக்கு 0—4—0 அணுவும் கள்ளுக்கடை வரிக்கு ஈடு செய்யப் புதிய வரி போட்டால் கள்ளுக்கடை வரிக்கு ஈடுசெய்வதுமல்லாமல் பஸ் சொந்தக்காரர்களை நஷ்டமடையாமற் செய்ததுமாகும். ஆதலால், பஸ் சொந்தக்காரர்களும் மற்றவர்களும் ஆங்காங்கு கூட்டம் கூட்டி, ரயில்வே டிக்கட்டின் பேரில் வரி போடவேண்டும் அல்லது பெட்ரோல் வரியை நீக்க வேண்டும் என்ற தீர்மானத்தை அரசாங்கத்திற்குத் தீர்மானித்து அனுப்ப வேண்டும். அனுப்பியும் ஒரு சமயம் அரசாங்கத்தார் கவனியாவிட்டால் அத்தகைய அரசாங்கம் தொழிலாளிகளுக்கும் பஸ் சொந்தக்காரருக்கும் பிரயாணிகளுக்கும் எதிரான அரசாங்கமென மதிக்க வேண்டியதாய் ஏற்படும்.

இப்பொழுது நடைபெறும் வகையில் அரசாங்கத்திற்கு அபரிமிதமான பெட்ரோல் வரியைக் கொடுத்து குறைந்த கட்டணத்தில் பஸ்களை நடத்தி வர முடியாது. அப்படி நடத்தினால் பஸ் சொந்தக்காரர்கள் எல்லாம் சில நாட்களில் பெருவாரியான நஷ்டத்தையடைந்து அத்தொழிலையே விட்டு விடுவார்கள். அப்படி விட்டு விட்டால் இப்பொழுது சிலவாகும் பெட்ரோலில் பாதிக்குமேல் குறைவுபட்டு விடும். அப்படிக் குறைவுபட்டால் அரசாங்கம் 0—1—6 விதித்து லாபம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணத்திற்கு முரண்படுவதோடல்லாமல் ரோடு போடும் பணத்திற்காக வசூலிக்கும் 0—10—0 கட்டணத்தில் துண்டுவிழும். பிறகு கள்ளுக்கடைக்கு ஈடுசெய்யத் தலைப்பட்டு முதலுக்கே மோசமாய் முடியுமென்பதை அரசாங்கம் உணர்தல் வேண்டும்.

## ஹிட்லரை மக்கள் ஏன் மதிக்கின்றனர் ?

ஹிட்லரை மக்கள் மதிப்பதற்குக் காரணத்தை ஜெர்மனியி லிருந்து வந்திருக்கும் ஓர் பிரபல இஞ்சினீர் சொல்வதாவது:—

1914-ம் ஆண்டு சண்டையின் காரணமாக சிதறுண்டு கிடந்ததுமன்றி, பொருள் இழந்து உண்ண வுணவும் உடுக்க உடையு மில்லாமல் நாட்டையும் பறிகொடுத்துச் சீரழிந்து கிடந்த ஜெர்மனி தேசத்து மக்களை, முன்னேறும் ஸ்திதிக்குக் கொண்டுவந்து பிற நாட்டு மக்கள் மதிக்கும் வண்ணம் செய்ததுமன்றி, ஒவ்வொரு கிராமங்களிலுள்ள வீடுகளிலும் ரேடியோ இலவசமாய் அமைத்து, வாரம் இரண்டு முறை இலவசமாக அரசாங்கச் செலவில் பயாஸ் கோப் காண்பித்து வருவதோடுமல்லாமல், ஒவ்வொரு வீட்டு விவகாரங்களிலும் சண்டை சச்சரவுகளில் தானே சென்று சமா தானப்படுத்தி வைப்பதும், வேலையில்லாதவர்கட்கு வேலை கொடுத்து நாள் ஒன்றுக்கு ரூ. 5 சம்பாதிக்கும்படியான நிலைமையை உண்டு பண்ணுவதும், பெண்களுக்குத் தக்க வரன்களைத் தேடிக்கொடுப் பதும், புருஷர்களுக்குத் தக்க பெண்களை அமைத்துக் கொடுப்பதும் ஆகிய வகைகளில் தன்னுடைய சுகத்தையும் சௌகரியத்தையும் கவனியாமல், தன் தேச மக்களே தன் உடலாக மதித்துத் தன் உடலாகிய தேச மக்களைக் காப்பாற்றுவதிலே கவலை கொண்டு இரவு பகலாக உழைத்து வருவதால், ஜெர்மனி தேசத்து மக்கள் ஹிட்ல ரைக் கடவுளைக் காட்டிலும் ஆயிரமடங்கு அதிகமாக மதிக்கின் றனர். அவருடைய வாயிலிருந்துவரும் வார்த்தைகளை மேற்கொண்டு அதன்படியே எல்லா மக்களும் ஒழுகி வருகின்றனர் என்று சொன்னார்.

அவரைப் பார்த்து யூதர்களை ஏன் ஹிட்லர் இம்சிக்கிறார் என்று கேட்டதற்கு அவர் கூறிய பதில்:—

சண்டையால் சிதறுண்டு நாணய மதிப்புக் குறைந்திருந்த காலத்தில் ஒரு பவுனுக்கு லக்ஷம் ரூபல்சாகக் குறைத்து எல்லா சொத்துக்களையும் ஒரு பவுன் அரை பவுன் கொடுத்து வாங்கித் தங்கள் கைவசம் வைத்துக் கொண்டார்கள். பாங்குகளையும், வியா பாரங்களையும், வீடுகளையும், கைத்தொழிற் சாலைகளையும், பள்ளிக் கூடங்களையும் தங்கள் வசம் ஆக்கிக்கொண்டு அரை மில்லியன் இனத்தவருள்ள யூதர்களால் பன்னிரண்டுகோடி ஜெர்மனியர்களை இம்சித்து வந்தார்கள். சிறுபான்மையுள்ள யூதர்கள் ஜெர்மனியிற் பிரவேசித்து, ஜெர்மனியிலுள்ள பொருளை யெல்லாம் கவர்ந்து, பெரும் மக்களாகிய ஜெர்மனியரை இம்சித்து வந்தார்கள். அத்தகைய யூதர்களைப் பார்த்து ஹிட்லர் என்ன சொல்கின்றார் என்றால்;—'பிறநாட்டிலிருந்து வெறுங் கையோடு வந்த நீங்கள்

நாட்டு மக்களிடம் ஏமாற்றிச் சேகரித்த பொருளெல்லாம் எங்கள் நாட்டு மக்கட்கே உரியது. ஆதலால், நீங்கள் எப்படி வெறுங் கையோடு வந்தீர்களோ அப்படியே நாட்டைவிட்டு வெளியே சென்று விடுங்கள்' என்று கூறினர். இதைத் தவிர வேறு எவ்வித இம்சையும் யூதர்களுக்கு ஹிட்லர் செய்ததில்லை. பெருத்த ஜீவகாருண்யத்தோடு, ஹிட்லர் விரோதிகளை நாடு கடத்துகிறாரே யொழிய வேறில்லை. வேறு நாடாக இருக்கும் பக்ஷத்தில், அல்லது ஹிட்லர் இல்லாமல் வேறு எந்த ஜெர்மனியரா யிருந்தாலும் இத் தகைய பெரிய கொடுமைகளைச் செய்த ஜெர்மனியர்களை அடக்கி நசுக்கி ஆண்டுவந்த சிறுபான்மையோரை, வெளி நாடுகளிற் சென்று பிரசாரம் செய்வதற்கும், பிறநாடுகளின் அனுதாபத்தைப் பெறு வதற்கும் ஜெர்மனிமீது பழி சுமத்துவதற்கும் இடந்தராதவாறு அவர்களை வெட்டிச் சாய்த்தோ அல்லது தூக்கு மேடைகளில் ஏற் றியோ பழி தீர்த்திருப்பார்கள். அத்தகைய காரியங்களில் ஹிட்லர் தலையிடமாட்டார். அத்தகைய கடவுள் தன்மைவாய்ந்த எங்கள் ஹிட்லரை, எங்கள் உயிர்போல் நாங்கள் மதிக்கும் ஹிட்லரை, எந் நாட்டினரா யிருந்தாலும், எந்த அரசர்களா யிருந்தாலும், எவரா யிருந்தாலும் எங்கள் ஹிட்லரைக் குறை சொல்வார்களே யானல், இழித்துக் கூறுவார்களேயானல் அவருடைய நாக்கைப் பிடுங்கி உயிரையும் வாங்கப் பின்வாங்க மாட்டோம்.

ஆகவே, எங்கள் நாட்டின் நிலைமை தெரியாதவர்கள் பிறநாடு களிலிருந்து யூதர்களின் பிரசாரத்தை உண்மையென நம்பி, எங்களை இழிவாக நினைப்பார்களேயானல், அது அவர்களுடைய அறியா மையே யாகும். எங்கள் நாடு வாழ்க! எங்கள் கடவுளாகிய ஹிட்லர் வாழ்க! ஹிட்லர் வாழ்க!! ஹிட்லர் வாழ்க!!! எனக் கூறி முடித்தார்.

---

ஒரு முகமதியர் தன்னுடைய நரைத்த தாடிக்குக் கருப்புச் சாயம் தடவுகிற பழக்கம். தன்னுடைய தலை மயிருக்கு கருப்புச் சாயம் தடவாமல் தலைப்பாகையினல் மறைத்து வந்தார். ஓர்நாள் தாடிக்குக் கருப்புச் சாயம் தடவி விட்டுத் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டார். தூங்கும்பொழுது தலைப்பாகை தலையிலிருந்து நழுவி விட்டது.

பக்கத்திலிருந்த அவர் சிநேகிதர்கள்:—இதென்ன வேடிக்கை! தலை மயிர் நறைத்து வெளுத்திருக்கிறது. ஆனல் தாடி மாத்திரம் கருத்து இருக்கிறது.

முகமதியர்:—ஹோ! இது தெரியாதா? என்னுடைய தலைமயிர் தாடி மயிரைக் காட்டிலும் 20 வருஷம் மூத்தது.

—எம். கிருஷ்ணமூர்த்தி மாயவரம்

# காலிகள்

[பாரதிதாசன்]

தமிழ் நாட்டில் தமிழர்கள் எல்லாம் காலிகள், சுயமரியாதைக் காரர்கள் காலிகள், படித்தவர்கள் எல்லாம் காலிகள் ஆரியர் பஞ்சாங்கப்படி!

* * *

வட நாட்டில் வங்காளத்தில் இருக்கும் போஸ் கட்சிக்காரர் கள் எல்லாம் காலிகள். முசிலிம்கள் எல்லாம் காலிகள். ஆதித் திராவிடர் அனைவரும் காலிகள். காந்தியர்களின் அட்டவணைப்படி!

* * *

ஆந்திர தேசத்தில் ஆந்திர மாகாணம் கேட்பவர்கள் அனை வரும் காலிகள் ஆச்சாரியார் அகராதிப்படி!

* * *

இது மாத்திரமல்ல காரே போன்ற நீதிமான்கள், அவர்கள் கட்சிக்காரர்கள், எம். என். ராய் போன்றவர்கள், அவர்கள் கட்சிக் காரர்கள். சுதேச அரசர்கள், அவர்களை ஆதரிக்கும் மக்கள் அனைவரும் காலிகள் காந்தியின் ஜோதி சொன்னபடி.

* * *

திருவாங்கூர் காங்கிரஸ்காரர்கள் காலிகள், கொச்சி திவான் ஒரு காலி விகடன் திட்டத்தில்!

* * *

மறியல் செய்பவர் காலிகள், பட்டினி கிடப்பவர் காலிகள் படேல் நியாயப்படி.

* * *

வரியை எதிப்பவர்கள் காலிகள் மூர்த்தியின் எண்ணப்படி.

* * *

இந்தியை எதிர்ப்பவர் காலிகள், கொடிய சட்டங்களை வெறுப் பவர்கள் காலிகள், நீதி நிர்வாகப் பிரிவினை கோருபவர் காலிகள் ஆச்சாரியார் நீதி சாஸ்திரப்படி.

காங்கிரஸுக்கு எல்லாரும் காலிகளாய்த் தெரிவதால் இனிக் காங்கிரஸ் காலிதான்போ லிருக்கிறது.




# 'தமக்கையின் தபால்'

[R. T. I.]

அன்பகத்து நாட்டிய ராதா !

நலம். அவண் நீயும் உன் அன்பிற்குரிய பதியும் எல்லாவகை நலத்துடனுமிருக்க இறைவனை இறைஞ்சுகின்றனன். நீ எழுதிய முடங்கலில் என் புத்திமதிகளைக் கேட்டு எழுதினாய். நல்லது. எனக்குத் தெரிந்த இரண்டொரு அனுபவக் கருத்துக்களைத் தெரிவிக்கின்றனன். அவைகளைத் தீர ஆலோசித்து நடைமுறையில் காண்பிக்கவும்.

தங்காய்! நீ வீரம் செறிந்த தமிழ் நாடிடைப் பிறந்தவள் என்பதை அடிக்கடி நினைவுறுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில், பண்டைத் தமிழ்ப் பெண்களின் வீரம், கற்பு, புலமை, நாகரீகம் முதலியவைகள் எவ்வாறு சிறப்புற்றிருந்தன. அதே தமிழ் நாடிடைப் பிறந்த தற்காலப் பெண்களின் நிலைமை என்ன என்பதை அறிந்து நுண்ணறிவுடன் நடக்க வியலுமன்றோ? அதன் பயனாக பல்வேறு படையெடுப்பிற்கும் ஆளாக வேண்டி யிருக்கின்ற நாம், நம் வாழ்க்கையைக் கூடுமானவரை நலத்துடன் நடத்தவும் இயலு மல்லவா? 'யாதும் ஊரே, யாவரும் கேளீர்' என்ற பரந்த மனப் பான்மையுடன் கூடிய மக்கள் யாம். களங்கமற்ற மனத்தினை யுடைவரெல்லாம் நமது உறவினரே; நம் தம் உரிமையை நிலை நாட்ட உயிரையும் மதியோம் என்பதும் உனக்குத் தெரிந்ததுவே. நாம் பண்டைக் காலத்தில் நாகரீகத்தில் சிறந்த மக்களின் தொடர் புடையோம் என்பதினை மாத்திரம் சொல்லிக் கொள்கின்றோமே தவிர, தற்காலத்தில் நம் நிலைமை என்ன? அந்நிய நாட்டு நாகரீகத்

திற்கு வழி காட்டியாக விளங்குகின்றோமல்லவா? ஆண் பிள்ளைகளும் அப்படியே. உன் கணவனின் கொள்கை என்னவோ யான் அறிகிலேன். ஆனால் பண்டைக்கால நாகரீகத்தையும் தமிழ் மகளிர் நிலைமையையு முணர்ந்தோர் தற்காலத்தில் நலமுற வாழ்க்கையை நடத்தவியலும்.

நிற்க. உன் அண்ணியைப்பற்றி என் கருத்தைக் கேட்டாய். நம் அண்ணா B. A., வகுப்பில் படிக்கும் போதே நம் நடை, உடை, பாவனை முதலியவைகளைப்பற்றி ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பார் என்றுதான் உனக்குத் தெரியுமே. தற்பொழுதோ சொல்ல வேண்டுவதில்லை. ஏன் டிப்டிகலெக்டராக விருக்கின்றாரே என்று? இல்லை. அவருக்குக் கிடைத்த மனைவி அப்படியாக்கும். முறத்தை எடுத்து முன் கூடத்தில் கடிகாரத்தின் பக்கத்தில் வைத்திருப்பாள். சாணம் முகவாயலில் கொசுக்கள் சமேதராக வருவோருக்குத் தரிசனம் தரும். அழுக்குத் துணிகள் பல்வேறிடங்களில் பரந்து ...கும். மேசை விரிப்பின் ஒரு பாகத்தில் மையின் கரும் காட்சி, மற்றொரு பாகத்தில் விளக்குத் துடைத்த கரி, விரிப்பின்மேல் அழுக்குப் படிந்த சீப்பு, தைல பாட்டில், கிழிந்த சினிமா விளம்பரத் தாள் முதலியன ஒருங்கே சேர்ந்து காட்சி யளிக்கும். அதுதான் போகிறதென்றால், வெளியிலிருந்து வீட்டுக்கு வந்தவுடன் எனக்குத் தலைவலி, குழந்தைக்கு நீர்க் கோர்வை, மாமி பாவக்காய் கூட்டில் உப்பு இல்லை என்றார்கள், இதெல்லாம் போதாதென்றால் ‘நீங்கள் பெற்ற குழந்தை யிருக்கிறதே என்னைப் படுத்துகிற பாடு போதும், இந்தாருங்கள் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்’ என்ற பேரொலி அதுதான் தொலையட்டும் ஏதாவது புத்தகத்தை எடுத்துவா என்றால் போதுமானது. ‘தமிழரசு’ என்றால் ‘அந்த சேப்பு அட்டை போட்டிருக்கே’ அதுவா என்பள். விருந்திற்கு வேறிடங்களுக்குப் போகும் போதெல்லாம் உன் அண்ணா தனியாகத் தான் போக வேண்டி யிருக்கிறது? என் செய்வது. படிப்புத்தானில்லை யென்றால் காலத்தின் வேகத்தைப் பார்த்தாகிலும் சமயத்திற் கேற்றவாறு நடந்து கொள்ள வேண்டாமா? இத்தகைய குறைகள் உன் இலாக்காவிலேயே யிருக்காதென நினைக்கின்றேன்.

கற்பே பெண்களின் கருந்தனம் என்பதை உயிர் நாடியாகத் தமிழ் மகளிர் தன் பிறவியிலேயே கொண்டுள்ளார். தற்காலக் கல்வி பெற்றவர்களில் சிலர் பழக்கத்தின் பயனாய், தன் கணவனை எதிர்த்தும், அவனரும் கொள்கையை ஆராய்ந்து, தன் கொள்கை யாகக் கொள்ளாமலும், அச்சம், நாணம் மடமை, பயிர்ப்பு முதலிய நற்குணங்களை விடுத்தும் ‘நாகரீகம்’ என்ற போர்வையின்கீழ் மறைந்தும், வெறுக்கத் தக்க காரியங்கள் பல செய்வதைக் காண் கின்றோம். கணவன் நேரிய வழியில் செல்லுங்கால் பெண்களும்

உற்ற துணை புரிதலே சாலச் சிறந்ததாகும். நம் குலத்திலகங்கள் 'மடக் கொடியில்லா மனைபாழ்' என்ற ஆன்றோர் வாக்கின் கருத்தை மனத் திடைகொண்டு வீட்டின் விளக்கென விளங்க வேண்டு மன்றோ! நீ தற்போதிருக்கும் ஊரின் நிலைமை என்ன? 'அடுத்த வீட்டு ராஜத்திற்கு இதுவா மாசம், எதிர் வீட்டு பத்மாவை ஏன் அந்தப் புள்ளையாண்டானுக்கு கொடுக்கலாகாது, எங்க வீட்டில் இன்றைக்கு பருப்பு சாம்பார், ராத்திரி சினிமாவில் எப்படி? பார்த் தாயா, அவளை அவன் ஒரே தூக்காகத் தூக்கிக்கொண்டு போனான்' என்பன போன்ற செய்திகளைத்தானா கேட்கின்றாய். அல்லது நல் வழிக்கான அம்சமிருக்கின்றதா? என அறிய ஆவலதிகம் உடனே பதில்.

உன் நலத்தைக் கோரும்,

ரே. தி. இந்திரா.

---

## ஓர் நற்சாட்சி

இதைக் கண்ணுறும் சகோதர சகோதரிகளுக்கு தெரிவித்துக் கொள்வது. எனக்கு வயது 35. என் தலை சுமார் பத்து வருடமாக வழுக்கைத் தலையாக இருந்தது. சுமார் 4 அங்குல அகலத்திற்கு உச்சியில் வழுக்கை ஏற்பட்டிருந்தது. அதற்கு நான் கணக்கற்ற ரூபாய் செலவு செய்து வைடெக்ஸ் (Vitex) முதலான பல மருந்து களையும் உபயோகித்துப் பலன்தராமற் போய்விட்டது. கடைசியில் நக்கூர் லக்ஷ்மணன் செட்டியார் அவர்களும் மற்றும் பலரும் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களிடம் சென்று 50 ரூபாய் கொடுத்து மருந்து வாங்கி உபயோகித்து வழுக்கைத் தலையில் மயிர் முளைத்ததாகக் கேள்விப்பட்டு, நானும் சென்னை வைத்தியநாத முதலி வீதி 31-ம் நெம்பர் வீட்டிலிருக்கும் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களிடம் சென்று விசாரித்தேன். அவர் வழுக்கைத் தலையில் மயிர் முளைக்கச் செய்வதாய் உறுதி கொடுத்தார். பிறகு மருந்தை வாங்கி உபயோகித்துப் பார்த்ததில் 20 நாளில் தலை பூராவும் மயிர் முளைத்துவிட்டது. அதைக் கண்ட எனக்கு அளவில்லா மகிழ்ச்சி யுண்டாயிற்று. என் மனம் வழுக்கைத் தலையால் பட்ட கஷ்டம்போல் எத்தனையோ பேர் வழுக்கைத் தலையா யிருப்பதால் அவர்களெல்லாம் மேற்படி டாக்டரிடம் மருந்து வாங்கி உபயோகித்து தங்கள் மனக் கவலையை மாற்று வார்களென எண்ணி இதை வெளியிட்டேன்.

S. K. சாமி, மிராஸ்தார்.

# பாலனைப் பழித்தல்

[பாரதிதாசன்]

பூவோடு சேர்ந்துள்ள மணத்தைப் பிரிக்க முடியாது என்று நினைக்காதீர்கள். வண்டு இரண்டையும் தனித்தனியே பிரித்து விடுகிறது. எப்படி? வண்டு, தேனைப் பூவிலிருந்து எடுத்து விடுகிறது. அதனால் அப்பூவுக்கு மணமிருந்தும் பயனில்லை. கீர்த்தி யிழந்து போகிறது; கொள்வாரில்லாமல் வாட்ட மடைகிறது; மணம் விலகுகிறது.

சொல்லும் அதன் பொருளும் பிரிக்க முடியாதென்று கருதி விடாதீர்கள். புலவர்கள் சொல்லை எடுத்துக் காட்டி அதன் பொருளைப் பிட்டுப்பிட்டு வைத்து விடுகிறார்கள்.

உயிரையும் உடலையும் பிரிக்கத்தான் எமனிருப்பது உங்கட்குத் தெரியும். கரும்பையும் அதன் சுவையாகிய சாற்றையும் பிரிப்பது எது? ஆலை. எள்ளில் எண்ணெய் கலந்திருக்கி[illegible] அந்த ஒற்றுமை யைப் பிரித்து எண்ணெய் வேறு பிண்ணாக்கு[illegible] வாகப் பிரிப்பது செக்கு. இன்னும், பாலோடு சேர்ந்த நீரையோ எனில், அன்னம் பிரித்து விடுகிறது.

இவைகளை ஏன் சொல்லுகிறேன் என்றால்,

ஒரு மங்கை தனது காதலனோடு இன்பத்தை இடையறாது அனுபவித்து வந்தாள். ஆனால், அவள் கர்ப்பவதியாகி, ஒரு குழந்தை யைப் பெற்றெடுத்து விட்டாள். அந்தக் குழந்தை அவளுக்கு இழைத்த தீமையை என்னவென்று சொல்வது!

அவள் சொல்லுகிறாள் அந்தக் குழந்தையைப் பார்த்து,

அருமைப் பாலகனே! நானும், உன் தந்தையுமாகிய—காதலர் இருவரும் பாலும் நீருமாய் இருந்தோம். பூவும் மணமுமாயிருந் தோம். சொல்லும் பொருளுமா யிருந்தோம். உயிரும் உடம்புமா யிருந்தோம். கரும்பும் சுவையுடைய சாறுமாய் இருந்தோம். எள்ளும் எண்ணெயுமா யிருந்தோம். இவ்வாறு ஒரு மனப்பட்டு இருந்துவந்த எமக்கு நீ அன்னமும், சுரும்பும் (வண்டு) புலவரும், யமனும், ஆலையும், செக்குமாய்த் தோன்றி விட்டாய் என்று கூறுகிறாள்.

அச் செய்யுள் :

அரும்பா லகாமுனம் பூமணம் சொற்பொருள் ஆகம்உயிர்
கரும்பாஞ் சுவைஎள்ளும் எண்ணெயும் போல்ஒத்த காதலரைப்
பெரும்பாலில் நல்லன்னம் கங்காசலத்தைப் பிரிப்பதுபோல்
சுரும்பாம் புலவர் எமன்ஆலை செக்கெனத் தோன்றினையே !

இதனால் அந்தத் தாயின் மனோ பாவம் என்ன என்று எண்ணுகிறீர்கள்?

இளங்குழந்தையை உடைய அன்னை காதல் இன்பத்தைத் தற்காலிகமாக இழந்து போயிருந்தாலும் அதைவிட அப்பனைக புத்திரப் பேறு அவளுக்கு அளவற்ற இன்பத்தைத் தருகிறது—இந்த மனோபாவத்தை விளக்க வந்ததுதான் இந்தப் பாட்டு.

இவ்வித இனிய—பொருட் செறிவுள்ள கவிதை தருவதில் பலபட்டைச் சொக்கநாதப் புலவர் ஓர் உயர்நிலையை அடைந்து விடுகிறார்.

---

எஜமானி:— (வேலைக்காரியைப் பார்த்து) ஏண்டி தடிமுண்டமே குழந்தை அழுகிறது. நீ என்ன மாடி தமிழரசு புஸ்தகத்தை வச்சுண்டு வாசிக்கறே.

வேலைக்காரி:—அம்மா குழந்தை அழறதினாலே வாசிக்க முடியாமல் போயிடுமா அம்மா? —வேப்பேரி கே. பி. துரைசாமி

குற்றவாளி:—(அழுதபடி) எஜமானே! நான் ஒருநாளும் ஜெயிலுக்குப் போனதில்லையே?

நீதிபதி:—அழாதே அப்பா அழாதே இந்த க்ஷணமே உன்னை அவ்விடம் அனுப்பி வைக்கிறேன். —ஏ. ஜோசப்

ராமன்:—ஐயா மோட்டார் வண்டியை நாசமாக்குகிறீர்களே. ஒருபுறம் நீலமும் ஒருபுறம் கறுப்பு வர்ணமும் எதற்காக? பார்க்க ஒரே விகாரமாய் இருக்கிறதே.

ரங்கன்:—பைத்தியமே, பேசாதிரு. யார் மேலாவது வண்டி ஏறிவிட்டால் கோர்ட்டுக்கு போக வேண்டி வருமல்லவா? ஒருவன் வண்டி நீலமென்பான். இன்னொருவன் கருப்பென்பான் அதனால் நாம் தப்பித்துக் கொள்ளலாம். —T. S. அப்துல் ரசூல்

சைக்கிளில் வேகமாய்ப் போய்க்கொண்டிருக்கும் தன் நண்பனைப் பார்த்து,

குப்பு:—சுப்பு ஏண்டா அவ்வளவு வேகமாய் போகிறாய்?

சுப்பு:—குப்பு என் சைக்கிளில் பிரேக் இல்லை. அதனால் ஏதும் ஆபத்து ஏற்படுமுன் வீட்டிற்குப் போய் விடலாம் என்று எண்ணித்தான் வேகமாய் போகிறேன். —க. வா. மு. அப்துஸ்ஸமது

அம்பி! இந்த ஓட்டலில் எல்லாம் வெகு சுத்தமாக இருக்கும் போலிருக்கிறதே!

ஆம் சார், அதை எப்படி சார் கண்டு பிடிச்சேள்.

எதைத் தின்னாலும் சோப் வாசனை அடிக்கிறதிலிருந்து கண்டு பிடிச்சேன். —D. C. கண்ணுசாமி

# மூளைக்கு வேலை

[S. V. சிக்குராஜு]

1. ஓர் ஊரின் பெயர் முதலெழுத்தை எடுத்தால் மன்னரைக் குறிக்கும். நடுவெழுத்தை எடுத்தால் மிருகத்தைக் குறிக்கும். கடையெடுத்தை எடுத்தால் ஒரு விஷபானத்தின் பெயர்.

2. ஓர் இலையின் பெயர் முதலெழுத்தை எடுத்தால் ஈசனுர் இருந்த இடம் கடையெழுத் திரண்டை எடுத்தால் நீச்ச ஜாதி.

3. ஓர் மிருகத்தின் பெயர் முதலெழுத்தை எடுத்தால் பெண்கள் பக்குவம் அடைந்ததற்கு ஓர் குறி. நடுவெழுத்தை எடுத்தால் தெரியாத பொருளைத் தட்டி கேட்கும். கடையெழுத்தை எடுத்தால் தாவரங்களுக்கு முக்கிய உணவு.

4. ஒன்றும் முக்காலும் தையும் சேர்ந்தால் ஓர் மிருகத்தின் பெயர்.

5. பூலோகத்தில் கல் ஐந்துண்டு. பூமியிலும் ஆகாயத்திலும் இரண்டே யாகும். மானிடர் நெஞ்சில் ஒன்ருகும். வகையுடன் கரந்தனில் இரண்டே யாகும்.

6. ஏழும் ஐந்தும் மையும் சேர்ந்தால் ஓர் மிருகத்தின் பெயர்.

7. சிசுக்களைக் குறிக்கும் முதலெழுத்தை எடுத்தால் மனிதனின் ஓர் அவயவம். நடுவெழுத்தை எடுத்தால் ஓர் பர்வதத்தைக் குறிக்கும்.

8. ஓர் பெண்ணின் பெயர் நடுவெழுத் திரண்டை எடுத்தால் தைக்கும் பொருள். முதலெழுத்திரண்டை எடுத்தால் ஓர் ஆயுதம் கடையெழுத் திரண்டை எடுத்தால் மனிதர் வசிக்கும் இடத்தை குறிக்கும்.

9. நீர் நிலையின் பெயர் நடுவெழுத்தை ஒழித்தால் தலை காக்கும். முதலெழுத்திரண்டை ஒழித்தால் நாகரீகர் அணியும் பட்டை. கடை யெழுத்தை இரண்டை ஒழித்தால் வேற்றுமை உருவு.

10. தானத்தின் பெயர் முதலெழுத்தை ஒழித்தால் மனிதனின் ஓர் பாகம். கடையெழுத்தை ஒழித்தால் ஓர் பிராணியின் பெயர்.

11. படிப்பின் பெயர் முதலெழுத் திரண்டை எடுத்தால் ஓர் திங்களின் பெயர். நடுவெழுத்தொன்றை எடுத்தால் தானியத்தின் பெயர்.

12. தவசியின் பெயர் முதலெழுத்தை கடைசியில் வைத்தால் நகைப்புக்குப் பெயர். கடை யெழுத்தை முதலில் வைத்தால் துறவரத்தை அடைந்ததைக் குறிக்கும்.

(விடை அடுத்த இதழில் வரும்)

# சிங்கவனம் சிங்கங்களுக்கே!

[சிங்கை ந. ரே. முத்துகிருஷ்ணன்]

ஒரு காட்டில் நெடுங் காலமாய் சிங்கங்கள் மாத்திரம் வசித்து வந்தன. அதனால் அக் காட்டிற்கு 'சிங்கவனம்' எனப் பெயர் வழங்கிற்று. இப்படியே பல காடுகளிலும் மற்ற மிருகங்கள் வசித்து வந்தன. இந்தக் காடுகளிலெல்லாம் சிங்கவனமே வளமிருந்து காணப்பட்டது, ஆதலால் எல்லா மிருகங்களும் சிங்கவனத்தின்மேல் கண் வைத்திருந்தன.

இவ்வாறு இருக்கையில், நரிகளின் காடு மழையின்றி வரண்டு விட்டன. பஞ்சம் மிகுந்தன. நரிகள்கூடி சிங்கவனத்திற்குப் போவதாக முடிவு கட்டின, அவ்வாறே சிங்கவனத்திற்குள் புகுந்து உறவு கொண்டாடின, நாங்கள் உங்கள் பரம்பரை, ஒரு முறைக்குப் பார்த்தால், உங்கள் அண்ணன்! ஏதோ கால வித்தியாசத்தால் பிரிந்திருக்க நேரிட்டது. நாம் இருவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளை நாம் நமது தகப்பனை மறந்தோம். நமது குலஆச்சாரத்தை மறந்தோம். இனியாவது ஒற்றுமையுடன் வாழ்வோம். ஆனால் மூத்த பிள்ளையாகிய எங்களுக்குச் சகோதர வாஞ்சை நீங்கள் காண்பிக்க வேண்டும். நாங்கள் அதிலிருந்து சில உண்மைகளை உங்களுக்குப் போதிப்போம். அதைக் கண்டறிந்து விட்டால் சாகாவரம் பெற்றுச் சிறஞ்சீவியாய் வாழலாம், பகைவரை வெல்லலாம். இகபரம் பெறலாம். இப்படியாக, நயவஞ்சகமாய்க் கூறியதில், ஏமாந்த சிங்கங்கள் மதிமயங்கி அன்புடன் அழைத்து, மரியாதை காட்டி அன்று முதல் நரிகளின் சொற்படி நடக்க ஆரம்பித்தன.

இவ்வாறு பல வருடங்கள் கடந்தன. பின்பு 'சிங்கவனம்' நரிவனமாயிற்று, நரிகளுக்குப் பெருமைகள் அதிகமாயின. சிங்கங்கள் உழைத்து நரிகளுக்குப் போட்டுத் தாம் பட்டினி கிடந்து திருப்தி அடைந்தன. கொழுத்துப் பருத்து இருந்த சிங்கம் வற்றி வடிந்து போய் நாறும் தோலுமாக ஆயின, நரிகள் உண்டு பருத்துக் கொழுத்தன. ஆதலால், நரிகள் சிங்கங்களாகவும், சிங்கங்கள் நரிகளாகவும் மாறின. நரிகள் தாராளமாய் சிங்கங்களின் முதுகில் சவாரி விட்டன. இதனால் நரிக் குலம் கொழுக்கவும் சிங்கக் குலம் உழைக்கவும் ஆயிற்று!

சிங்கங்கள் தமது வீர கர்ஜனையைவிட்டு நரிகள் மாதிரி ஊளையிட ஆரம்பித்தன. ஊளையிடுவதில் பெருமை கொண்டன. நரிகளுக்கு உழைப்பதைப் புண்ணியமாகக் கொண்டன. இவ்வாறு பல வருஷங்களில் சிங்கத்தின் வீர வாழ்வு குன்றி, சீரழிந்து கெட்டுப் பாழாய் முடிந்தது. ஒற்றுமை குலைந்தது. பல்வேறு இனங்களாய்ப் பிரிந்து ஒற்றுமையின்றிச் சிதறுண்டு கிடந்தன.

இக்காலை, மேலைக் காட்டுப் பூனைகள் இச்செய்தி கேள்வியுற்று,

இதுதான் சமயமென ஒரு படை திரட்டிக் கொண்டுவந்து போர் தொடுத்து வெற்றி பெற்றன. காடு பறிபோனதைப்பற்றிய கவலே சிங்கங்களுக்கு இல்லே, நரிகளுக்குத் தொண்டு செய்வதே பெரி தென மதித்தன. காடு பூனே வசம் ஆயின. இதுகாலே நரிகளுக்கும் பூனேகளுக்கும் சிங்கம் பணிய நேரிட்டது, இந்த இரு பிராணியும் ஒன்று கூடின, சிங்கங்களே அடிமை கொண்டன. கஷ்டப்படுத்தின இந்த மாதிரி சில வருடம் கழிந்தது: சிங்கங்களுக்குக் கஷ்டம் அதிகரிக்க ஆரம்பித்தது கஷ்டம் தாங்காது விழித்தன. இவ்வளவு பொறுமையோடிருந்த சிங்கக் கூட்டத்தில் ஒரு கிழச் சிங்கம் வீறு கொண்டெழுந்து மற்றச் சிங்கங்களேத் தட்டி எழுப்பிற்று. நாங்கள் சிங்கக் கூட்டம் இது எங்கள் காடு. எங்கள் சிங்கவனம் எங்க ளுக்கே சொந்தம். 'சிங்கவனம் சிங்கங்களுக்கே' என ஆர்ப் பரித்தன! முரசு கொட்டின! இடி முழக்கம் செய்தன! சாது மிரண்டால் காடு கொள்ளுமா? இதைக் கண்டு, பூனேயும் நரியும் திகைத்தன. இவ்விரண்டும் எதிரிடையாக ஊளேகள் இட்டன. ஆனல், பலிக்கவில்லே. பூனேகள் ஓட்ட மெடுத்தது, நரிகள் பணிந்தன. மன்னிக்கப்பட்டது கடைசியில் 'சிங்கவனம் சிங்கங் களுக்கே' ஆயிற்று.

நண்பர்களே! ஏன் இந்தக் குழந்தைக் கதையைச் சொன்னே னென்றல், தமிழர்களின் வாழ்வு குழந்தைக் கதையாகவே முடிந்தது. ஆனல் இன்று, ஒரு சிங்கம் 'தமிழ் நாடு தமிழருக்கே' என்ற மந்தரத்தை உச்சாடனம் செய்தது. அதைப் பின்பற்றி தமிழ் நாடு மூலே முடுக்கிலெல்லாம் வீர ஒலி கிளம்பிற்று. தமிழர் கடல்போல் கிளம்பினர். முரசடித்தனர். இம்முரசு ஒலி, கடல் கடந்த தமிழரின் உள்ளத்தைத் துளேத்து ஊடுருவிப் பாய்ந்து, வீர சக்திக் கனலே எழுப்புகிறது. எதிரிகள் வழி தெரியாது ஓலமிட ஆரம்பித்து விட்டார்கள். இந்த ஓலத்தையும் கண்டு சில பேடிகள் எதிரிகளுக்குத் தாளம் போடுகின்றனர். ஏன்? தமிழ் நாட்டில் வயற்றுக் கூலிகளும், பணவாசை கொண்ட காலிகளும் நிறைந்த நிலேயே தமிழரின் வீர வாழ்வு குன்றிப் போயிற்று. இதைத் தான் ஒரு கவி.

'விண்முட்டிச் சென்றபுகழ் போச்சே—நாங்கள்
மண்வெட்டிக் கூலிதினல் ஆச்சே'

என்று உரைத்தனர். தமிழா! வீறு கொண்டெழு! தமிழ் நாடு தமிழனுக்கே! என்ற மந்திரத்தை உரை! தமிழ் நாட்டில் மற்றவ னுக்கு உரிமை இல்லே என வீர கர்ஜனே செய். சுயநலம் கருதிக் காட்டிக் கொடுக்கும் தன்மையை விடு, ஆண் சிங்கமென நில்! உறுதியுடன் உழை! தமிழ் நாடு தமிழருக்கே! தமிழர் வாழ்க! தமிழ் நாடு வாழ்க!! தமிழ் வாழ்க!!!

# துண்டுவிழும் பணத்திற்கு வருமானம்

அறிவிற் சிறந்த கனம் பிரதம மந்திரியார் அவர்களே? தாங்கள் நடத்திவரும் அரசாட்சியில் பல மக்கள் மனக் கசப்பை அடைந்திருக்கின்றனர் என்பதைத் தாங்கள் உணர்ந்திருக் கின்றீரல்லவா? தாங்கள் சட்டசபைக்குச் சென்று காங்கிரஸ் கக்ஷியின் பேரால் பொதுமக்களுக்கு நன்மையைச் செய்வதுடன் ஆங்கில அரசாட்சிக்கு முட்டுக்கட்டை போடவேண்டும் என்ற திட்டத்துடன் சட்டசபைக்குச் சென்ற தாங்கள் இன்று பெருவாரி யான மக்களால் வெருக்கத் தக்கவராய்க் காணப்படுகின்றீர்கள். தங்களை வெருப்பதோடு நில்லாமல் தங்கள் இனத்தையும் வெருத்து வேறு பிரிக்க நினைக்கும்படி தாங்கள் காரியத்தை இஷ்டம் போல் நிகழ்த்தி வருகின்றீர்கள்.

ஒரு சமயம் தாங்கள் செய்வதெல்லாம் மக்கள் நன்மைக்கே என்று நீங்கள் நினைக்கலாம். (பொது மக்களைக் குழந்தைகளாக பாவித்து) பொது மக்களின் எதிர்ப்பையும், கசப்பையும், கூப்பாட்டையும், கண்ணீர் வடித்தலையும் பொருட் படுத்தாமல் உங்களிஷ்டப்படி வரிகளைப் போட்டும், ஜெயிலுக்கு அனுப்பி யும் எதேச்சாதிகாரமாய் அரசை நடத்தத் தங்கள் மனம் உறுதி கொண்டிருக்கலாம்.

அப்படி நினைத்திருப்பின் தங்கள் அறிவை பிடிவாத குணமுள்ள மூர்க்க அறிவு என்றே மக்கள் நினைப்பர்.

தாங்கள் கள்ளுக் கடைச் சாராயக் கடைகளை எடுத்து விடுவ தால் உலகத்திற்கு பெரிய வேலையை (அமெரிக்காவில் செய்ய முடியாததை) செய்துவிட்டதாக ஏற்படும் என்ற எண்ணத்தால் வேலை செய்வீர்களேயானால் அதை அனைவரும் போற்றுவர்.

அப்படியானால் நல்ல காரியம் செய்வதற்கு அதனால் உண்டா கும் நஷ்டத்திற்கு மக்கள் ஈடுசெய்துதானே தீரவேண்டும்? எந்த வரி போட்டாலும் எதிர்த்துத்தான் பேசுவார்கள். எப்படி காரியம் நடைபெறும் என்று தாங்கள் நினைத்துக் கள்ளுக் கடைச் சாராயக் கடைகளை எடுப்பதால் $4\frac{1}{2}$ கோடி துண்டு விழுவதால் அதற்கு ஈடுசெய்ய வேண்டியதை வற்புறுத்தி பேசி வருகிறீர்கள்.

தாங்கள் அரசை நடத்தும் வகையில் அனுபவம் பெற்று திறமையாளராய் இருந்தால் கள்ளுக் கடைச் சாராயக் கடைகளை எடுப்பதற்கு முன்னமேயே துண்டு விழும் பணத்திற்கு புதிய வரி விதிக்காமல் ஈடுசெய்ய திட்டம்போட்டு வேலை செய்திருக்க வேண்டும். அப்படிக்கின்றி அவசரமாய் முன் யோசனையின்றி இறங்கினீர்கள். இறங்கியபின் துண்டு விழும் பணத்தைச் சரிகட்டத் தங்கள் மூளை பயன்தரவில்லை. அதற்கு மாறாக கைதூக்கும்

சகாக்களின் பலத்தால் அளவுக்கு மீறிய பித்தம் தலைக்கேறி பொது மக்களையும் அவர்களின் கூப்பாட்டையும் கவனி யாமற் தங்களிஷ்டப்படி வரி போட்டுக்கொண்டே போகிறீர் கள். அத்தகைய மூளையைக்கொண்ட உங்களுக்கு நாங்கள் என்ன சொன்னாலும் ஏறாது. ஆதலால் தயவு செய்து காலையில் எலுமிச்சம் பழச் சாறும், அகத்திகீரைச் சாறும் சமன் கூட்டி தலையில் தேய்த்துத் தண்ணீரை 20 குடம் தலையில் கொட்டிக்கொண்டு 40 நாள் கழிந்தபின் கீழே சொல்லும் அறிவுறுத்தலை ஊன்றி நோக்கி பொதுமக்களிடம் செல்வாக்கைப் பெற்று நாட்டுக்கு நன்மையைச் செய்ய முயல்வீராக?

தாங்கள் பல பல புதிய வரிகளைப்போட முற்பட்டதற்குக் காரணம் லாகிரி வருமானம் 4½ கோடி குறைவு ஏற்படுவதை ஈடு செய்யும் பொருட்டேயல்லவா ?

வரி போடாமல் ஈடுசெய்ய மார்க்கமுண்டு. அவற்றை வரிசைக் கிரமமாக சொல்லுகிறேன் கேளும் ?

1. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வேலை செய்வதற்காகத் தக்க சம்பளம் அரசாங்கத்தில் வழங்கப்படுகிறதல்லவா? அத்தகைய அவர்களுக்கு பாட்டா, வீடு அலவன்சு, மோட்டார் அலவன்சு, ரயில் அலவன்சு ஆகிய வகையில் செலவழிப்பதை நிறுத்தினால் 2½ கோடி மிச்சம் ஏற்படுகிறது.

2. மின்சார சப்ளையை கவர்ன்மெண்டு 6 பைக்கு பிரைவேட் கம்பெனிகளுக்குக் கொடுத்து 2 பை செலவு போக 4 பை லாபம் அடைகிறது. கண்டிராக்டர்களாகிய கம்பெனிகள் பொது மக்களி டம் 4 அணு சென்னையிலும், 5 அணு வெளியிலும் வசூலிக்கின்றன. அதனால் கோடிக் கணக்கான பணம் மத்தியிலிருக்கும் லிமிடெட் கம்பெனிகள் லாபம் சம்பாதித்து இங்கிலாந்திலிருக்கும் பங்குதாரர் களுக்கு லாபம் கொடுத்து வருகின்றது. அல்லது இந்தியாவி லிருக்கும் பங்குதாரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப் படுகிறது. இம் முறையால் மத்தியிலுள்ள கம்பெனியாகிய வியாபாரிகள் 3 அணு முதல் 4 அணு வரையில் யூனிட் ஒன்றுக்கு லாப மடை கின்றன. மின்சாரத்தை உற்பத்தி செய்யும் அரசாங்கமோ 4 பை லாபத்தைத்தான் பார்க்கின்றது. ஆதலால் கண்டிராக்ட் முறையை நீக்கி அரசாங்கமே மின்சார சப்ளையை நேராக செய்யும் பட்சத்தில் 4 கோடி ரூபாய் மிச்சம் கிடைக்கின்றது.

3. காட்டிலாக்காவானது 1932-வது ஆண்டுக்கு முன் கலெக்டர் வசம் இருந்து வந்தது. அதனைத் தனியாகப் பிரித்து விட் டால் காட்டிலாக்காவில் அதிக வரும்படி வரும். தவிர நம் நாட்டில் காடு வளர்ச்சியில் மழை தவராமலும் பேயும் என்று சொல்லி அதனைப்

பிரித்து தனியாகப் பார்த்து வருகின்றனர். அதனால் $3\frac{1}{4}$ கோடி செலவானதுதான் தெரிகின்றதே யொழிய எவ்வகையிலும் காட்டிலாக்காவால் லாபம் கிடையாது. ரிசர்வ் அல்லாத காட்டின் வரும்படியையும் சேர்த்துக் காட்டும் கணக்கால் நஷ்டமில்லாத வகையில் பட்ஜட்டைத் தயாரித்தாலும் பழைய மிச்சம் இல்லை. ஆதலால் முன்போல் மேற்படி இலாகாவைக் கலெக்டர் வசம் ஒப்படைத்தால் $1\frac{1}{2}$ கோடி மிச்சப்படும்.

4. கவர்னர் அரசாட்சி நடத்திய காலத்திலே ரெவினியூ போர்டு செக்ரிடேரியட் ஆபீஸை வைத்துக்கொண்டு எல்லா வேலையும் நடத்தப்பட்டது. இப்போது 10 மந்திரிகளும் அதற்கு வேண்டிய ஆபீஸ் சிப்பந்தி முதலானவர்களையும் வைத்துக்கொண்டு மேல் சொன்ன ஆபீசில் செய்த வேலைகளை செய்து வருவதால் இந்தக் காலத்தில் ரெவினியூ போர்டும் செக்ரிடரியட்டும் அவசியமில்லாததால் அந்த இரண்டு டிபார்ட்மெண்டுகளை எடுத்து விடுவதால் குறைந்தது 5 லக்ஷம் ரூபாயாவது மிச்சப்படும்.

5. 1912-வது ஆண்டுக்கு முன் சகல உத்தியோகஸ்தர்களின் சம்பளமும் குறைவாக இருந்தது. போலீஸ்காரருக்கு 8 முதல் 15-ம் கிளார்க்குகளுக்கு 15 முதல் 20 ரூபாயும் ஆரம்பச் சம்பளம் இருந்தது. அதுபோலவே மேல்உத்தியோகஸ்தர்களின் சம்பளமும் இருந்தது. 1914-ம் ஆண்டு நடந்த சண்டை காரணமாக சாப்பாட்டுச் சாமான்கள் விலை ஏறிவிட்ட காரணத்தால் சம்பளங்களை இரண்டு பங்கு உயர்த்தப்பட்டது. ஆனால், இதுசமயம் 1912-வது வருஷத்தில் விற்ற விலைகளுக்கு எல்லாச் சாமான்களும் இறங்கி யிருப்பதால் 50 பாகம் உயர்த்திய சம்பளத்தில் 25 பாகமாவது குறைத்துவிட்டால் 2 கோடி ரூபாய் மிச்சமாகும்.

6. சட்டசபையில் இருக்கும் 215 அங்கத்தினர்களும் ஆயிரக்கணக்கில் செலவு செய்து தேர்தலில் வெற்றி பெற்றவர்கள். அவர்களில் ஒருவராவது சம்பளம் கேட்டவரல்லர். அப்படி யிருக்க இத்தகைய நெருக்கடியான சமயத்தில் அனுவசியமாய் கைதூக்கும் காரணத்திற்காக பேச்சுரிமையற்று கட்டுப்பாடு என்னும் கயற்றால் கட்டுண்டவர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தை நிருத்தினால் 3 லக்ஷ ரூபாய் மிச்சப்படும்.

7. 1911-ஆம் ஆண்டு சென்னை அரசாங்கத்தில் திவான் பகதூர் வி. மாசிலாமணிப் பிள்ளையை நியமித்து கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களின் சம்பள நிர்ணய கமிஷன் ஒன்றை ஏற்படுத்தி ஒரு ரிபோர்ட்டு தயார் செய்யப்பட்டது. அந்த ரிபோர்ட்டில் ஐகோர்ட் பிரதம நீதிபதிக்கு 1000 ரூபாய் மற்றவர்களுக்கு 100 குறைத்து சம்பளம் கொடுக்கலாம் என்றும் அதை

அனுசரித்தே சகல உத்தியோகஸ்தர்களின் சம்பளமும் 500-க்குக் குறைவாக இருக்கலாம் என்றும் மற்ற எல்லா நாடுகளிலும் இந்தியாவில் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் கொடுக்கப் படவில்லை என்று சொல்லி அந்தக் காலத்தில் இந்தியாவில் கொடுத்து வந்த அதிகச் சம்பளத்துக்கு யாது காரணம் கூறப்பட்டதென்றால் எல்லா சிவிலியன்களும் இங்கிலாந்திலிருந்து கொண்டுவரப்பட்டு வந்ததால் அதிகச் சம்பளமின்றி திறமைசாலிகளை வரவழைக்க முடியாது என்ற காரணம் காட்டி என்னாட்டிலும் கொடுக்காத அளவு சம்பளங்கள் கொடுக்கப்பட்டது. இது சமயம் நம் நாட்டில் மலிவாய் உத்தியோக லாயக்கானவர்கள் கிடைக்கப்பட்ட காரணத்தை முன்னிட்டு குறைந்த சம்பளம் இன்னாட்டிற்கு போதுமானது என்ற காரண காரியத்தோடு எழுதிய ரிபோர்ட்டு அமுலுக்கு வராமல் செய்யப்பட்டு விட்டது. அந்த ரிபோர்ட்டு மிகவும் பொருத்தமானது. எனவே அதன்படி பெரிய உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தை நிர்ணயித்தால் 1 கோடி ரூபாய் மிச்சப்படும். ஆக இவ் வழிகளில் உங்கள் மூளை வேலை செய்தால் நாட்டுக்கு நலன் தருமே? அதை விடுத்து துண்டு விழும் பணத்திற்கு என்ன செய்வது என்று கேட்பதும் பொது ஜனங்கள் இந்த வரி வேண்டாம் அந்த வரி வேண்டாம் வேறு வழி தேடுங்கள் என்று சொல்லுவதும் வியப்பாகக் காணப்படவில்லையா?

---

இனம்! இனம்!! இனம்!!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் எழுதிய

**அனுபவ வைத்திய நூல்**

**பழைய இரண்டாம் பாகம் இனம்**

வேண்டுவோர் 4 அணா தபால் தலை (ஸ்டாம்பு) அனுப்பினால் புத்தகம் புக் போஸ்டில் அனுப்பி வைக்கப்படும்.

---

**‘தமிழரசு’ பைண்டு வால்யம்**

**4-வது மலர்**

12 மாத சஞ்சிகைகளையும் ஒன்று சேர்த்து மிக அழகாக பைண்டு செய்திருக்கிறது. வேண்டுவோர் 12 அணா தபால் தலை (ஸ்டாம்பு) அனுப்பினால் 1 புஸ்தகம் அனுப்பி வைக்கப்படும்.

வெளி நாடுகளுக்கு மாத்திரம் 1 ரூபாய் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

**‘தமிழரசு’ புத்தகாலயம்,**

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# இனியாள்

[தமிழன்]

மாலை வேளைக்கே ஒரு தனிச் சிறப்பு உண்டு. காலையில் உதிக்கும் சூரியன் தனது வெப்பத்தை மேலும் மேலும் மிகுத்துக் காட்டும் முற்பகலின் கடுமை தணிவது அப்போது தானே. அதிலும் கதிரவன் குடதிசையில் மலைவாயில் மறையும் காட்சியோ அம்மம்ம! இரு விழிகளின் விருந்தாய்த் திகழும். எங்கும் பொன்னை உருக்கி வார்த்தாற் போன்ற இளங் கதிர் ஒளி; வானில் இங்கும் அங்குமாக மேகத் தொடர்புகள்; யாதொரு பேதமுமின்றிச் சீதளம் விரவி வீசுந் தென்றல்; கூட்டங் கூட்ட மாகப் பறந்தேகும் பட்சிகளின் பரபரப்புக் கலந்த பரிவுமிக்க பகரொலி.

இத்துணையும் சிறந்த நேரத்தில் ஆற்று ஓரத்தில் சாந்தாகாரத் தில் செவ்வெனத் தோன்றி வெள்ளெனத் தழைத்துப் பச்செனச் செறிந்து அரும்பு, பூ, பிஞ்சு, காய் முதலியவைகளைத் தாங்கி 'சொல்லிச் செய்யு'மவர்போலச் சொகுசாய்த் திகழும் மாமரத்தின் கீழ் பரந்திருந்தது வெண்மணல்.

பஞ்சாலாகிய படுக்கையில் பட்டுடுத்துப் படுத்திருக்கும் பதுமினி மாதேபோல, தன் இடது கையை முட்டுக் கொடுத்துத் தலையைத் தூக்கி இடதுபுறம் திரும்பிப் படுத்திருந்தாள் ஒரு நங்கை. அவள் பதினறுவயதுடையவள். பரந்த விழியும் சிறந்த தோற்றமும் இளவழகும் வாய்ந்தவள். மாணிக்கத்தை மாசு மூடியதைப்போல அவள் உடலை மலின ஆடை மறைத்திருந்தது.

அவள் முகம் சிறிதே வாடியிருந்தது. மனம் பலதிசையிலும் ஓடுவதை அது காட்டிற்று. தாமரையில் ஊறும் தேன் துளி போன்று கண்களிலிருந்து நீர்த் துளிகள் அரும்பிக்கொண் டிருந்தன. அந்நிலையில் அவள் வாய்மலர்ந்து மெல்லென்னும் ஓசை யால் சில்லென்னும் இசைகூட்டி, கல்லென்னும் மனதையும் உருக்க வல்லவாறு,

ஆறாத இன்பத்தேன் அவனு யிருக்கையிலே
மாறான முகங்களினால் மனமகிழ்ச்சி யரும்புவதோ
உள்ளந் தனைக்கவரும் உத்தமனைக் காணாமல்
வெள்ளத் துயர்க்கடலில் வீழ்ந்தனையால் என்னெஞ்சே
மந்த மாருதமே மலர்க்காவே மாமுகிலே
சந்தம் பயில்குயிலே சந்தேகி மீளீரோ.

என்று பாடிக்கொண் டிருந்தாள். மனதில் துன்பம் வளர்வது போலவே விரைவில் இருளும்வரும் எனக் கண்டாள். எழுந்தாள்;

சுற்றிலும் பார்த்தாள். பயன் காணமல் பரிவு கூர்ந்தாள். பாதங்களின் விருப்பமின்றியே பக்கத்திலுள்ள மாஞ்சோலையை நோக்கி நடந்தாள்.

நடப்பவள் திடுக்கிடும்வண்ணம் சிறிது தூரத்திலிருந்து ஒரு குரல் அம்மா என அழைத்தது.

அதைக்கேட்டுத் திடுக்குற்ற இனியாள், எறிட்டுப் பார்த்து அசைவற்று நின்ருள். சொல்லே பாதி உயிரை யளித்தது. அவன் முகத்தில் அன்பும் உண்மையும் தாண்டவமாடுவதைக் கண்ட இனியாளுக்கு இனி அச்சமிருக்குமா? நல்லோர் வரவால் நகை முகங்கொண்டு இன்புறீஇ, திருந்துந் தளிர்காட்டி நிற்கும் அத்தே மாவின் கீழே நின்ருள். நன்கு கவனித்தாள். அழைத்தவன் யாவனுயினும் ஆகுக. இன் சொல்லனும் தாழ்நடையனுமாயுளான் ; ஆதலால் வினவுதற்குரியன் என வாழிய ஆண்தகையே என்றுரைக்க விரும்பினுள்.

ஆயினும் அமைதியற்றிருந்த அவளுள்ளம் அதற்குள் அத்துணை தெளிவு பெற்றுவிடுமா? விரைந்து வாயைக் கட்டியது. தான் முந்துற்று எதிரில் தோன்றியவன் யாவன் என ஆய்தலே மேற்கொண்டது. முற்றும் உற்றுநோக்கிச் சற்றே தெளிந்தது. நடையாலும் உடையாலும் நவீனத்தில் கலந்துளான்; மொழியாலும் விழியாலும் அமுதம் சொரிகின்ருன்; இயலால் என்னதாகிய இந்நாட்டவனே போன்றுளான் என்றறிந்தது. பின்வாய்க்கு விடையளித்தது. வாயும் 'வருக' என வழி மொழிந்த அண்மிவந்த ஆண்தகையை, அன்புருவை, இனியாள் கண்டாள். இனி ஐயமில்லை; இவன் தமிழனே. எனத் துணிந்தாள். சிறிதே தலை நிமிர்ந்தாள் ; மொழிக்கு முன்னரே விழிநீர் பெருக்கினுள் ; விம்மினுள் ; வெய்துயிர்த்தாள் ; வேர்த்தாள் ; விதிர்ப்புற்ருள். அந்த நிலையில் அவள்,

இழந்தமணி புற்றர வெதிர்ந்த தெனலானுள்
பழந்தனம் இழந்தன படைத்தவரை ஒத்தாள்
குழந்தையை உயிர்த்தமல டிக்குவமை கொண்டாள்
உழந்துவிழி பெற்றதொர் உயிர்ப்பொறையும் ஒத்தாள்.

ஆகிய சீதையின் மறுஉரு தோற்றினுள்.

இந்நிலை யடைந்த இனியாளைக் கண்ட தமிழன். அம்மையே உன்னைக் கண்டால் உளங் கொள்ளாவகை உறுகண் அடைந்திருக்கிருய் என நினைக்கிறேன். நீ யார் என்பதை ஈனுகிய யான் அறிதல் முறையோ ?

இனி:—ஐயா, அறிவதில் தடை இல்லை. ஆனுல், அறிந்துதான் ஆவதென்ன! வீண்பாடே.

தமி:—இல்லை. என்னால் உனக்கு ஏதும் உதவ இயலாதாயினும் உண்மையறிய விருப்பம்.

இனி:—ஆனால், அதை ஒளியேன். கூறுகிறேன். என் உடல் உறுதியற்றுளது. உட்கார்ந்த பின்னரே உரைக்கின்றேன். எனக் கூறி அவ்விடத்திலேயே கிடந்த ஓர் கற்பாறைமீது இருந்தாள். கண்கவர் கவினையுடைய காரிகையாகிய இனியாளின் எதிரில் இருந் தான் தமிழன்.

இனி:—ஐயா, நான் முன்னொரு காலத்தில் முடியணிந்து ஆட்சி புரிந்த அரசி.

தமி:—அப்படியா! ஆனால், இப்போது........

இனி:—அரசியாயில்லை; அடிமை. அது மாத்திரமா? ஆ! நான் உற்றிருக்கும் உறுகண்.

[கண்ணீர் பெருக்கிக் கதறுகிறாள்]

தமி:—அன்னையே அந்நாள் அரசு புரிந்த உனக்கு, இந்நாள் எய்திய இடர் யாது?

இனி:—இடரா? இயம்பவா? வீழ் நிலைதான்.

தமி:—வீழ் நிலைக்குக் காரணமுண்டோ?

இனி:—எதற்கும் காரணம் இல்லாமற் போகுமா?

தன்னுயுதமும் தன்கைப் பொருளும்
பிறன்கையிற் கொடுத்ததுதான்.

தமி:—தாயே வருந்தாது வழுத்துக. உனது பிறப்பு முதலியன யான் அறிதல் தகுமோ?

இனி:—தகும்; தகும்; தடையில்லை கேள்.

மலையத்தில் பிறந்தேன்; பாண்டியன் கீர்த்தியிற் கிடந்தேன்; சங்கப் பலகையில் அமர்ந்தேன்; வையை நதிநீரில் தவழ்ந்தேன்; நெருப்புக்கும் தப்பினேன். ஆனால் இந் நாள் வஞ்சகத்தில் வாழ் விழந்து விடுவேன் போலும்.

தமி:—ஆ; அன்னையே! நீதானா! என் தாய்! இனியாள்! ஆம், இனியாள். [அழுகிறான்; விழுகிறான்; தொழுகிறான்; மீண்டும் எழுகிறான்.] அம்மா! அம்மா! உன் பொலிவென்ன! பொன்மை யென்ன! பொன்றாத பொருட்பேறு என்ன! ஆம், ஆம் நான் உண்மையில் உன் பொலிவைக் கண்டவனே. ஆனால், இன்று உன்னை அறியும் நிலையற்றதே.

இனி:—ஆஹா, நீ, நீ என் மைந்தனா? உண்மையிலா. ஆயின் உன் வீரம் எங்கே. உணர்ச்சி எங்கே அழாதே.

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்.

என்பதை எண்ணிப்பார். உன் உண்மைத் துணைவர் எங்கே?

தமி:—அம்மா, உன்னை இந்நிலையில் கண்டும் நான் உயிருடன் இருக்கின்றேனே. பாவி, நான் பாவி. வீணன். பதர். ஆம்; பதர்.

இனி:—மைந்தா, மனந் தளராதே. மீண்டு செல். வேண்டுவன செய். ஊக்கம் மதுகை இரண்டையும் விடாமல் உழைக்க முற்படு.

தமி:—தாயே. நல்லறிவு நல்கினை. இனித் தாழேன்; மெய்யறிவு பெற்றேன். உன் மெலிவுக்குக் காரணத்தைக் கண்டு கொண்டேன்.

இனி:—கண்டாயா? உண்மையாகவா! ஆனல், எனக்கு நன்மை யுண்டாகும் என்பதில் ஐயமில்லை. ஆயினும் அருமை மகனே, நீ கண்ட உண்மை யாது? எடுத்தியம்பு.

தமி:—கூறவா,

உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்த னாகி—நடக்கையில்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்.

என்றவாறு நிகழ்ந்து விட்டது.

இனி:—ஆம். மெய்; மெய். மேல் நடக்க வேண்டியதையும் அறிந்திருப்பாய்.

தமி:—ஆம். அதையும் அறிந்தேன். கொள்ளியைப் பிடுங்கினல் குறும்பு குன்றும்.

இனி:—மெய்யறிவு பெற்ற மைந்தனே. நீ விரைந்து சென்று விழைந்ததைப் புரிக.

தமி:—இனி இமை கொட்டும் நேரமும் தாழேன். இதோ வழிக் கொண்டேன்.

இனி:—ஏகுக. இணையிலா வெற்றி பெறுக.

நீ வாழ்க! நின்நாடு வாழ்க!! நீடுவாழ்க!!!

தமி:—அம்மா, உதய சூரியனுடனே உன் இதய சூரியனும் ஒளி பெறும். வருந்தற்க. [வணங்கி ஏகுகிறுன்.]

(மறுநாட் காலை இனியாள் எழிலரியாசனம் ஏறி இன்புற்ருள்.)

# இரு கைக்குட்டைகள்

['குமாரன்']

இராமநாதன் ஒரு ஹிந்து; ஆனால் சநாதன ஹிந்துவல்ல. வைதிகப் பிச்சுமல்ல. மனிதனுக்காக மதமே தவிர, மதத்திற்காக மனிதனல்ல என்ற முடிவுக்கு அவன் முன்னமே வந்து விட்டான்.

ஊரோடிருந்தபோது அவன் வீட்டார் போட்டிருந்த சட்ட திட்டங்களிலே அவன் தினசரிக் கடமைகள் நிறைவேறிக்கொண்டிருந்தன. அப்போது பழங் காலத்திய ஆசாரங்களும், கொள்கைகளும் அவன் அனுஷ்டானத்தி லிருந்தவைதான். ஆனால் அதெல்லாம் இப்போது............?

கிராமப் பழக்கத்திற்கு அவன் அடிமையா யிருந்த காலம் மலையேறிவிட்டது. அர்த்தம் புரியாமல் அப்படிச் செய்ய வேண்டும், இப்படிச் செய்யக் கூடாது என்ற கட்டுப்பாட்டிற்கு அவன் இப்போது கீழ்ப்படிவதில்லை. பழக்கமும் வழக்கமும் அவன் அலசிப் பார்க்கும் நிலைமைக்கு வந்துவிட்டன. முடிவு காணாத அல்லது பயன் காணாத ஒரு பழக்கத்தையோ வழக்கத்தையோ அவன் தனக்கு உரிமையாக்கிக் கொள்வதில்லை.

ஊரைவிட்டு வந்து இரண்டு வருஷங்கள் ஆயின. படிப்பு என்ற ஒரே நோக்குடன்தான் அவன் திருச்சி நகரத்துக்கு வந்தது. சிலரைப்போல படிப்பைச் 'சாக்கிட்டு' அவன் நகரத்துக்கு வரவில்லை. முன்னோர் வருந்திச் சேர்த்து வைத்துப் போன பொருளைப் பெற்று தமாஷாகப் பட்டணங்களில் பொழுது போக்கித் திரியும் வாலிபர் 'ரகத்தை' அவன் சேர்ந்தவனல்ல.

ஒரு சிறு சந்திலுள்ள அறையொன்றில் அவன் ஜாகை வைத்திருந்தான். நாகரீகத்திற் கறிகுறியான மின்சார விளக்கு, தண்ணீர்க் குழாய் போன்ற வசதிகள் அந்த அறையிலிருந்தன. காப்பியும், சாப்பாடும் ஹோட்டலில் ஏற்பாடு செய்துகொண்டிருந்தான். ஹோட்டல் சமீபத்தில்தான் இருந்தது. ஆனால் காலேஜ்மட்டும் கொஞ்சதூரம்.

தினமும் இரவு 7-30 மணிக்கெல்லாம் ஹோட்டலில் சாப்பாட்டை முடித்துக்கொண்டு தன் 'ரூமில்' நுழைவான். உள்ளே சென்றதே 'ஸ்விச்சை'ப் போட்டுக்கொண்டு மேஜையண்டை படிக்க உட்கார்ந்து விடுவான். காற்றுக்காக ஜன்னல் திறந்தபடி யிருக்கும். ஏறக்குறைய அதே நேரத்தில் எதிர்வீட்டு ஜன்னல் கதவு திறக்கப்படும். வெளிச்சமும், அதை மறைத்துக்கொண்டு ஒரு மோகன உருவமும் அந்தப் பலகணியின் வழியே எட்டிப் பார்க்கும்.

அப்புறம் படிக்கும் ஓசை. ஒரு புறத்தில் ஆடவனின் கம்பீரக் குரல்; மறுபுறத்தில் அந்தப் பெண்மணியில் மிருதுவான தொனி. இடையிடையே ஒரு சில நிமிஷங்கள் அமைதி. நாற்காலியிற் சாய்ந்தவண்ணம் அவன் சிந்தனையில் மூழ்கி யிருப்பான். எதிர் வீட்டிலுள்ள அவள் சாளரத்தின் வழியே வீதிப் பக்கமாகத் தன் பார்வையைச் செலுத்தியவண்ண மிருப்பாள். இப்படியே இந்த நாடகம் இரவு 10 மணி வரையில் நடைபெறும். அப்பால் அவன் லைட்டை அணைத்துவிட்டுப் படுக்கைக்குப் போவான். அதே சமயத்தில் எதிர்வீட்டு சாளரமும் மூடப்பட்டு விடும்.

இப்படியே இரண்டு ஆண்டுகளும் ஓடிவிட்டன.

* * *

எதிர் வீட்டிலுள்ளவர்கள் இந்தியர் சகோதரத்வ மதத்தைச் சேர்ந்தவர்கள். தந்தைக்கு ஒரு ஹைஸ்கூலில் உபாத்தியாயர் வேலை. தாயில்லாத தன் பெண்ணையும் பிள்ளையையும் பராமரிக்க வேண்டிய வேலை அவர் தலையிலேயே சுமந்தது. பெண் ஆனந்த பாய்க்கு 18 வயசு. 'ஸ்வர்ண விக்கிரகம் போல........' என்ற வர்ணனை அவளுக்காகத்தான் பிறந்தது என்னலாம். வெறும் ரூபலாவண்யம் பெண்களுக்குப் போதாது. அழகு சோபிக்க வேண்டுமானல் அதற்குத் தக்க கல்வி யறிவும் வேண்டும் என்ற கொள்கை யுள்ளவர் அவள் தகப்பனர் ஜான். அதனல்தான் அவள் இந்தப் பருவத்திலும் காலேஜுக்குப் போய் வருகிருள்.

அவள் படிக்கும் கல்லூரி லூதர் மிஷனைச் சேர்ந்தது. பெண்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட அந்தக் காலேஜில் அவள் இண்டர் மீடியட் முதல் வகுப்பில் படித்து வருகிருள்.

இராமநாதன் எதிர் அறைக்கு ஜாகை வந்த சில தினங்களில் ஆனந்த பாயின் ஸ்படிக உள்ளத்தில் ஏதோ ஒரு மாறுதலுண்டாயிற்று. அவனைக் காணுந்தோறும் அவள் நெஞ்சம் சஞ்சலத்திற் குள்ளாகியது.

காலை 6 மணி முதல் 10 மணி வரையில் அவளுக்குப் பொழுது போய்விடுகிறது. அப்பால் மாலை 4 மணிவரையில் காலேஜில் படிப்பில் நேரம் சென்று விடுகிறது. அதற்குப் பிறகு நித்திரை வரும் வரையில்........அவள் உள்ளம் எங்கெல்லாமோ சஞ்சரிக்கிறது!

மாலை 4-30 மணியிலிருந்து இரவு 8-30 மணி வரையில் அவள் அந்த வீட்டில் தனியேதா னிருப்பாள். 3 வயதுள்ள அவள் தம்பி தந்தையுடன் ஸ்கூலுக்குப் போய்விட்டு இரவு 8½ மணிக்குமேல் தான் அவருடன் வருவான்.

மாலை நேரங்களில் ஜன்னல் கதவைத் திறந்துவிட்டு அதன் அருகே நாற்காலியை இழுத்து போட்டுக்கொண்டு ஆனந்தபாய்

கையில் புத்தகத்துடன் அமர்வாள். மிகக் கவனமாக அதைப் படித்து முடித்து விடுபவள் போலிருக்கும் அவள் ஆர்ப்பாட்டம். ஆனால், புத்தகத்தை விரித்ததே....அவள் நினைவே அவளுக்கு இருப்பதில்லை.

நிலாக் காலங்களில் ஒவ்வோர் சமயம் ஜானும், இராமநாதனும் ஏதேனும் உலக செய்தியைப்பற்றிப் பேசிக்கொண் டிருப்பர் அவ்வாறு அவர்கள் பேச்சில் ஈடுபடும் போதெல்லாம் ஆனந்தபாய் மறைவிலிருந்தபடி அவனைக் கவனித்தவண்ண மிருப்பாள்.

இவ்வாறு அவள் தன் இளம் உள்ளத்தை அவன்பால் பறி கொடுத்து விட்டாள். ஆழந் தெரியாத ஒரு நூதன கடலில் இறங்கிக் கரை காணாது அவள் தத்தளிக்கலானாள். காதற் கதைகளிலும், காதற் பாட்டுகளிலுமே அவள் கவனஞ் சென்றது. தன் காலேஜ் புத்தகங்களில் காதலைக் குறித்துவரும் பகுதிகளையே அவள் திரும்பத் திரும்ப படித்து மகிழ்ந்தாள். அவனைக் காணும்போதும், அவன் உருவம் நினைவிற்கு வரும்போதும் அவள் பெருமூச் செறிந்து நிற்பாள்.

* * *

ஜனவரி மாதம் பிறந்தது. நகரம் முழுதும் விருந்துகளும், கொண்டாட்டங்களும் பிரமாதப்பட்டன. புது வருஷ வெகுமதிகள் என்று சொல்லி ஒருவர்க்கொருவர் விலையுயர்ந்த பல பொருள்களைக் கொடுத்துக் கண்டு கொண்டனர். தானும் தன் தலைமை உபாத்தியாயனியைக் கண்டு கொள்வதற்கு என்று ஆனந்தபாய் மேஜை விரிப்புத்துணி ஒன்றைப் பலநிற நூலிழைகளால் பின்னினாள். அத்துடன் இரண்டு கைக்குட்டைகள் தயாரித்திருந்தாள்.

முதல் தேதி யன்று காலை அந்த மேஜை விரிப்பை எடுத்துக் கொண்டுபோய்த் தலைமை உபாத்தியாயினிடம் சேர்ப்பித்து அவள் நன்மதிப்பையும், ஆசிர்வாதத்தையும் பெற்றுக்கொண்டு வந்தாள். ஆனால், அந்தக் கைக்குட்டைக ளிரண்டும் அவள் பெட்டியிலேயே கிடந்தன.

ஜனவரி மாத முடிவைக் காட்டும் நாளும் வந்தது. அதுவரை அவள் எதிர்பார்த்த சமயம் எப்படியோ கிட்டாமற் போய்விட்டது.

அன்று மாலை அவள் வீட்டில் நுழைந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் எதிர் அறை திறக்கப்படும் ஓசை கேட்டது. திரும்பிப் பார்க்கவே அவன் உள்ளே நுழைந்தது தெரிந்தது.

விரைவில் தன் பெட்டியைத் திறந்து கைக்குட்டை ஒன்றை எடுத்துக்கொண்டு தெரு வாயிற்படிக்கு வந்தாள். சந்தின் இரு புறத்தையும் கவனித்தாள். யாரும் இல்லை என்று தெரிந்து கொண்டவுடனே அவன் அறையினுள் ஓடி நுழைந்தாள். இராமநாதன்

கோட்டைக் கழற்றிப் போட்டுவிட்டு நாற்காலியில் அப்போது தான் அமர்ந்தான். அவன் மேஜைமீது அந்தக் கைக்குட்டையை அவள் வைத்தாள். ஒரு கணம் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்துத் திரும்பினுள்.

அவன் 'என்ன இது?' என்று வினவியபடி அவளையும் அவள் கைக்குட்டையையும் மாறிமாறி நோக்கினன். 'ஒருத்தரிடமும் சொல்ல வேண்டாம்! காட்டவும் வேண்டாம்!' என்று சொல்லி விட்டுத் துரிதமாய் நடந்தாள்.

'ஜனவரிக்கா? தாங்கஸ்' என்ற அவன் சொற்கள் அவள் செவி களில் அறைகுறையாக விழுந்தன.

கைக்குட்டையைப் பிரித்துப் பார்த்தான். 'என்ன அழகான வேலை? எத்தனை நேர்த்தியான பூக்கள்!—ஆ! இது என்ன? என் பெயர்கூட இதில் தீட்டப்பட்டிருக்கிறதே!' என்று தனக்குத் தானே வியந்தான்.

முதன்முதலாக ஏதோவொரு சஞ்சலம் அவன் உள்ளத்தில் துளித்தது. அந்தக் கைக்குட்டையைத் தன் பெட்டியினுள் வைத் துப் பூட்டினன். எப்போதேனும் அதைக் காணும்போது அச் சுந்தரியின் முகத்தோற்றமும், ஒருத்தரிடமும் காட்ட வேண்டாம் என்ற சொற்களும் அவன் நினைவில் தோன்றி அவள் மனத்தில் ஏதோவொரு குழப்பத்தை யுண்டு பண்ணி வந்தன.

ஓய்ந்த வேளைகளில் அவன் சில பத்திரிகைகளுக்குக் கட்டுரை கள் எழுதி வந்தான். அதனல் அவனுக்குச் சில மாத வாரப் பத்திரிகைகள் வந்துகொண்டிருந்தன. அவற்றை ஜான் வாங்கிப் பார்ப்பதுண்டு. ஆனந்தபாயும் அவற்றைப் படித்துப் பார்ப்பாள். முக்கியமாக அவன் வரைந்த கட்டுரைகளைப் படித்து மகிழ அவள் தவறுவதில்லை. அந்தக் கதைகளிலிருந்து அவள் அவனுடன் நேருக்கு நேர் பழக முடியாவிடினும் அவனது குணபாவங்களை ஒருவாறு ஊகிக்க முடிந்தது.

ஒரு தினம் மாலை ஆனந்தபாய் அந்தப் பத்திரிகைகளி லொன் றைப் படித்து முடித்துவிட்டுத்தானே அவனிடம் கொடுப்பதற் காகச் சென்ருள். அவன் ஏதோ எழுதிக்கொண்டிருந்தான். மேஜையின்மேல் அந்தப் புத்தகத்தை வைத்துவிட்டுத் திரும்பினுள். அவன் அந்தப் பத்திரிகையைக் கையில் எடுத்தபோது அதனுள் ளிருந்து இன்னெரு கைக்குட்டை விழுந்தது. அது வேறு புது மாதிரியாகப் பின்னப்பட்டிருந்தது. அதன் அடிப்புறத்திலும் அவன் பெயர் மெல்லிய நூலிழையால் பொறிக்கப்பட்டிருந்தது.

அவன் உள்ளம் மீண்டும் கவலைக்குள்ளாகியது. முன்னே அளித்த கைக்குட்டைதான் புது வருஷப் பிரசெண்ட். இது எதற்

காக? அவனுக்கொன்றும் விளங்கவில்லை. 'ஒருவரிடமும் சொல்லாதீர்கள். காட்டவும் வேண்டாம்' என்ற அந்த சொற்கள் மீண்டும் அவன் நினைவிற்கு வந்தன. 'யாருக்கும் காட்டக் கூடாது! பின் எதற்காக இது?'—இதன் நோக்கத்தைத்தான் அவனால் அறியக் கூடவில்லை. ஒரு வேளை அவள் தந்தைக்குக் கூட இது தெரியாதோ? அவருக்குத் தெரியாமல் இதை எப்படிப் பின்னி யிருப்பாள்? துணியும் வர்ண நூலும் அவர்தானே வாங்கிக் கொடுத்திருப்பார்! ஆதலால் எப்படியும் அவர் அறிந்திருக்கக் கூடும். என் நண்பர்கள் யாருக்கும் இது தெரிய வேண்டாம் என்பதே அவள் கோரிக்கையா யிருக்கலாம். இப்படியாக அவன் நெஞ்சில் அலை பாய்ந்தது. நாளடைவில் படிப்பாலும், வேறு பல அலுவல்களாலும் அந்த அலை ஓய்ந்து வந்தது.

அந்த வருஷம் கோடை விடுமுறைக்குத் தன்னூர் போயிருந்தான். தன்னுடன் அந்த இரண்டு கைக்குட்டைகளில் ஒன்றை எடுத்துப்போ யிருந்தான். தன் மனைவியிடத்தில் அவன் அதைக் காட்டியபோது அந்தப் பெண்பாவை அவனைக் கூர்ந்து நோக்கினாள்.

கபடமற்ற இராமநாதன் 'இது என் நண்பர் ஒருவருடைய மகளால் ஜனவரியின்போது எனக்குக் கொடுக்கப்பட்டது. என்ன அழகான பின்னல் பார்!' என்றான். (தொடரும்)

---


## ரிஜிஸ்தர் அறிவிப்பு

### கல்கத்தா ஜெனரல் ரிஜிஸ்தர் நெம்பர் 114.

1. "லக் பீடி" டிரேட் மார்க்கு.
2. "இன்பசாரம்" டிரேட் மார்க்கு.
3. "கோல்டனல்" டிரேட் மார்க்கு.
4. "காஸ்டோலின்" டிரேட் மார்க்கு.

ஷை டிரேட் மார்க்குகளை Mr. M. மாசிலாமணி முதலியார், அவர்களால் தயாரிக்கப்படும், மருந்துகள், பீடி வகையறுக்களுக்கு இந்தியன் பீனல் கோடு 478, 479-வது செக்ஷன்களின் படிக்கு ரிஜிஸ்தர் செய்துள்ளார்கள். ஷை டிரேட் மார்க்குகளைப் போல் உபயோகிப்பவர்கள் நஷ்ட ஈடு முழுமைக்கும், சிவிலிலும், கிரிமினலிலும், ஜவாப்தாரியாவார்களென இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மருந்து தயாரிப்பவர்கள் :

**31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.**

# ஜானசிக்கியனின் வாள்

[ஆசிரியர். வேலாயுதனூர் பிரஞ்சு மொழி பெயர்ப்பு]

ஒரு பெரிய அடர்ந்த காடு. இதைச் சுற்றிலும் பெரும் மலைகளும் குன்றுகளும் வானளாவி உயர்ந்திருந்தன. அங்கு ஓர் பெருங் குகை இருந்தது. அதில் ஜானசிக்கியன் என்னும் ஒரு ராக்ஷஸன் வசித்து வந்தான். அந்த மலைப் பிரதேசங்களிலுள்ள ஜனங்கள் ஜானசிக்கியன் என்று சொன்ன மாத்திரத்திலேயே பயப் பிராந்திகொண்டு நடுநடுங்குவார்கள். நடுநிசியில், கோரமான மின்னல் மின்னினால், ஜானசிக்கியன் கோபத்தில் பல்லை நெற நெற வென்று கடிக்கும்போது கண்களிலிருந்து வெளிவரும் நெருப்புப் பொறி என்பார்கள். உக்கிரமான புயல் காற்று அடித்தால் ராக்ஷஸன் பலமாய் மூச்சு விடுகிறான் என்பார்கள். இவ்வாறு பலவிதமாய் அங்குள்ள ஜனங்கள் சதா திகிலடைந்து கூறி வருவார்கள்.

ஜானசிக்கியன் கையில் பிடித்திருக்கும் வாள் இரும்பாலானது. அந்த வாளை உருவாக்க வடிப்பதற்குள் காட்டில் தீப்பிடிக்கச் செய்து அந்தத் தீயில் வாட்டி யெடுத்தான். இவ்வாறு பெரும் நெருப்பிலெடுத்தவுடன் கனகனப்புமாற 'தன்யாவதி' என்கிற பெரிய நதியில் நனைத்துச் சூட்டைப் போக்கினான். அந்த நதி நெருப்பின் உத்வேகத்தால் ஏழுநாள் வரையில் தளதளவென்று கொதித்துக் கொண்டிருந்தது. அந்தப் பாரமிகுந்த வாளை மிகுந்த புயவலியுடைய ஜானசிக்கியன் ஒருவனால்தான் தூக்க முடியும். மற்றவர்களால் அசைக்கவே முடியாது. அவ்வளவு பாரம் ஜான சிக்கியன் அந்த வாளை மலையில் அழுத்தினால், மலை அப்படியே வளைந்து கொடுக்கும்.

ஒரு நாள் ஜானசிக்கியன், தன் அந்திய காலம் நெருங்கி வருவதைக் கண்டான். எது எப்படியாயினும் தனது வாளை ஒருவ ரிடத்திலும் விடக்கூடாது என்று எண்ணினான். அங்கிருந்த ஒரு கற்பாறையில் வாளைச் சொருகினான். கைப்பிடி நீங்கலாக மற்றப் பாக முழுமையும் பாறையில் மறைந்தது. உடனே உயிர் துறந்தான்.

ஜானசிக்கியன் இறக்கவே, அங்கிருந்த மலைப் பிரதேச வாசிக ளனைவரும் அந்தப் பலம் பொருந்திய வாளை அபகரிக்க ஓடி வந்தனர். பாறையினின்றும் வாளை பெயர்க்கப் பிரயத்தனப் பட்டனர். முடியவில்லை. இவ்வாறாய் வருஷங்கள் பல கடந்தன. ஒருவராலும் அந்த வாளை எடுக்க முடியவில்லை. சில காலத்திற்குள் வாள் இருந்த இடமே தெரியாது. புல் பூண்டுகளால் மூடப்பட்டது. பின்னும் சில காலத்திற்குள் வாள் இருக்கும் இடமே தெரியவில்லை. அதைப்பற்றிய ஞாபகமும் சிறிது சிறிதாய் மறைந்து வந்தது.

அப்போது தன்யாவதி நதி ஓரத்தில் ஒரு பெரிய கோட்டை இருந்தது. அதில் ஒரு பிரபு வசித்து வந்தார். அவருக்கு மூன்று பெண்கள். பிரபு வசித்து வருங்கோட்டை, மலையின் மேலுள்ளது. ஆதலால் இம் மலைமேலுள்ள தோட்டத்தில், ஒரு கனிதரு மரமும் வளர்வதில்லை. அப்படி இருந்தபோதிலும் பிரபுவின் மூன்று குமாரிகளுக்கும் ஏராளமான திரவியமிருந்தது.

இவர்களுக்கு ஏராளமான திரவியங் கிடைத்த வரலாறு யாதென்றால், ஓர் இந்திர ஜால ஊர்க் குருவியின் சிநேகத்தூதாகும். ஒருசமயம் இந்த ஊர்க்குருவி, சுவர்க்க லோகத்திற் சென்று பொன் ஆப்பிள் பழவிதை ஒன்றைத் திருடிக்கொண்டு வந்துவிட்டது. அந்த விதையை ஒரு பயிருக்கும் உதவாத பாரை நிலத்திற் போடவே அது பொன் ஆப்பிள் மரமாய் வளர்ந்து வந்தது. ஒவ்வொருநாளும் மும்மூன்று பொன் ஆப்பிள் பழம் வீதங் கொடுத்து வந்தது. இவைகளை பிரபுவின் குமாரிகள் அறுத்து விற்றுவருவார்கள். இதனால் ஏராளமான சொத்துடையவர்களானார்கள்.

ஜானசிக்கியனைப் போலவே, பிரபு இறந்துவிடவே, இவர் புத்திரிகள் மூவரும் அகந்தையும் கெர்வமுங் கொண்டார்கள். தங்களை விவாகஞ் செய்து கொள்வதற்கு யாராவது தேடிவந்தால், 'இம் மலையை அப்புறப் படுத்து; இந்த ஆற்றின் தண்ணீரைக் குடித்துவிடு; அப்போதுதான் உங்களுக்கு மனைவியாவோம்.' எனக் கடுமையான பரீக்ஷை வைப்பார்கள். இவ் விநோதமான பரீக்ஷையில் எவரும் தேறவில்லை.

அப்படியிருக்கும்போது, 'எந்திரன்' என்னும் வாலிபன் ஒருவன் மூன்று பெண்களில் ஒருத்தியைக் கண்டிப்பாய் எவ்விதத்திலும் கலியாணஞ் செய்து கொள்ள வேண்டும் எனத் தீர்மானித்தான். வீராப்புடன் கோட்டைக்குட் சென்றான். இவன் நடையும் சாயலும் அந்த மூன்று பெண்களுக்கும் பிடித்து விட்டன. மூவரும் தங்களுடைய எண்ணத்தை வெளிக்குத் தெரிவிக்காமல் நடந்து கொண்டு 'ஜானசிக்கியனின் வாளைக் கொண்டுவந்தால் மணந்து கொள்வோம்' என்றார்கள்.

நிற்க, முதல் பெண் எந்திரனை எவ்விதத்தினும் மணக்க நினைத்து, தன் சகோதரிகளுக்குத் தெரியாதவாறு இவனைக் கூப்பிட்டு 'ஐயா! ஜானசிக்கியனின் வாள் ஓரிலா பர்வதத்திலிருப்பதாகப் புத்தகத்தில் வாசித்திருக்கிறேன். ஜாக்கிரதை! என் சகோதரிகளுக்குத் தெரியப் போகிறது' என்றாள்.

எந்திரன் ஓகோ! நம்மை மணக்க இவளுக்கு ஆசை இருக்கிறது என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

இரண்டாவது பெண்ணும், அவனை மிகவும் நேசித்ததால் சிறிது மறவாகச் சென்று விடியற் காலத்தில் சூரிய உதயமாகும் போது ஓரிலா பர்வதத்தின் கற்பாரை இளகும். அப்போது வாளை எடுத்துக் கொள்ளலாம் என என் தாய் தந்தையர்கள் எனக்குச் சொல்லி யிருக்கிறார்கள். ஜாக்கிரதை! என் சகோதரிகளுக்குச் சொல்ல வேண்டாம்' என்றாள்.

இவள் கருத்தையும் நன்குணர்ந்து நடந்தான் வாலிபன்.

மூன்றாவது பெண், தன் சகோரிகளிருவரும் கூறிய விஷயத்தை மறவிலிருந்து கேட்டிருந்ததால் ஓடோடி வந்து வாலிபன் காதில் ரகசியமாக 'அவர்கள் பைத்தியக்காரிகள். நான் சொல்லுவதைக் கேள். ஓரிலா பர்வதத்திற்குச் செல். ஜானசீக்கியன் என்ற பேரை மூன்று முறை கூப்பிடு. அப்படிக் கூப்பிடும்போது எதிரொலி கேட்டால் வாள் உனக்குச் சொந்தம் தெரிகிறதா! திரும்பிவந்து என்னைக் கலியாணம் செய்து கொள்' என்றாள்.

வாலிபன் அவ்வாறே புறப்பட்டான். மறுநாள் வாளோடு திரும்பி வந்தான். ஒரே வெட்டில் கோட்டையிலுள்ள ஆப்பிள் மரத்தை வெட்டினான். மரம் கீழே விழுந்தது. பொன்னாப்பிள் சிதறிற்று. ஒன்று சேர்த்து மூட்டையாகக் கட்டித் தோளில் போட்டுக் கொண்டான்.

மூன்று பெண்களும், ஒவ்வொருவரும் தங்களைத்தான் கலியாணம் செய்து கொள்வான் என்றெண்ணி இப்போது எங்கள் மூவரில் யாரை விவாகஞ் செய்துகொள்ளப் போகின்றாய் என்றார்கள்.

'உங்களில் ஒருவரையும் நான் விரும்பவில்லை. எங்கள் கிராமத்தில் உங்களைப் பார்க்கிலும் அழகுடைய பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒழுக்கமுள்ளவர்கள்; உங்களைப்போல கெர்வமுள்ளவர்களல்லர்' என்று சொல்லிக்கொண்டே கம்பி நீட்டி விட்டான்.

(போலந்து தேசத்தில் உண்மையாய் நடந்ததாகச் சொல்லுங் கதை.)

---

ஸ்கூல் படிக்கும் ராமு வீட்டில் சண்டை போட்டு சில துணிகளை, படுக்கையில் சுற்றி அக்கலில் வைத்துகொண்டு பள்ளிக்கூடம் உபாத்தியாயரிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்த ராமுவைக் கண்ட உபாத்தியாயர் திடுக்கிட்டு,

உபாத்தியாயர்:—என்டா ராமு படுக்கையுடன் பள்ளிக் கூடம் வந்தாய்.

ராமு:—பள்ளி—படுக்கை, கூடம்—அறை. பள்ளிக்கூடம் படுக்கை அறைன்னுதானே சார் அர்த்தம்.— V. N. பெரியசாமி

# காதலும் சாதலும்

[பாரதி தாசன்]

கோடைக் காலத்து மின்னல்போல் அவள் நெஞ்சில் புதியதோர் எண்ணம் தோன்றிற்று. இடது கைக் கடிவாளத்தை அசைத்தாள். குதிரை செங்குன்று நோக்கிப் பறந்தது. தோழிகளும் தமது குதிரைகளை அதே பாதை நோக்கித் துரத்தினர்கள்.

செல்வியும், தோழிமாரும் செங்குன்றை யடுத்துள்ள கண்ணிச் சோலையை அடைந்தார்கள். தமது குதிரைகளை நாவல்மரம் ஒன்றில் கட்டினர்கள். அழகாய் அமைந்த அச்சிங்காரச் சோலையில் நுழைந்தார்கள் மருளும் பார்வையுடைய மான்கள் போல.

நக்ஷத்திரங்கள் நிரம்பிய நீலவானம்போல் பச்சைத் தழைகள் அளாவிய மரங்களில் மலர்கள் குலுங்கின. எங்கணும் கொடிப்பூக்கள் புதர்ப்பூக்கள் தரையில் அழகு கொழித்தன. பூஞ்செடிகளின் கால்களை நோக்கி மடை கோலிவிட்ட தண்ணீர் சாரை சாரையாய் ஓடிக்கொண்டிருந்தது. நிசப்தத்தில் ஊடுருவிப் பாய்ந்தது பறவைகளின் இனிய கீதம். புதுப் பெண்கள்போல் ஒரு சாயலாக மயில்கள் ஒதுங்கி ஒதுங்கி நடந்தன.

இவை செல்வியின் மனத்தைக் கவர்ந்தன. கவிதைக்குரிய அழகின் கூட்டத்தை அவளால் வருணிக்க முடியவில்லை. அவள் பேசுவாள் ஆயினும் ஊமையானள். செக்கச் செவேலென்று பூத்திருந்த செங்காந்தள் மலர்களையும், அவைகளை அடுத்து உயரத்தில் தொங்கும் பொன்னிறமான சரக்கொன்றை மலர்களையும் தோழிகள் கண்டார்கள். அக்காட்சி 'இரப்பவர் இல்லை என்று ஏந்திய கைகளில் கொடையாளிகள் பொற்காசுகளைச் சொரிவதாகும்' என்று கவிதை செய்துகொண் டிருந்தார்கள். அச்சமயம் புள்ளிமான் ஒன்று வேறொரு பக்கத்தில் செல்வியை அழைத்துக் கொண்டு போயிற்று.

சூரியன் அஸ்தகிரியைத் தழுவும் நேரம் ஒரு பக்கம் பிரிந்து சென்ற செல்வி, சிறிது ஆயாசத்தால் அங்கிருந்த பளிங்கு மேடை ஒன்றில் அமர்ந்தாள். அவளுடைய நீலவிழிகள் சஞ்சரித்த இடத்தில் காதல் விளைக்கும் ஆண் மயிலும் பெண்மயிலும் ஒன்றை ஒன்று கண்ணுற் சுவைத்தபடி இருந்தன. அந்தக் காதல் வெள்ளம் இரண்டிற்கும் நடுவில் ஒரு விரற்கடைத் தூரந்தான் பாக்கி.

செல்வி தன் பார்வையைத் திடீரென்று மறுபுறம் திருப்பினள். அவளுடைய 'தன்னந் தனிமை'யை அவளுக்கு ஞாபகத்தை உண்டாக்கின சோடி மயில்கள். அவளுடைய இளமையின்

இயற்கை அவளைக் கண்ணீர்விட வைத்தது. அவள் எழுந்தாள். தோழிமாரைத் தேடி நடந்தாள்.

மற்றொருபுறம் செங்குன்றூர் இளவரசன் மெருகேற்றிய கருங்கல்மேடை ஒன்றில் தூங்கிக்கொண்டிருந்தான். ஆயினும் அவனுடைய இளமையும், அழகும், ஒளியுமாத்திரம் தூங்காமல் தம்மை நாடிவரும் ஜீவனுக்கு மற்றோர் ஜீவனை அளிக்கக் காத்திருந்தன.

அவள் அவனைப் பார்த்தாள்; அவளுடைய கெண்டை விழிகள் ஆடாமல் அசையாமல் இருந்தன. இவள் இவ்வுலகை மறந்தாள்.

அவனது சிகை புறங்கழுத்தளவு கத்தரித்து விடப்பட்டிருந்தது. கதிர்விடும் விசால நெற்றியில் மேலேறிய கரும்புருவம் ஒளி வீசிக் கிடந்தது. அவனுடைய இரண்டு உதடுகளின் கடைக் கூட்டில் ஜீவகளை பின்னிக்கொண்டிருந்தது. அவனுடைய மார்பும், மார்பிற் கிடந்து ஒளி செய்யும் நவமணிப் பதக்கங்களும் உதய கிரியும் இளம்பரிதியுமாக விளங்கின.

அவள் கண்களில் புதியதோர் ஒளி உண்டாயிற்று. அவள் முக மண்டலம் நிறைய ஆச்சரியம்! நெஞ்சில் காதல் பிரவாகம்! அவன் அழகு நிலவையும், கதிரையும் மின்னையும், பொன்னையும் கொண்டு வல்லவன் ஆக்கிய சித்திரமோ என்று சந்தேகப்பட்டாள். அந்த ஆண்மையின் வடிவில் அறியப்படும் மற்றொரு வீர வடிவம், கேடயத்தோடு வைக்கப்பட்டிருக்கும் நீண்ட வாளாயுதம் என்று உவமித்தாள்.

அவன் தோற்றம் அவளை உயர்நிலையிற் சேர்த்தது கம்பனின் தமிழ்க் கவிதைபோல கண்ட மாத்திரத்தில் அளவற்ற இன்பத்தை உண்டாக்கும் அவனுடைய திருவுருவமானது, கேட்ட மாத்திரத்தில் இன்பம் விளைக்கும் செந்தமிழ்க்குச் சமம்.

அவன் திடுக்கிட்டெழுந்தான். அவள் திகைத்தாள்.

இருவர் பார்வையும், இருவர் மனமும் அமைதி பெற்றபின், அதிசயத்தோடு நீ யார் தனியாக என்று கேட்டான். நான் கொற்ற வேல் மன்னன் புதல்வி. என் பெயர் செல்வி என்று கூறினாள். அவள் கொஞ்சம் நாணத்தால் உடை ஒதுக்கித் தலை குனிந்திருந்தாளாயினும், அந்தக் கட்டழகனின் நல்ல பதிலை எதிர்பார்த்தாளாதலால் சற்று நிமிர்ந்து புன்சிரிப்புடன் அவனுடைய முகத்தை மற்றொருமுறை பார்த்தாள். அவனும் அவள் முகத்திற் சிந்தும் அழகைத் தன் பார்வையால் ஏந்தினான்.

அவள் வாடையுயர்ந்த மங்கை! மிதமிஞ்சிய பருமனில்லாத மின்னற் சுரம் போன்ற மேனியுடையவள். மெல்லிய கருங்குழலின் பின்னல், பின்னால் நீண்டு தொங்கிற்றுக் கருநாகம்போல்! நிலவு

போல் வெண்ணிறத்தையும், நிழல்போல் மேன்மையையும் உடைய அவளது ஆடையானது மேனியின் ஒளியை மறைத்துவிட முடியவில்லை. பிறை போன்ற நெற்றி, கருவிழி, செவ்விதழ், முல்லைப்பல் ஆகிய இவைகள், வேண்டுமென்று சிரிப்பதன்றி இயற்கையாக நகைப்பைக் கொட்டிக் கொண்டிருந்தன.

அந்த அழகின் சித்திரம், அவனது நெஞ்சை அளாவி, உயிரில் தோய்ந்தது. ஆயினும் அவன், 'அவள் பகை அரசனின் மகள் என்பதை எண்ணினன். தன் நெஞ்சையும் உயிரையும் அளாவிய அந்த அழகை வலிய வெளியே இழுத்துப் போட்டான்; வாய் நிறைந்த அமுதத்தை வேண்டுமென்றே கீழே உகுத்தான்; உடல் சிலிர்க்க வந்த தென்றலைவிட்டு வெதுப்பும் அறையில் குடிபோக முயன்றான். அந்த அழகின் கிரணம் புகவேண்டாம் என்று தன் கண்ணை இமையால் மூடினன். அவள் வாய் மலரின் செந்தமிழ்த் தேன் வந்து பாயாமல் தன் காதுக்குத் தாழிட்டான்.

என்னை நீங்கள் ஒப்புகிறீர்களா?—என்று அவள் ஆற்ற முடியாத காதல் தூண்டக் கேட்டாள்.

செல்வியே, ஒன்றை ஒன்று தழுவும் நமது இரண்டு உள்ளத்தை, நம்மிரு நாட்டின் பழம் பகையானது பிரிக்கிறது. என் அன்னை நாட்டில் ஒருத்தி யிருக்கிறாள். அவள் உன்னினும் அழகுடையவள் அல்ல எனினும் அவள் என் பகையரசனின் மகளல்ல....என்றுகூறி மறுத்தான்.

இதைக்கேட்ட செல்வி உள்ளந் துடித்தாள். பகை யுள்ளத்தைத் தாண்டி அவனுடைய அன்பைத் தன்னிடம் ஓடிவரும்படி செய்ய அவளால் முடியாமற் போயிற்று.

என் உள்ளத்தில் குடிபுகுந்தவரின் பேர் என்ன? அதையாவது கூறலாமா என்று பரிதாபமாகக் கேட்டாள். இளவரசன் தன் பெயரைச் சொன்னான் வேல் மறவன் என்று.

உள்ளம் ஒடிந்த செல்வி தன் உயிரைச் சுமந்துகொண்டு தள்ளாடி நடந்தாள். செல்வி தன் தோழிமாருடன் தன் மாளிகை சென்றாள். அவனையே நினைத்திருந்தாள் விநாடிதோறும்! ஒரு நாள் போவது அவளுக்கு ஓர் யுகம் போவதா யிருந்தது. இவ்வாறு கழிந்த நாட்கள் அவள் கணக்குப்படி பல யுகங்களாகுமாயினும் நமது சைவப் பஞ்சாங்கப்படி இரண்டு வருடங்கள் ஆயின. வேல் மறவன் தாய் நாடாகிய செங்குன்றூருக்கும் செல்வியின் தாயகமாகிய கேணிச்சுரையூருக்கும் சண்டை மூண்டது.

கேணிச் சுரையூரின் கோட்டை வாசலைக் கடந்து எதிர்ப் படை அரசமாளிகையை முற்றுகையிட்டு விட்டது. கேணிச்சுரையூரின் காக்கைக் கொடி பிடிபடும் என்று இரு பக்கத்தாரும்

சென்னை-600008

நிச்சயிக்கலானார்கள். கேணிச் சுரையூரின் கவிஞர்கள் தமது தாய் நாட்டின் கௌரவத்தைக் காக்க சுதேச வாலிபருக்கு எழுச்சியை—ஆவேசத்தைத்—தூண்டினார்கள். அதனால் அந் நாட்டுப் பெண்கள் போரிற் கலந்து கொள்ளக்கூடாது என்பது அந் நாட்டின் சட்டமாதலால் பெண்களின் எழுச்சி அடைந்த தோள்கள் அடக்கப்பட்டன. கேணிச் சுரையூரில் வயது வந்த வாலிபர் அனைவரும் போர்க்கோலம் பூண்டார்கள். இனந் தெரியாத வாலிபன் ஒருவன் கேணிச் சுரையூரின் படைக்குத் தலைமை வகிக்கலானான்.

அரச மாளிகையை முற்றுகை யிட்டிருந்த செங்குன்றூர்ப் படையில் இனந் தெரியாத அந்தச் சிங்க வாலிபன் சிறுபடை ஒன்றுடன் புகுந்தான்! செங்குன்றூர்ப் படை சிதறி ஓடிற்று! அது கோட்டை வாசலுக்கு வெகு தூரத்தில் அமைந்திருந்த தன் கூடாரத்தை நோக்கிப் பறந்தது.

கேணிச் சுரையூர் அரசன் மகிழ்ந்து, கூடாரத்தை நோக்கி ஓடிய எதிரிகட்குப் பெண்ணுடைகளைக் கழுதைமேல் அனுப்பினான். கோட்டை வாசல் கடந்து உள் நுழைந்த பகைவர் திருப்பி யடிக்கப்பட்டால் அவர்கள் எதிரிகளால் தரப்படும் பெண்ணுடைகளை அணிந்துதான் மீண்டும் போர் செய்ய வேண்டும் என்பது இரு நாட்டைப் பொறுத்த நிபந்தனை.

செங்குன்றூர்ப் படைக்குத் தலைமை வகித்திருந்த வேல மறவன் கழுதை தூக்கி வந்த பெண்ணுடைகளை வெட்கத்தோடு வாங்கித் தன் வீரர்கட்குத் தந்ததோடு தானும் ஒன்று தரித்துக் கொண்டான்.

மீண்டும் போர்க்களத்தில் இருபக்கத்துப் போர் முரசுகளும் போரை ஆரம்பித்தன. உறவென்பதில்லை. நண்பென்பதில்லை. தம் தம் தாய் நாட்டின் வெற்றி ஒன்றே குறியாகக் கொண்டு போர் செய்தார்கள். தலைகள் பனங்குலை சரிவதுபோல் சரிந்தன. போர் வீரர்கள் ஒருவருக் கொருவர் விதம் நின்று வாள் யுத்தம் நடத்தினார்கள்.

இனந் தெரியாத அந்தப் படை வீரனை நோக்கி 'அதோ நாணத்தால் முகம் மறையும்படி பெண்ணுடையால் மூடி நிற்கும் அந்த வீரன் தான் பகைப் படைக்குத் தலைவன்' என்று கூறினான் ஒரு வேவுகாரன். இனந் தெரியாத அப்படைத் தலைவன் அவன் மேற் பாய்ந்தான். இரு தலைவர்க்கும் வாட் போர் மூண்டது. விரைந்து சுழலும் இரு வாள்களும் மின்னல் ஒளியை உண்டாக்கின. போர்க் கலையின் நுட்பத்தை, மற்ற வீரர்கள் உற்றுக் கவனிக்கலானார்கள். தம்தம் போர்த் தொழிலையும் மறந்து! அவர்கள் தம் தலைவர்களின் வெற்றி தோல்வியை எதிர் பார்ப்பதையும் மறந்து

போனார்கள். போர்த் திறமை வெகு நேரம் நீடிப்பதால் கலை நுட்பம் தமக்குப் புரியும் என்று நினைத்தார்கள்.

முடிவில்,

வாட்போர் செய்திருந்த அந்த இருதலைவர்களின் இருமார்பிலும், ஏககாலத்தில், இரண்டு வாள் முனைகள் நுழைந்து வெளி வந்தன. அதனால் இருவர் தோள்களும் தாழ்ந்தன. இருமார்புகள் ரத்தத்தை உகுத்தன. கடை சாய்ந்து விழும் இருதேர்கள்போல் இருதலைவரும் ஒரு முகமாகச் சாய்ந்தனர். இருவர் உடைகளும் இடம்விட்டு நகர்ந்தன. இருவர் கண்களும் சந்தித்தன. கழுத்தளவு கத்தரித்து விட்ட சிகை. மேலேறிய கரிய ஒளி பொருந்திய புருவம் சமீபத்தில்—முல்லைப்பல் கருநாகம் போன்ற பின்னல்!

என் அன்பே என்று பதைத்தது வீரன் உடல்! என் அன்பே என்று அதிர்ந்தது செல்வியின் மலர்மேனி! இருவர் தோள்களும் தழுவின காதற் பதைப்பால்! போகும் உயிர்கள் பிடித்து நிறுத்தப் பட்டன சிறிது நேரம்.

ரத்தஞ் சிந்திய யுத்த பூமியில்—அந்த மலர் மஞ்சத்தில்—ஒரே நேரத்தில்—ஒரே க்ஷணத்தில் இரண்டு காரியங்கள் நிகழ்ந்தன.

அவை ஒரே ஒரு காதல் முத்தம், இரண்டு மரணம்!

---

மகாராஜா:—(தன் மகனைப் பார்த்து) மகனே நான் யார் தெரியுமா?

மகன்:—நீ ஓர் ஆண்டி அப்பா.

மகா:—(கோபமாய்) யாரடா சொன்னது?

மகன்:—அப்பா, வாத்தியார்தான் 'ஐந்துக்குமேல் அரசனும் ஆண்டி' என்றார். ஆகையால், உங்களுக்கு ஏழு குழந்தை யிருப்பதால் அப்படிச் சொன்னேன். —P. R. பழனிசாமி, பல்லடம்

---


**ஆச்சரியம்! ஆச்சரியம்!!**

நமது நாட்டில் சிறு வயதிலும், நடு வயதிலும் உள்ள அழகிய ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் தலையில் மயிர் முளையாமல் வழுக்கையாய்க் காணப்படுகின்றனர். அத்தகையவர்களுக்கு 15 நாளில் வழுக்கையான இடத்தில் மயிர் முளைக்கச் செய்யலாம். இதற்குக் காரண்டி யளிக்கப்படும். மற்ற விபரம் எழுதித் தெரிந்துக் கொள்ளவும்.

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,**

**31, வைத்தியனாத முதலி வீதி, சென்னை.**

# மங்கையர்க்கரசி

[தாழையூத்து G. தஸ்தகீர்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

சோமசுந்தரம் பிள்ளையின் அருமைக் கண்மணி மங்கையர்க்கரசியின் தலைவிதி வேறு விதமாக முடிந்து வாழ்வு தாழ்வு பட்டு, சிறு வயதில் சகிக்க முடியாத பெரும்பாறை அவள் தலையில் புரண்டதுபோல், விதவை என்கிற பெரும் பேய் அவளை வந்து பிடித்துக் கொண்டது. இதைவிட மகத்தான நஷ்டம் மங்கையர்க்கரசிக்கு வேண்டுமா? அந்தோ! நெருப்பில்பட்ட புழுவெனத் துள்ளினுள். துடித்தாள். தலையிலடித்துக் கொண்டாள். என் செய்வாள். ஐயோ! பரிதாபம் பரிதாபம். இதனைச் சோமசுந்தரம் பிள்ளை செவியுற்றார். வேரற்ற மரம் போல் வீழ்ந்தார். அவர் சட்டியிருந்த நிம்மதி என்ற கோட்டை தகர்த்தெறியப்பட்டது. ஐயோ சர்வேசா! என்னை இப்படியும் சோதனை செய்ய வேண்டுமா? என்னுயிர் போன பிறகு என் செல்வக்கிளியின் கதி யாதாமோ? அறிகிலேனே? ஈசா. அக்குழந்தையின்பால்கூடவா உனக்குக் கருணை அற்றுவிட்டது. நல்ல அழகையும் அறிவையும் கல்வியையும் கொடுத்துவிட்டு அதிர்ஷ்டத்தைப் பிடுங்கிக் கொண்டாயே. என் செய்வேன் என்று நிலை தெரியாது புரண்டார். முட்டிக் கொண்டார். கதறினர்.

'இனி வருந்துவதில் பயன் என்? அப்பா இதற்காக ஏன் உங்கள் உடலை வருத்துகிறீர்கள். என் தலை விதியை யான் அனுபவித்துத்தானே ஆக வேண்டும். மாண்டவர் அழுதால் வருவரோ? என்பதை மறந்தீர்களே" என்று மங்கையர்க்கரசி, தந்தையைத் தேற்றுவதைக் கண்ட சோமசுந்தரம் பிள்ளையின் இதயம் எப்படித்தான் துடிக்கும்? என்ன சங்கடத்தால் தவிக்கும்? எந்தவிதமான ஆறுதலால் அவர் மனத்துயர் ஆறும் என்பதை வர்ணிக்க நம் எழுதுகோல் இடந்தரவில்லை.

அந்தந்த சமயத்திற்குத் தேறுதல் கூறுவதற்கும், கண் துடைப்பதற்கும் அநேகர் அக்காலமட்டும் தோன்றுவதும் மறுதினம் அவரவர்கள் விலகுவதும் உலகவியல்பல்லவா? இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் இன்னொரு இம்சையும் சங்கடமும் பேராபத்தும் விளையும். அதாவது வீட்டிலோ அல்லது நெருங்கிய சுற்றத்திலோ சில கிழட்டுப் பிணங்கள் இருக்குமாயின், இம்மாதிரியான சாவிற்கு அவர்கள் வைக்கும் ஒப்பாரியும் குழந்தையைப் படுத்தும் பாடும் கூற வியலாது.

நல்ல வேளையாகச் சோமசுந்தரம் பிள்ளைக்கு அத்தகைய நெருக்கமான கிழங்கள் எவருமில்லை. வந்திருந்தவர்கள் எல்லாம் விலக, உத்தமசீலனும் அவனின் மனைவி ஸரஸாவும் சிலநாள் தங்கி யிருந்தார்கள்.

உத்தமசீலனின் நற்குணத்திற்கு விரோதமாக துர்க்குணத்தைப் பூண்டிருக்கும் ஸரஸா இயற்கையிலேயே முன் கோபமும், அகங்காரமும், ஆசையும் உள்ளவள். இவள் தன் சகோதரன் இறந்ததற்குக் காரணம் இம் மங்கையர்க்கரசியின் துர்ச்சாதகப் பலனே என்று அந்தரங்கமாயும் பகிரங்கமாயும் தூற்ற ஆரம்பித்தாள். சோமசுந்தரம் பிள்ளைக்குப் பின் தன்

கணவரே சொத்துரிமையை வகிப்பர் என்றும், இம்மங்கையர்க்கரசி தன்னிடமே ஊழியம் செய்து கொண்டு கிடப்பாள் என்றும் ஓர்வித மமதை அவளை ஆட் கொள, அம்மங்கை நல்லாளை எக்கணமும் நிராகரித்தும் கேவலப்படுத்தியும் வந்தாள்.

இவள் செய்யும் காரியம், முகம் பேச்சு இவைகளின் மூலமாக நொடியிலறிந்த நம் சோமசுந்தரம் பிள்ளை மங்கையர்க்கரசிக்குத் தாம் இறந்து போவதற்கு முன் சரியான ஏற்பாட்டைச் செய்துவிட்டுத்தான் மறு காரியம் பார்க்க வேண்டுமென்று முடிவு செய்து கொண்டார். விஷம் எவ்விதம் ஆளைக் கொல்கிறதோ அதே போன்று விசனமும் ஆளைக் கொல்லும் என்பது பொய்யாகுமா? இதேபோல் இரண்டொரு வாரங்களுக்குள்ளாக இவர் நிலைமை முற்றும் மோசமாகி எழுந்து நடமாடவும் சக்தியில்லாதபடியாய் விட்டார்.

சோமசுந்தரம் பிள்ளை தக்க செல்வந்தராகையால் தன்னுடைய சொத்துக்களை இரு பிரிவாக்கி ஒரு பாகம் மங்கையர்க்கரசிக்கும், மற்றையது உத்லமசீலனுக்குமாக வில்லெழுதி விட்டார். குழந்தைக்கென்று கைம்மேலாகக் காசிருந்தால்தான் அவளை லக்ஷியம் செய்து யாராயினும் மதிப்பார்கள் என்ற எண்ணம் அவருக்கு உதயமானதால் இவ்விதம் செய்தார்.

சின்னளில் அவரின் நிலைமை திடீரென்று கெட்டது. தன்னுயிர் இச்சமயம் நீங்கிவிடும் என்பதை அறிந்து உத்தமசீலனையும், தன் குமாரத்தியையும் அருகில் அழைத்து உத்தமசீலா என் கண்மணி! உன் சகோதரி மங்கையர்க்கரசியைக் கடவுள் நட்டாற்றில் விட்டுவிட்டார். அவளைக் கண் கலங்காது காப்பாற்று. கைவிடாதே என் பிராணன் இனி நிற்காது என்று கூறிக்கொண்டே தன் வலது கரத்தால் அவனைத் தழுவியும், மறு கரத்தால் மகளின் கரங்களைப்பற்றி என் செல்வி, மங்கையர்க்கரசி மங்கையர்க்கரசி என் கண்மணி! கதருதே கலங்காதே உன் விதியை எண்ணி ஈசனைப் பிரார்த்தனை செய். உனக்கும் பிரியமாயின் நீ தாராளமாக தற்கால விவாகப் புதிய சீர்திருத்த முறைப்படி மறு விவாகம் செய்துகொள். நான் இன்னும் சிலநாட்கள் இருப்பின் கட்டாயம் செய்வதாக எண்ணியிருந்தேன். அதற்காக இரகசியமாக விசாரித்தும் வந்தேன். அதற்குள் இறைவன் என்னை முடித்து விட்டான். என் கண்மணி என் செல்வமணி என்று கதறினர். புலம்பித் துடித்தார். மறுநிமிடம் மவுனமாகி விட்டார் ஞாபகம் தவறி விட்டது.

உத்தமசீலனே அவர் படும் மரணவஸ்தையைக் கண்டு கண் கலங்கி உரை தடுமாற 'என் சிறிய தந்தையே! தந்தைக்குப் பின்வாய்த்த அருமைத் தந்தையே. கலக்க மடையாதீர்கள். மங்கையர்க்கரசியை நான்......துக்கம் தொண்டையை நெருக்குவதனல் மேல் பேச முடியாது தவித்துக் கொண்டு தன் கரங்களினல் அவரின் சிரசைப் பிடித்துக்கொண்டு தத்தளிக்கின்றான்.

தன் தந்தை படும்பாட்டையும் தமையன்படும் வேதனையும் கண்ட மங்கையர்க்கரசிக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. தத்தளிக்கின்றாள். நெருப்பின்மீது புழுவெனத் துடிக்கின்றாள். தந்தையின் வதனத்தைக் காண்கிறாள். கண்ணீர் மாலை மாலையாக வடிக்கின்றாள். இதனிடையில் அவர் ஆவி பக்ஷி

போல் பறந்தது. கரைகாணுது தவிக்கும் மரக்கலத்திற்கு கொடும் புயல் காற்று மோதி அடித்துவிட்டால் எப்படி யிருக்குமோ அவ்விதம் நம் மங்கையர்க்கரசி துக்கமே உருக்கொண்டவளாய் தன் பிதாவின் சவத்தின் மீது விழுந்து புறண்டு அடித்துக்கொண்டு அப்படியே மூர்ச்சையாகி விட்டாள். தனக்கென்று அந்தரங்கமும் ஆசையும் பாசமுமாக ஆதரவு வார்த்தைகள் கூற இனி இவ்வுலகில் யார் இருக்கின்றூர்கள். பாவம் பக்கத்து வீடுகளிலுள்ள சில கிழப்பிணங்களும் ஸரஸாவும் ஒன்று சேர்ந்து கொண்டு 'ஐயோ அடி பாவிப் பெண்ணே! உன் அதிர்ஷ்டம் இப்படியாக வேண்டும். பிறந்தபோதே தாயை உருட்டி வாயில் போட்டுக்கொண்டாய் விவாக முடிந்த பின் கணவனேயும் விழுங்கிவிட்டாய். இந்தத் தகப்பனுவது ஒரு ஆதாரம் இருக்கின்றூர் என்று நினைப்பதற்குள் அவரும் இறந்து விட்டாரே. உன் ஜாதகத்தில் இடி விழ. உன் விதி இப்படியாடி ஆய் விட்டது' என்று சுடச்சுடத் தாக்கும் இவ்வார்த்தைகள் நம் மங்கையர்க் கரசிக்கு நொந்திருக்கும் புண்ணின்மேல் சூட்டுக்கோலிட்டது போலிருந் தது. இந்நிலைமையைக் கண்டு உத்தமசீலன் அக்கிழங்களை அதட்டி கண்ணீர் பெருகியவாறு தன் சகோதரியைத் தூக்கி 'எழுந்திரு அம்மா வீணுக உடம்பை அலட்டிக் கொள்ளாதே. இனி என்னதான் முட்டிக்கொண்டும் என்ன பயன். நான் ஒருவன் இருக்கும் வரை உனக்கு ஒரு குறைவும் ஏற்படாது' என்று கூறிச் சமாதானம் செய்தான்.

பின்னர், சவச் சடங்குகள் ஒருவாறு முடிந்தன. உத்தமசீலனும் ஸரஸாவும் அவர்களுடைய ஊருக்குப் போக வேண்டுமென்று பிரயாணப் பட்டார்கள். அனுதைச் சிறுமியான மங்கையர்க்கரசியை இவர்கள் அழைத்துச் செல்லாவிடில் வேறு கதி எது? சோமசுந்தரம் பிள்ளையின் வீட்டை வாடகைக்கு விடுத்து அவளையும் அழைத்துக்கொண்டு அவர்கள் ஊருக்கு வந்து சேர்ந்தார்கள்.

பிறந்த இடத்தையும் செல்வாக்கையும் தந்தையையும் உயிருக் குயிரான கணவனேயும் தோற்றுவிட்டு பிறர் வீட்டிற்குத் தான் செல்லும் போதுதான் தன் பரதேசித் தன்மையும் தான் ஓர் நிச்சயமான அடிமை என்ற அபாரமான அதிர்ச்சித் தோற்றமும் உண்டாயின. கண்களோ நீரோடைபோல் தாரை தாரையாகப் பெருகிக்கொண்டே வந்தது.

வீட்டிற்கு வந்ததும் ஸரஸா தன் அதிகாரத்தையும் அட்டகாஸத்தை யும் மங்கையர்க்கரசியின் மீது ஆரம்பிக்கத் தொடங்கினுள். அடிமை வேலையை ஊர்ஜிதப்படுத்தும் அடுப்பங்கரை வேலையும் தரையின்மீது வீசும் வெண்சாமரை வேலையும் அவளுக்குக் காயமாகின. வேளைக்கு உணவு கிடையாது. நல்ல ஆடை கிடையாது வெளியில் போகக் கூடாது. வீட்டு வேலை பூராவும் அவள்தான் செய்ய வேண்டும்.

அந்தோ ! இருட்டைப் பார்த்தால் மிரளும் சுபாவம் நிறைந்த இப் பெண்ணின் கதி இருட்டே தனக்குத் துணை என்ருகி விட்டது. காலையில் எழுந்தவுடன் 'சனியன் அந்த அமங்கலியின் முகத்தில் விழித்தேன். அதனுல் என்னுகுமோ' என்று சிலர் பேசும் வார்த்தைகள் இவள் செவியில் பட்டு அனலிடுமெழுகுபோல துடிப்பாள்.

விபசாரிகள் நடை குலுக்கி, முகமினுக்கி எதிர்வருதல் சுமங்கலி என மதித்து நற்சகுனமெனவும், விதவைகளின் வதனம் காணல் துர்ச்சகுன

மென நவிலும் பாழான கொள்கை மலிந்து கிடக்கும் இத்தமிழ் நாட்டில் விதவா விவாகத்தை வாழ்க்கையில் நடாத்தப் பெரும்பணி ஆற்றும் பல பெரியாரின் கொள்கையை மாந்தர்கள் உய்த்துணர்வார்களாயின் இவ்விந்தியாவில் 1931-வது வருஷத்தின் ஜனன மரணக் கணக்குப்படி 15 வயதுக்குள்பட்ட 3,21,701 விதவைகளின் எண்ணிக்கை குறைவுபட்டு நம் கதாநாயகியாகிய மங்கையர்க்கரசியின் மனம் துடிப்பதுபோல் ஏனைய விதவைகளின் உளம் வருந்தாது அனைவரும் சுமங்கலியாகி ஆனந்தமாக இருப்பரன்றோ?

இதனால் நம் மங்கை விடியும் நேரத்திற்கு முன்னமே எழுந்து, வீட்டு வேலைக்கு வேண்டிய தண்ணீர் எடுக்கவேண்டும். துணிகள் தோய்க்க வேண்டும். பாத்திரம் துலக்கவேண்டும். இன்னும் பற்பல வேலைகளை அதிசீக்கிரத்தில் முடித்து சமையலறையினுள் பிரவேசித்து, வெளியில் தலை காட்டாமல் உட்கார்ந்து தன் தலைவிதியைத் துலைப்பாள். இதே வேதனையால் சரீர மிளைத்துப்போயிருந்தும், ஸரஸா போகும்போதும் வரும் போதும் ஸர்ப்பம்போல் இவள் மீது சீறி விழுந்து எவ்விதத் திருத்தத்துடன் செய்யும் வேலைகளையும் குற்றம் சொல்வாள். 'அடி நீ பணத்தைக் கொண்டு மலைக்காதே. உன் போன்ற விதவைகளுக்கு பணந்தான் பெரிய ஆபத்து. தெரியுமா என்று தேள் போலக் கொட்டி வந்தாள். இக் கடுமொழி மங்கையின் மனத்தில் ஈட்டிபோல் குத்திக்கொண்டே இருக்கும் என்றாலும் பதில் பேசாது இருந்து விடுவாள். இதனிடையில் ஸரஸாவின் அன்னை தந்தை இருவரும் ஒருவருக்குப்பின் ஒருவராக விண்ணுலகேகினர் என்ற செய்தியைக் கேட்ட ஸரஸா, உடன் ஜெயபுரிக்குப் பிரயாணமாகி ஆங்கு இருந்த சகல சொத்துக்களையும் விற்றுத் திரும்பி வந்தாள்.

இந்நிலைமையில் வருடமும் ஒன்று கழிந்தது. ஸரஸாவும் ஒரு குழந்தைக்குத் தாயானாள். நமது உத்தமசீலனோ இளகிய மனதுடையவனகையால் தன் சகோதரியின் கஷ்டத்தைக் கண்டு சகியாது மனம் தவித்து உருகுவான். அவளுக்குத் தேறுதல் பல கூறுவதோடு மனைவியையும் கடிந்து சினந்துகொண்டு புத்திமதிகளைப் போதிப்பான். ஸரஸாவின் ஸர்ப்பக் குணம் இயற்கையாதலால் அவ்வசனங்களை விடுத்து, அவளை மென்மேலும் வாட்டுவாள். உன்னாலன்றோ என் தமையன் உயிர் துறந்தான் என மாட்டுவாள். வீதிக்கு ஏன் போனாய்? ஜன்னல் கதவை ஏன் திறந்து பார்த்தாய்? மாடியின்மீது உனக்கென்ன வேலை? என்று கடு மொழிகளைக் கொட்டிக் கொண்டே இருப்பாள்.

பரிசுத்தமும் பொறுமைக் குணமும் பூண்டொழுகும் நம் நங்கை ஸரஸா செய்யும் அட்டூழியங்களை நினைந்து நினைந்து துக்கிப்பாளே அன்றி எதிர்த்துப் பேசவும், தன் தனையனிடம் சொல்லவும் அல்லது அக்கம் பக்கத்தார்கள் இடம் மொழிவதும் கிடையாது. பணத் திமிர் திமிர் என மொழிவதைக் கேட்டு மனஞ்சகியாது மங்கையர்க்கரசி தன் தமையன் பேருக்குத் தன் வில்லில் கண்ட சொத்தை எழுதி வைத்துவிட்டு அடிமையிலும் அடிமையாக மாறிவிட்டாள்.

உத்தமசீலனோ தன் சகோதரியின் துயரத்தைக் கண்டு கண்களில் நீர் பெருகியவாறு 'மங்கையர்க்கரசியே! நீ இந்தப் பிசாசு ஸரஸாவின்

வார்த்தைகளை ஒரு பொருட்டாக எண்ணுதே அம்மா, உன் கஷ்டத்தை நான் எப்படித்தான் நிவர்த்தி செய்வதெனத் தெரியாமல் விழிக்கின்றேன்" என மனம் தவிக்க உரைத்து அவளை அன்ருடம் தேற்றி வந்தான்.

* * *

அதிகாலை மணி 3 இருக்கும். எங்கும் நிசப்தம் குடிகொண்டிருக்கின்றது. கிருஷ்ண பக்ஷத்துச் சந்திரன் மிக ஒளிவுடன் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ருன். அவ்வேளையில் கடவுளினுல் அதிர்ஷ்டத்தைப் பிடுங்கிக்கொண்ட பூங்கொடி போன்ற காரிகை ஒருவள் இடுப்பில் குடத்தை எடுத்து, தஞ்சையின் மேலவீதியின் வழியாக நடந்து வந்தாள். தற்செயலாக அவள் பார்வை சுவற்றின் மீதுள்ள ஒரு நீண்ட விளம்பரத்தின்மீது பட்டது. அதில் 'ஏழைப் பெண்களின் உபகார நிலயம்' சென்னை. நாளது 16 ஆந் தேதி வெள்ளிக்கிழமை அன்று இந்நிலயத்தின் மூன்ருவது வருஷாந்திர விழா நடைபெறும். அவ்வமயம் இதுவரையில் கல்வி கற்ற மாணவிகளை வேலை நிமித்தம் வெளியேற்றலும் புதிய அனுதைச் சிறுமிகளை ஏற்படுத்தலும் நடைபெறும். அன்பர்களனைவரும் வந்து கனப்படுத்தக் கோரப்படுகிறது' என்றதைப் படித்தவுடனே அப்பெண்ணுக்கு நமது மங்கையர்க்கரசிக்கு மனதில் ஒருவகை ஆனந்தமும் துணிவும் ஏற்படலாயிற்று. உடன் தனக்குள் ஒரு முடிவு செய்தாள். சரேலென வீடு திரும்பினுள். அன்று அவள் தமையன் ஏதோ காரிய நிமித்தம் அயலூர் சென்றிருப்பது மிகவும் சௌகரியமா யிருந்தது. ஓசை செய்யாது தன் கைப்பெட்டியைத் திறந்து ரூ. 10 எடுத்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்த குழந்தைக்கு பிரிவுபசார முத்தம் ஈந்து 'என் அண்ணியே சந்தேகப் பிசாசே இனி யாகிலும் சந்தோஷமாய் வாழ்வாயாக. நான் உலகுக்கும் உனக்கும் அடங்கி ஒடுங்கி இருந்தும் என்னைப் பழி தூற்றினுய். நான் போனபின் என்னை எவ்விதம் பழிக்கப் போகிருயோ யானறியேன். என் பரிசுத்தத்தை இகபரமிரண்டிலும் அரசு செலுத்தும் இறைவன் அறிவான்' என்று கண்ணீர் வடியவிட்டுக்கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்ருள்.

(அடுத்த இதழில் முடிவு)


## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| தடவை 1-க்கு | ஒரு பக்கத்திற்கு | ரூ. 20. |
| ,, ,, | ½ பக்கத்திற்கு | ரூ. 12. |

நீண்டகால விளம்பரங்களுக்கும், அட்டை விளம்பரத்திற்கும் மானேஜருக்கு எழுதவும். விளம்பரத் தொகையை முன் பணமாகவே அனுப்ப வேண்டும்.

மானேஜர்,

'தமிழரசு'

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# பிச்சைக்காரன்

[சி. குழந்தைசாமி]

வேலை செய்யத் திறனுடையப் பிச்சைக்காரனைக் கண்டால் என் மனைவி ஜானகிக்கு விஷப் பாம்பைக் கண்ட மாதிரி தான். 'ஏண்டா தடிபோலிருக்கிறாயே! பிச்சை கேட்க ஏன் வந்தாய்? உழைத்து ஜீவனம் பண்ணு' என்று வைது துரத்துவாள். அவள் பிச்சையிடுவதெல்லாம் கூன், குருடு, நொண்டி, சப்பாணி களுக்குத்தான். வேலை செய்யத் திறனுடையவனானாலுஞ் சரி, திறனற்றவனானாலுஞ் சரி, பிச்சையென்று கேட்டவனுக்கு ஒரு பிடி அரிசி போடுவதே மேன்மை, அன்றி அவனை வைது துரத்துதல் கீழ்மை என்பது என் கொள்கை. இது சம்பந்தமாகச் சிலசமயங் களில் எங்கள் இருவருக்கும் வாக்கு வாதங்கூட நடப்பதுண்டு. 'அந்தத் தடிப்பயல்கள் எல்லோரும் சோம்பேறிகள். வேலை செய்து ஜீவனம் பண்ணத் தெரியாதவர்கள்' என்பாள் ஜானகி. 'வேலை செய்து ஜீவனம் பண்ணு, என்று வாயினால் சொல்லி விடுதல் எளிது. வேலை செய்யத் தயாரா யிருந்தாலும், வேலை யகப்படாமல் கோடிக் கணக்கான ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பது உனக்கு எங்கே தெரியப் போகிறது? பிச்சைக்கு வருவோரில் பலர் மிகவும் கெட்ட சோம்பேறிகள் என்பது உண்மைதான். பிச்சைக்காரன் மாத்திரந் தானா சோம்பேறி? கோடிக் கணக்காகப் பணம் வைத்துக்கொண்டு விலாப்புடைக்கத் தின்றுவிட்டு யாதொரு தொழிலும் செய்யாமல் நாள் முழுதும் தூங்குவோர் சோம்பேறிகளில்லையா?' என்பேன் நான். அதற்கு ஜானகி 'தாங்க முடியாத வறுமையினால் பிச்சை கேட்க வருவோருமுண்டு. வேலை செய்துப் பொருள் தேடுவதற்குச் சோம்பற்பட்டுப் பிச்சை எடுப்போரும் இருக்கிறார்கள்' என்பாள். எனினும் நான் 'என்ன இருந்தாலும் நம் வீட்டு முற்றத்தில் வந்து நின்றுகொண்டு 'தர்மம் போடு தாயி' என்று கேட்பவர்களுக்கு ஒரு குத்து அரிசியாவது போட வேண்டியதுதான்' என்பேன்.

ஒரு நாள் பகல் சுமார் பனிரண்டு மணி யிருக்கும். ஜானகி சமயலறையில், அன்று சமைத்த கறிவகைகளைத் தாளிதம் பண்ணிக் கொண்டிருந்தாள். 'சுர்'ரென்ற சப்தத்தோடு தாளித மணம் நான் இருந்த அறைக்குள் வந்து என் மூக்கைத் தாக்கிற்று. நான் அப்பொழுது ஒரு தினசரிப் பத்திரிகையை வாசித்துக்கொண் டிருந்தேன். பத்திரிகையை மடித்து மேஜையின்மேல் வைத்து விட்டுச் சமையலறைக்குப்போக எழுந்தேன். அச்சமயம் வெளியே முற்றத்தில்,

'சங்கராசிவ சங்கராசிவ, சங்கராசிவ, சங்கராசிவ, சங்கரா,
சங்கராசிவ சங்கராசிவ சந்திரசூட சதாசிவா'

என்று மிகவும் இனிமையான குரலில் யாரோ ஒருவர் பாடும் சப்தம் கேட்டது. பாடுவது யார் என்று பார்ப்பதற்காகத் தெருவாசலைத் திறந்தேன். ஒரு பிச்சைக்காரன் நரகத்தீபோல் எரிக்கும் வெயிலிலேயே நின்றுகொண்டு பாடினன். வெயிலில் அவன் தேகம் முழுவதும் வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது. கையில் ஒரு அழகிய சிறு திருவோடு; இடுப்பில் ஒரு சிறு காவி வேஷ்டி. தேகமோ மிகவும் மெலிந்திருந்தது. அவனுடைய குரலோ கேட்பதற்கு மிகவும் இனிமையாக இருந்தபோதிலும் கருணை சோகம் நிறைந்திருந்தது. அவன் என்னைக் கண்டதும் தலை குனிந்துகொண்டு தன் பாட்டையே பாடிக்கொண்டு நின்றான். என்னிடம் ஒன்றும் கேட்கவில்லை. 'என்ன வேண்டும்?' என்று நானே கேட்டேன். அவன் பதில் ஒன்றும் சொல்லாமல் பாடிக்கொண்டு நின்றான். இதற்குள் ஜானகி வியர்த்த முகத்துடன் கண்களைக் கசக்கிக்கொண்டு அங்கு வந்து, வெளியே நின்றவனைப் பார்த்துவிட்டு 'ஒரு காலணா கொடுத்து அவனைப் போகச் சொல்லுங்கள்' என்று சொல்லிவிட்டுத் திரும்பவும் சமையலறைக்குப் போய்விட்டாள். நான் மேஜை அறையிலிருந்து ஒரு காலணாவை எடுத்துப் பிச்சைக்காரனிடம் கொடுத்தேன். என்ன ஆச்சரியம்! அவன் 'காசு வேண்டாம்' என்று சொல்லிவிட்டுப் போகப் புறப்பட்டான். என் இருதயத்தை ஈட்டியால் குத்தியது போலிருந்தது. அவன் மிகவும் பசியோடிருந்தான் என்பதை உணர்ந்து கொண்டேன்.

சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை.

தடதடவென்றுப் படி வழியாகக் கீழே இறங்கி அவன் கரத்தைப் பற்றி 'கொஞ்சம் ஆகாரம் பண்ணிவிட்டுப் போகலாம்' என்றேன். அவன் என் முகத்தை ஒரு தரம் பார்த்துவிட்டுத் தாழ்வாரத்தின் ஒரு பக்கத்தில்போய் உட்கார்ந்தான். நான் என் மனைவியிடம் சென்று 'அந்தப் பிச்சைக்காரனைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாய் இருக்கிறது. பசியால் ரொம்பவும் வருந்துகிறான். அவனுக்குக் கொஞ்சம் ஆகாரம் கொடு' என்றேன். ஜானகியும் 'ஆகட்டும்' என்று சம்மதித்தாள்.

அரைமணி நேரத்தில், அப்பளாம் சகிதம் அந்தப் பிச்சைக்காரனுக்குச் சாதம் அளிக்கப்பட்டது. அவன் பூர்த்தியாகச் சாப்பிட்டுவிட்டுத் தாழ்வாரத்திலேயே உட்கார்ந்திருந்தான். உண்ட மயக்கம் தொண்டர்களுக்கும் உண்டென்று சொல்லுவார்கள். அவன் சிறிது நேரம் வரையில் ஒன்றுமே பேசாதிருந்தான். நான் சமையலறைக்குச் சென்று சாப்பிட்டுவிட்டுத் தாம்பூலத்துடன் தாழ்வாரத்துக்கு வந்து, மேல் வேஷ்டியை விரித்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தேன். பிச்சைக்காரன் என்னைப் பார்த்துச்

சிரித்தான். அப்போது நான் 'உன் பெயரென்னப்பா? வெற்றிலைப் பாக்குப் போட்டுக் கொள்ளுகிறாயா?' என்று கேட்டேன்.

'என் பெயர் கார்த்திகேயன். நான் வெற்றிலைப் பாக்குப் போட்டுக் கொள்வதில்லை'

அவன் பேச்சிலுள்ள இனிமையும், சொல்வன்மையும் என் மனதைக் கவர்ந்தது. அவனுடன் பேசுவதற்கு மிகவும் இன்பமாக இருந்தது.

'கார்த்திகேயா! உன்னுடைய சொந்தவூர்?'

'மதுரை'

'மதுரையா? உனக்கு உற்றார் உறவினர்கள் ஒருவருமில்லையா?' கார்த்திகேயன் திடுக்கிட்டான். அவன் முகம் மாறிற்று. அவன் மௌனமாக இருந்தான்.

'ஏன் ஒரு மாதிரி விழிக்கிறாய்?'

அவன் கண்கள் சிவந்து, கண்ணீர்த் துளிகள் வெளிவந்தன. கார்த்திகேயன் பெருமூச்சு விட்டுக்கொண்டு கண்களைப் பட்டென்று மூடவே கண்ணீர்த் துளிகள் முத்தெனத் தெறித்தன.

'நீ ஏன் அழுகிறாய்?'

கார்த்திகேயன் ஒன்றுமே சொல்லாமல் தன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

'நீ படித்திருக்கிறாயா?'

'ஆம்'

'என்ன படித்திருக்கிறாய்?'

நான் பி. ஏ. வரையிலும் படித்திருக்கிறேன்.

இதைக் கேட்டதும் நான் உண்மையில் திடுக்கிட்டே போனேன். அவன் மூன்றாவது பாரம் அல்லது நான்காவது பாரம் என்று சொல்லியிருந்தால் நான் எனக்குத் தெரிந்த ஓட்டை இங்கிலீஷில், (யூ இங்கிலீஷ் நோ) உனக்கு இங்கிலீஷ் தெரியுமா? (யூ ஹௌ ஓல்ட்) 'உனக்கு எத்தனை வயது?' என்று பரிசோதித்திருப்பேன். நான் மூன்றாவது பாரம் வரையில்தான் படித்திருக்கிறேன். பி. ஏ. படித்த ஒருவனிடம் எப்படி நான் இங்கிலீஷில் பேச முடியும்?

'என்ன பி. ஏ. வரையிலும் படித்துவிட்டா பிச்சைக்காரனாய் அலைகிறாய்?' என்றேன்.

'என் வாழ்க்கையின் சந்தர்ப்பங்கள் என்னை இந் நிலைமைக்குள்ளாக்கின.'

'அப்பா! உன் வாழ்க்கையைப்பற்றி அறிய ஆசைப் படுகிறேன். தயவுசெய்து சொல்.'

'சொல்லுகிறேன். ஆனால் உங்களுடைய மனதிலும் சஞ்சலமே உண்டாகும்'

தாழ்வாரத்தில் வெய்யிலின் வெப்பம் அதிகமாக இருந்த படியால் கார்த்திகேயனை வீட்டினுள்ளே அழைத்துக்கொண்டு வந்து ஒரு நாற்காலியில் உட்கார வைத்தேன். நானும் ஒரு நாற் காலியை இழுத்துப்போட்டு உட்கார்ந்து கொண்டேன். இச்சமயத் தில் ஜானகியும் சமையற்கட்டில் எல்லாம் ஒழுங்குப் படுத்தி வைத்து விட்டு நாங்கள் இருவரும் இருந்த அறைக்குவந்து என் அருகில் நின்றாள். கார்த்திகேயன் கலங்கிய கண்களுடன் ஜானகியை ஒரு தடவைப் பார்த்துப் பெரு மூச்சு விட்டுக்கொண்டு தன் வாழ்க்கையைப்பற்றி பின்வருமாறு பேசலானான் :—

'நான் மதுரையில் பி. ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போதே என்னுடைய தாய் திடீரென்று காலராவினால் இறந்து போனாள். நான் பி. ஏ. பரீக்ஷை எழுதி முடித்துவிட்டுப் பிறகு வக்கீல் பரீக்ஷை கொடுப்பதற்காக சென்னைக்குச் சென்று இரண்டு வருஷங்கள் படித்துக்கொண் டிருந்தேன். அப்போது சென்னை மேரி ராணி கல்லூரியில் 'இண்டர் மீடியட்' வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பவானி என்ற பெண்ணைக் காதலித்தேன். அவள் நாயர் வம்சத்தைச் சேர்ந்தவள். நான் எவ்வளவு உண்மையாகப் பவானியைக் காதலித்தேனோ அதுபோலவே அவளும் என்னை நேசித்தாள். ஆனால் எங்களுடைய உள்ளன்பை உணராத என் தகப்பனார் என் விவாக சம்பந்தமாக மதுரையில் சில ஏற்பாடுகள் செய்திருந்தார். நான் சென்னையிலிருக்கும்போது ஒரு நாள் திடீரென்று அவரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் மதுரையிலுள்ள என் உறவினர் ஒருவருடைய பெண்ணை எனக்கு நிச்சயம் செய்திருப்பதாகவும், நான் உடனே புறப்பட்டு மதுரைக்குப் போகவேண்டு மென்றும் எழுதி யிருந்தது. அப்பொழுது கிறிஸ்மஸ் விடுமுறை காலம். எல்லா விடுமுறை காலங் களிலும் தன்னுடைய சொந்த ஊராகிய திருச்சூருக்குப் போகும் பவானி அப்பொழுது என்பொருட்டு சென்னையிலேயே தங்கி விட்டாள். நானும் மதுரைக்குப்போக விரும்பவில்லை. எனவே என் தகப்பனாருக்கு ஒரு கடிதம் எழுதி யனுப்பினேன். அதில் 'இன்னும் ஒரு வருஷத்திற்கு என்னிடம் கலியாணப் பேச்சை எடுக்க வேண் டாம்' என்று கண்டிப்பாக எழுதி யிருந்தேன். இக் கடிதத்தைக் கண்ட என் தகப்பனார் உடனே புறப்பட்டு சென்னைக்கு வந்து என்னை அழைத்துக்கொண்டு போனார். போகிற வழியில் திண்டுக்கல் பக்கத்தில் புகைவண்டி கவிழ்ந்து விட்டது. அதில் என் தகப்பனார் அகால மரண மடைந்தார். ஆனால் துரதிருஷ்டசாலியான நான் இறக்கவில்லை.'

இவ்வளவும் சொல்வதற்குள் கார்த்திகேயனின் கண்களி லிருந்துக் கண்ணீர் மளமளவென்று வடியலாயிற்று. அவன் குரலும் தளர்ந்தது உதடுகள் துடித்தன. அதற்குமேல் அவனைத் தொந் தரவு செய்வதற்கு என் மனம் இடங்கொடுக்கவில்லை. ஆனால் என் மனைவி ஆவலோடு 'அதற்குப் பிறகு?' என்று கேட்டாள். கார்த்தி கேயன் துக்கத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு :—

'எனக்கு ஒரே ஒரு தங்கை உண்டு. அவள் பெயர் புஷ்பவல்லி. என் தகப்பனார் இறக்கும்போது அவளுக்கு வயது பதினைன்கு. அவள் ருதுவாகி வீட்டில் இருந்து வந்தாள். என் தகப்பனார் இறந்து மூன்று மாதங்களில் என் படிப்பும் முடிவடைந்தது. முதலில் நான் மதுரைக்கு வந்து என் தங்கையை நல்ல இடம் பார்த்துக் கலியாணம் செய்து கொடுத்தேன். ஆனால் நான் யாரையும் கலியாணம் செய்து கொள்ளவில்லை. பவானி சென்னையில்தான் படித்துக் கொண்டிருந்தாள். புஷ்பவல்லியின் கலியாணத்திற்குப் பின் நான் சென்னைக்குச் சென்று ஒரு பிரபல வக்கீலின்கீழ் ஜூனியராக வேலை பார்த்து வந்தேன். இந்நிலைமையில் புஷ்ப் வல்லிக்குப் பைத்தியம் பிடித்து அவள் ஒரு நாள் திடீரென்று ஒரு கிணற்றில் விழுந்து இறந்து போனாள்' என்றான்.

கார்த்திகேயனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தது. அவனால் மேலே பேச முடியவில்லை. நானும் ஜானகியும் அவனைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தோம். கார்த்தி கேயன் எழுந்து வெளியே போய் கண்ணீரை நன்றாகத் துடைத்து விட்டு வந்து கதையை ஆரம்பித்தான். புஸ்பவல்லியின் மரணத் திற்குப் பிறகு நான் பவானியைக் கலியாணம் செய்துகொண்டு சென்னையில் சுகமாக வாழ்ந்து வந்தேன்' என்றான் கார்த்திகேயன். 'பெண்சாதியைப் பறிகொடுத்த துக்கம்' என்று சொல்வார்களே அது அவனுடைய முகத்தில் காணப்பட்டது. அவனுடைய முகம் பார்ப்பதற்கு மிகவும் பயங்கரமாக இருந்தது. மறுவினாடியில் அவன் முகம் விகாரமடைந்தது. அவன் திறுதிறுவென்று கண்களை உருட்டிக்கொண்டு சிறிது உரத்த குரலில் :—

'ஒரு பெண்ணைப் பலவந்தப்படுத்திக் கற்பை அழிப்பதென் பதை நாம் சர்வ சாதாரணமாக நாவல்களிலும் கட்டுக் கதை களிலும் பார்க்கிறோம். அது என் பவானியின் விஷயத்தில் உண்மை யாகவே நடந்து விட்டது' என்றான்.

இதைக்கேட்டு திடுக்கிட்ட ஜானகி துக்கத்தால் தலை குனிந் தாள். அவளுடைய கண்களிலிருந்து மளமளவென்று ஏழெட்டுத் துளிகள் கீழே விழுந்தன. அவள் தன் கால் விரலினால் அக் கண்ணீரைத் தொட்டுத் தரையிலேயே 'என்ன உல....' என்று

எழுதினள். இரண்டாவது வார்த்தையாகிய 'உலகம்' என்பதைச் சரியாக எழுதுவதற்குப் போதுமான கண்ணீர் இல்லாததினல் 'உல' என்று மட்டும் எழுதிவிட்டு மீதியுள்ள எழுத்துக்களை வெறும் விரலாலேயே எழுதினள். நான் அதைக் கவனித்துக் கொண்டிருந்ததற்குக் காரணம் நானும் அப்பொழுது தலை குனிந்திருந்ததே. 'என்ன உலகம்!' என்று என்னையறியாமலே என் வாய் உளறிற்று. கார்த்திகேயன் இன்னும் உரத்த குரலில் 'இச் சம்பவமே, நான் என் ஊனக் கண்ணினல் சம்பாதித்த அறியாமையை அகற்றி என் ஞானக் கண்ணைத் திறந்தது' என்று சொல்லிவிட்டுச் சிரித்தான். அவன் திடீரென்று சிரிப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்த நான் 'எப்படி?' என்று கேட்டேன். அதற்கு அவன் என்னை நோக்கி:—

'ஒரு நாள் சாயங்காலம் என் மனைவி லேடீஸ் கிளப்புக்குப் போயிருந்தாள். சாதாரணமாக எல்லா நாட்களிலும் அவள் இரவு எழு மணிக்கெல்லாம் வீடு திரும்பி விடுவாள். ஆனல் அன்று இரவு பத்து மணி வரைக்கும் அவளைக் காணவில்லை. நான் முதலில் லேடீஸ் கிளப்புக்குச் சென்று பார்த்தேன். அவளைக் காணவில்லை. பிறகு நான் அவளுடைய பல சிநேகிதிகளின் வீடுகளுக்கும் சென்று அவளைத் தேடிப் பார்த்தேன். ஒரு இடத்திலும் காணவில்லை. சரியாகப் பதினெரு மணிக்கு வீடு திரும்பினேன். வீட்டில்வந்து பார்க்கும்பொழுது பவானி தெருத் திண்ணையில் குற்றுயிராகப் படுத்திருந்தாள். நான் அவளருகில் சென்று 'ஏன் இப்படிப் படுத்திருக்கிருய்?' என்று கேட்டேன். 'உலக நாடகத்தில் கற்பழிவது ஒரு சிறிய பயங்கரமான சீன். அதை நடிக்க வேண்டியவர் நடித்தே யாகவேண்டும்' என்று சொல்லிவிட்டு அவள் இறந்து போனள். அவளுடைய கடைசி வார்த்தைகளே என்னை இரட்சித்தன. இம் மாய உலகத்தை நான் அறவே மறந்தேன். அவ்வாறு மறப்பதும் உலக நாடகத்தில் ஒரு சீன்தானே. அதை நான் அவசியம் நடித்துத் தானே யாகவேண்டும்' என்று சொல்லிவிட்டுக் கார்த்திகேயன் திடீரென்று எழுந்து வெளியே ஓடிவிட்டான். நானும் என் மனைவியும் மௌனமாக சிறிது நேரம் வரையில் உட்கார்ந்திருந்தோம். பிறகு என் வாய் என்னை யறியாமலே 'வாழ்வாவது மாயம்' என்று பாட ஆரம்பித்தது. அப்போது ஜானகி 'போதும் போதும் நீங்களும் சந்நியாசியாக வேண்டாம். உலக நாடகத்தில் தம்பதிகள் சந்தோஷமாக இருப்பதும் ஒரு சீன். அதை நடிக்க வேண்டிய நாம் நடித்தே யாகவேண்டும்' என்று சொல்லி என் கையைப் பிடித்து இழுத்தாள். நான் பாட்டைச் சட்டென்று நிறுத்திக் கொண்டு ஜானகியுடன் சமையற் கட்டுக்குப் போனேன்.

# காதல் மணம்

[புதுவை - எஸ். சிவப்பிரகாசம்]

(*நேரிசை யொத்தாழிசைக் கலி)

திரையாருங் கருங்கடலில் திசைகண்டு கலன்செலுத்தும்
புரையில்லா மனமுடைய புகழ்வாய்ந்த மாலுமிபோல்,
அறியாமை உலகத்தை அறிவுடைமை யாக்குதற்கு
முறையானே செயல்புரிந்து முனைந்துழைக்குந் தலைவரெலாம்
நிறைகாதற் றிருமணங்கள் நிலவுலகில் தழைகவென்றார்!

நாட்டினது நலனழித்து நமதிடையே பிளவுறுத்தி
வாட்டுகின்ற கொடும்பேதம் வலிகுன்றி மாயாவோ?
மாட்சியுறு நற்காதல் மணம்புரிந்தால் தோழர்களே!

வேம்பெனவே கசக்கின்ற விதியமைந்த வாழ்க்கையெலாம்
தேம்படுநற் கனிபோன்று தித்திக்கச் செய்யாவோ?
ஏமஞ்சார் நற்காதல் மணம்புரிந்தால் தோழர்களே!

அன்புடைய மனத்தினதாய் அயல்பிரியச் சகியாத—
என்றென்றும் இனிதுவக்கும் அன்றிற்போல் வாழீரோ?
வண்மையுறு நற்காதல் மணம்புரிந்தால் தோழர்களே!

எனவே நீர்,

இன்புற்று வாழ்வில் இனிது களிப்பதற்கு
அன்புடைக் காதல் மணமது புரிவீர்!
தீயன வெல்லாம் மாயும்!
தூய வாழ்வில் சுகமடை வீரே!

[*இது, தரவு—தாழிசை—தனிச் சொல்—சுரிதகம் என்னும் நான்
குறுப்புக்களால் முடிவது.]

# முதலாளித் தன்மையின் அந்திய காலம்

[தோழர்கள் G. Bonnet, Trigoulan
எழுதிய பிரஞ்சு நூலின் மொழி பெயர்ப்பு]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

## முதலாளி வர்க்கத்தால் உண்டாகும் முரண்பாடுகள்

இன்றைக்கு, உற்பத்தி செய்வித்துக் கொண்டிருக்கும் சமூக மானது எந்த முறையில் வைக்கப்பட்டிருக்கிறதென்றால், ஒரு பெரிய கூட்டம் வேலை செய்வதும், மற்றொரு சிறிய கூட்டம் அந்த வேலையின் பலனைச் சுரண்டுவதுமாக இருக்கின்றது. முதலாளி அரசாங்கத்தில் அநேக தொழிலாளிகளின் ஒற்றுமையாலும், பலத் தாலும், முயற்சியாலும் சாமான்கள் செய்விக்கப் படுகின்றன. இந்தச் சாமான்களெல்லாம் ஒரு தனி முதலாளி வசத்தில் இருக் கின்றது. இந்த உற்பத்தியைத்தான் முதலாளிகளின் சொத்து என்று கூறுகிறார்கள். அந்த உற்பத்தியை எவ்விதமாகப் பிரிக் கின்றார்கள் என்றால், உழைத்துக் கஷ்டத்தை அநுபவிக்கும் தொழி லாளிக்கு ஒரு சிறு பங்கும், (கூலியும்) சோம்பேரியாக இருக்கும் முதலாளிக்கு ஓர் பெரிய பங்குமாகப் பிரிக்கப் படுகின்றது.

முதலாளிவர்க்கம் வலிவடைவதனால் ஆலைகள் யந்திரங்கள் உற்பத்தி சாலைகள் அனைத்தும் பல்லாயிரக் கணக்கான பாட்டாளி மக்களின் உழைப்பை எதிர்பார்த்த வண்ணமாக இருக்கின்றன. இன்றைக்கிருக்கும் சமூகக் கட்டுப்பாடு அழிவது மாத்திரமா? வேறொரு கட்டுப்பாடு தோன்றாமல் இருக்கப் போவதில்லை. இனி வரும் சமூகத்தின் நிலைமையைக் குறித்து என்ஜெல்ஸ் சொல்லி யிருப்பதாவது :

நூல், துணி, உலோகத்தினால் செய்யப்படும் பொருள்களெல் லாம் ஓர் தொழிலாளியால் செய்யப் பட்டதல்ல. எந்தத் தொழி லாளியும் ஒரு குண்டூசியைப் பார்த்தவுடன் இதை நான்தான் செய் தேன் என்று சொல்வதற்கில்லை. ஒரு பொருள் செய்யப்பட வேண்டு மானால் அது அநேக கைகள் மாறவேண்டும். நாளை வரப்போகும் சமூகத்தில் வகுப்பு வாதத்திற்கு இடமிராது. ஆனால் வர்க்கப்போர் தலைவிரித்தாடும். அதுதான் முதலாளி ப்ரச்னை.

ஓர் பெரிய சமூகத்தால் செய்விக்கப்படும் பொருள்கள் அநேக விதமாகவும் ரகங்களாகவும் இருந்த போதிலும் முடிவு என்னமோ ஒன்றுதான். சமூக உற்பத்திகள் எல்லாம் ஓர் வெள்ளம்போல் வந்த போதிலும் ஒரு சிறிய முதலாளிக் கூட்டத்தின் கையில்தான்

அடங்கும். இந்த முதலாளிகட்கு நாம் உற்பத்தி செய்யும் பொருள் கள் சொந்தம். இந்த உற்பத்திப் பொருட்களைச் சமூகத்தின் கையில் ஒப்படைக்க வேண்டுமே தவிர, ஒரு சிறு சோம்பேரிக் கூட்டத்தினிடத்தில் ஒப்படைப்பது மிகவும் பாதகமான காரியம். இதைத்தான் முதலின் முரண்பாடுகள் என்றும், உற்பத்திப் பொருள்களுக்கும் சொத்துக்குமிருக்கும் முரண்பாடுகள் என்றும் சொல்லுவார்கள். இதிலிருந்து அநேகவித முரண்பாடுகள் தோன்று கின்றன. முதலாளிகளின் சமூகம் முதலின் பெருக்கத்தால் அழிந்து கொண்டே போகின்றது. காண்ட்ராக்டுகளினாலும் சமூக உற்பத்தியினாலும் சமூக வேலையின் லாபமெல்லாம் ஓர் தனி மனிதனின் உரிமையாகவும் சொத்தாகவும் மாறிவிடுகின்றது. இதனால் இரண்டுவித வர்க்கங்கள் தோன்றுகின்றன. ஒன்று முதலாளி வர்க்கம். இந்த வர்க்கப் போரிலிருந்து முதலாளிக்கும் தொழிலாளிகட்கும் பிணக்குகள் ஏற்படுகின்றன. முதலாளிகள் அரசாங்கத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் எல்லாம் ஒரு தனிப்பட்ட முதலாளிக்குச் சொந்தமே தவிர சமூக முழுதும் சொந்தமல்ல. ஒழுங்கு தவறாமல் உற்பத்திப் பொருட்களெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. வேலையின் பொறுப்பையும் திட்டத்தை யும் யந்திரங்கள் உண்டுபண்ணுகின்றன. இதனால் வேலைகளின் மதிப்பு சமூகத்தின் அந்தஸ்தையும், உற்பத்தி செய்யப்பட்ட பொருளையும், காண்ட்ராக்டையும் பொறுத்திருக்கின்றது.

ஆயினும், ஆலை உற்பத்தியின் ஒழுங்கு சமூகத்தின் ஒழுங்கை யும், கட்டுப்பாட்டையும், பொறுத்ததல்ல. உற்பத்தி செய்யும் ஒவ்வொரு முதலாளியும் ஒவ்வொரு பணக்காரனும் லாபத்தைக் கருதியே உழைக்கின்றான். வியாபாரியின் பொருளாதாரத்தை என்ஜெல்ஸ் எடுத்துக் காட்டி விவரிக்கிறார் :

ஒவ்வொரு முதலாளிக்கும் எவ்வளவு சரக்குகள் மார்க் கட்டுக்குஅனுப்ப வேண்டும் என்று தெரியாது. எவ்வளவு தேவை யிருக்கிறது என்று கண்டறிவது கடினம். சரக்குகள் எல்லாம் விற்கவோ அல்லது வாங்கவோ போதிய நம்பிக்கை அவனுக்கு இல்லை. சமூகத்தில் உற்பத்தி முரண்பாடுகள் தாண்டவமாடுகின்றன.

ஒவ்வொரு முதலாளியும் மற்றவனை ஒழிக்க வேண்டி அதிகப் பொருள்களைச் செய்து குவித்து விடுகின்றான். பெரிய முதலாளி சின்ன முதலாளியை நசுக்க விரும்புகிறான். பெரிய மிராசுதாரன், எளிதாக நசுக்கி விடுகின்றான். பெரிய மிராசுதாரன் தன் பொருளைக் குறைந்த விலைக்கு விற்க முடிகிறது. அவனிடத்தில் உழுகின்ற யந்திரம் பெரிதாக இருக்கிறது. செழுமையான பூமி இருக்கிறது. அதனால் அதிக உற்பத்தியை எளிதாகச் செய்ய முடிகிறது.

எதிரியை முறியடிக்கும் வண்ணம் பெரிய முதலாளிதான் நாட்டில் சரக்குகளை நயமாக விற்கமுடியும். எதிரியின் வாழ்க்கைக்காரரைக் கைப்பற்றியவுடன் மறுபடியும் விலையை உயர்த்திவிடவும் அவனுக்குத் தெரியும். காரணமில்லாமலா மார்க்ஸும், ஏன்ஜெல்சும் 'சரக்கின் விலைக் குறைவு பணக்காரர்களின் பீரங்கி' என்று எழுதினார்கள்?

மார்க்கட்டுக்காக முதலாளிகள் சண்டை யிடுவதைப் போட்டியென்று சொல்வார்கள். முதலாளியின் பொருளாதாரத் திட்டத்தினுடைய முக்கிய குறிப்பு இதுதான். உற்பத்தியினால் சமூகத்தில் விளையும் அனர்த்தங்களெல்லாம் போட்டியால்தான்.

முதலாளி ஆதிக்கத்தால் பாமர மக்கள் ஏழையாகி விடுகின்றார்கள்.

லாபம் எப்போதும் முதலாளி வர்க்கத்தைத் தூண்டிக் கொண்டே இருக்கிறது. புதிய யந்திரங்களும் கையாளப்படுகின்றன. சம்பாதித்த பணத்தைக்கொண்டு இன்னும் அநேக கட்டிடங்களும், ஆலைகளும் கட்ட வேண்டியதாகிறது. இதனால் பெரிய முதலாளி சிறிய முதலாளியை அதிசீக்கிரத்தில் வென்று விடுகிறான். சின்ன முதலாளி பெரிய முதலாளியோடு போட்டிபோட முடியாமல் ஏழையாகி விடுகிறான். பள்ளத்தில் பணங் குவிகின்றது. மற்றொரு பள்ளத்தில் உற்பத்தி செய்பவரின் கும்பல் காணப்படுகிறது. சில முதலாளிகள் கையில் இத் தேசத்தின் பணமெல்லாம் அடங்கிவிடுகின்றது. உற்பத்திப் பொருள்கள் அதிகரிக்கும்போது முதலாளியின் முதல் அதிகரிப்பதுமல்லாமல் சின்ன முதலாளி தொழிலாளியாக மாறி விடுகிறான். இந்தவிதமான உற்பத்திக்கு ஆயுதப் பிரயோகந்தான் காரணம். (தொடரும்)

---

மாஜிஸ்ட்ரேட்:—(கைதியிடம்) அடே! 50 ரூபாயா அல்லது 6 மாத கடுங்காவலா. இவற்றில் எது தேவை?

கைதி:—ஐயா! நல்லாரிப்பீங்க. 50 ரூபா கொடுத்தா ரொம்ப சவுக்கியமா யிருப்பேன். —S. சேதுராமலிங்கம்

கடிகாரம் வாங்கியவர்:—ஸார் ஏன் உங்கள் கெடிகாரம் தினந் தோறும் குண்டுக்கு ஐந்து நிமிஷம் அதிகமாக ஓடுகிறதே.

கடிகார கம்பெனிகாரர்:—ஏன் நீங்கள் குறுக்கே நின்று நிறுத்தகூடாது? —வேலூர் V. P. முனிரத்தினம்

கிருஷ்ணமூர்த்தி:—(உரத்த குரலில்) சந்திரா எப்படிடா 25 ரூபாயிலே நீ குடித்தனம் பண்ணறே?

சந்திரன்:—(மெல்லிய குரலில்) உஸ் கத்தாதே. என் ஆம்படையாளுக்கு என் சம்பளம் 20 ரூபாயின்னுதான் சொல்லி யிருக்கிறேன். —S. V. K. சபாபதி




## தேவலோகம் சென்ற சிறுமி

[என். மீனாக்ஷிசுந்தரம்]

ஒரு சிறு பெண் தன் நாயுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். அவளுக்கு வேறு யாரும் கிடையாது. அவள் தாயார் பிறந்ததும் இறந்துவிட்டாள். தகப்பனும் மீன் பிடிக்கும்போது படகு கவிழ்ந்து தண்ணீரில் விழுந்து இறந்து விட்டான். ஆதலால் அவளுக்கு அந்த நாய்தான் விளையாட்டுத் தோழனாகவும் துணையாகவும் இருந்தது. ஒரு பெருத்த சத்தம் கேட்டு நாயும் அவளும் திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள். ஒன்றும் தெரியவில்லை. சத்தம் வரவர அதிகமாகிக்கொண்டு வந்தது. மேல் நோக்கி வானத்தைப் பார்த்தாள். ஒரு பெரிய பக்ஷி பறந்து கீழே வந்து கொண்டிருந்தது. அவ்வளவு பெரிய பக்ஷியை அவள் பார்த்ததே இல்லை. ஆச்சரியத்துடன் அவள் பார்த்துக்கொண்டு நின்றபோது, அந்தப் பக்ஷியும் தரையில் இறங்கி வந்து உட்கார்ந்தது. அதிலிருந்து ஒரு தேவதூதன் இறங்கி நடந்து வந்தான். அவன் தேவதூதனானபடியால் பால் நிறமாக இருந்தான்.

அந்தத் தூதன் அவளிடம் வந்து ஏதோ கேட்டான். அந்தப் பாஷை அவளுக்குப் புரியவில்லை. தலையை ஆட்டினாள். உடனே அவன் அவளையும் அந்த நாய்க் குட்டியையும் தூக்கிக் கொண்டு போய் அந்தப் பக்ஷியின்மேல் உட்காரவைத்துத் தானும் உட்கார்ந்து கொண்டான். அவன் ஏதோ மந்திரம் ஜபிக்கவே அந்தப் பக்ஷி விர்ரென்று கிளம்பி மேலே போயிற்று. அந்தச் சிறுமி பயத்தால் கண்களை மூடிக்கொண்டாள். அந்சப் பக்ஷியும் மேலே மேலே ஆகாயத்தில் பறந்து போய்க்கொண்டே இருந்தது. அது மேலே போகப் போக அவளுக்கு மயக்கம் வந்து அப்படியே படுத்துத் தூங்கிவிட்

டாள். எவ்வளவு நேரம் ஆகாயத்தில் இருந்தோமென்று அவளுக்குத் தெரியாது. ரொம்ப நேரம் கழித்துக் கண்களைத் திறந்தாள். பக்ஷியும் தரையில் வந்து நின்றது.

உடனே ஒரு பெட்டி ஒன்று ஓடிவந்து அந்தப் பக்ஷியினிடம் நின்றது. அந்தத் தேவதூதன் இவளையும் அந்த நாய்க் குட்டியையும் தூக்கி அந்தப் பெட்டிக்குள் வைத்துவிட்டுத் தானும் உட்கார்ந்து ஏதோ மந்திரம் ஜபிக்கவே அது ஓட ஆரம்பித்தது. ரொம்ப வேகமாக ஓடிற்று. அவள் அதில் போகும்போது அவளுக்கு மரங்கள், மாடுகள், வீடுகள் எல்லாம் அந்தப் பெட்டியுடன் ஓடிக்கொண்டிருந்ததுபோல் தெரிந்தது. பெட்டியும் ஒரு பெரிய மாளிகையின் முன்பு வந்து நின்றது. அவ்வளவு பெரிய மாளிகையை அவள் அதற்குமுன் பார்த்ததே கிடையாது. அதன் உயரத்தைப் பார்த்தாள். அந்த மாளிகை ஆகாயத்தையும் பூமியையும் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. அந்தத் தேவதூதன் அவளைப் பெட்டியிலிருந்து இறக்கி அந்த மாளிகையின் ஒரு அறையில் உட்கார வைத்துத் தானும் உட்கார்ந்து கொண்டான். அந்த அரை இவர்களுடன் மேலே போக ஆரம்பித்தது. சிறுமிக்குப் பயம் அதிகரித்தது. அது மேலே மேலே போய் கொஞ்ச நேரமானதும் நின்றது. தேவதூதன் அவளை வேறு ஒரு அறைக்கு அழைத்துப் போய் மெத்தென்ற ஒரு கட்டிலின்மேல் உட்கார வைத்தான். எதிரில் ஒரு மேஜையின்மேல், இவள் பார்த்திராத அநேக தேவலோகப் பழங்களும், பாலும் இன்னும் அநேக தின்பண்டங்களும் இருந்தன. ஒவ்வொன்ருக எடுத்து ருசி பார்த்தாள். அதற்குள்ளாகவே வயிறு நிரம்பிவிட்டது. அங்குள்ளவைகளெல்லாம் வெள்ளியினுலும், தங்கத்தினுலும் செய்து பளபளவென்று இருந்தது. தேவதூதன் அடிக்கடி அவளை வந்து பார்த்துக் கொண்டான். அவன் பேசினது அவளுக்குப் புரியவில்லை. அவள் பேசினது அவனுக்குப் புரியவில்லை.

கொஞ்ச நேரமானதும் தூக்கம் வரவே அந்தக் கட்டில்மேல் படுத்து நன்ருகத் தூங்கிவிட்டாள். தூங்கி எழுந்ததும் அங்குள்ள ஒவ்வொரு சாமானைகத் தொட்டுப் பார்த்தாள். சுவற்றில் கையை வைத்தாள். உடனே ஒரு தேவதை வந்தது. அரை முழுவதும் கண்ணைக் கவரும் பிரகாசமாய் விட்டது. சிறுமி ஆச்சரியப்பட்டு அவளை உற்றுப்பார்த்துப் பேசலானுள். ஆனுல், பதில் கிடைக்கவில்லை.

பக்கத்தில் ஒரு அறை தெரியவே அங்கு சென்று பார்க்கலாம் என்று சிறுமி உள்ளே சென்ருள். அங்கு ஒரு வஸ்து இருந்தது. எதையும் பார்த்து அறிந்துகொள்ள ஆவல் கொண்ட அச் சிறுமி அதை அப்படியும் இப்படியும் திருப்பிப் பார்த்தாள். உடனே ஒரு தேவதை வெளிவந்தது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் உள்பூராவும் தண்ணீர் நிறம்பிவிட்டது. சிறுமி தன்னுலானமட்டும் அந்த

தேவதையைப், போகும்படி கெஞ்சினுள். ஆனுல், அது போகவில்லே. அப்பொழுது, தண்ணீர் அந்தச் சிறுமியை முழுகச் செய்துவிடும் போல் அரை முழுதும் நிரம்பியது. என்ன செய்வதென்று தெரியாமல் அழ ஆரம்பிக்கவே தேவதூதன் வந்து மந்திர ஜெபத்தால் தண்ணீரைப் போகச் செய்தான். அவளுக்குத் தேவலோகத்தில் ரொம்ப சௌக்கியமாயும் சந்தோஷமாயு மிருந்தது. எதைப் பார்த்தாலும் ஆச்சரியமாகவே இருந்தது. அந்த அறையில் ஒரு மாயப் பெட்டி ஒன்று இருந்தது. தேவதூதன் ஆக்ஞையால் அந்தப் பெட்டி பாடவும் பேசவும் ஆரம்பித்தது. சிறுமி பிரமித்து நின்ருள். பெட்டி ஓடுவதும், பாடுவதும் ஆச்சரியமில்லேயா ?

அவள் எதிரில் ஒரு தேவதை நின்றது. அது இவள் செய்வதையெல்லாம் செய்ய ஆரம்பித்தது. இவள் எழுந்தால் அதுவும் எழுந்தது. உட்கார்ந்தால் அதுவும் உட்கார்ந்தது. சிரித்தால் அதுவும் சிரித்தது. நீ யார்? என்னேப் பார்த்து ஏன் சிரிக்கிருய்போ. என்று கோபித்தாள். அதற்கும் கோபம் வரவே இவளேக் கோபிக்க ஆரம்பித்தது. சிறுமிக்கு அது பிடிக்கவில்லே. கோபத்துடன் ஒரு அடி கொடுத்தாள். தேவதை மறைந்து போய்விட்டது. ஆனுல், போகும்போது தன் கையில் நன்ருய்க் கடித்து இருந்ததைப் பார்த்தாள். இரத்தம் கொட்டி வலிக்க ஆரம்பித்தது. அழ ஆரம்பித்தாள். உடனே தேவதூதன் ஓடிவந்து சமாச்சாரத்தைத் தெரிந்துகொண்டு கைக்கு மருந்து போட்டான். சிறுமியும் தான் இனி ஒன்றையும் தொடுவதில்லே என்று தீர்மானித்தாள். பிறகு சிறுமி பெரியவளாகி விட்டாள். தேவதூதனின் பாஷையைக் கற்றுக்கொண்டாள். அவன் தேவதைகளேப் போகச் செய்யவும் வரச் செய்யவும் உள்ள மந்திரங்களேக் கற்றுக்கொடுத்தான். அவள் சொன்னபடி அவைகளும் செய்ய வாரம்பித்தன.

அவள் நன்ருய்ப் பெரியவளான பிற்பாடு, தான் தேவலோகம் எங்கும் போகவில்லே என்றும் உலகத்திலேயே ஒரு பாகமாக அமெரிக்க தேசத்துக்கு ஒரு அமெரிக்கனுல் தான் சிறுவயதாயிருந்தபோது ஆபிரிகாவிலிருந்து சினிமாவில் நடிப்பதற்காக ஏரோப்ளேனில் தூக்கிக்கொண்டு வரப்பட் டிருக்கிறேம் என்றும் தெரிந்து கொண்டாள். ஒன்றும் தெரியாமலிருந்த அந்த நீக்ரோப் பெண் ஒரு பிரபல சினிமா நடிகையாக மாறிவிட்டாள்.

குழந்தைகளே ! இதில் வரும் தேவதைகள் யார் என்று தெரியுமா? அவள் கண்ட பக்ஷிதான் ஏரோப்ளேன், கார், பெரிய கட்டிடங்களில் மேலே தூக்கிச் செல்லும் லிப்ட் என்னும் அரை, தண்ணீர்க் குழாய், எலக்டிரிக் லேட், ரேடியோ கண்ணுடி இவைகள் தான் அந்தத் தேவதைகள்.

---

# பொருத்தமற்ற தம்பதிகள்

[தண்டலம் கிருஷ்ணபுரம். G. கண்ணுசாமி கிராமணி]

தனத்தில் பெருத்த தனபால் பிரபு தாரங்கம்பாடி என்னும் ஓர் கிராமத்தில் ஆடம்பரமாக வசித்து வந்தார். அவருக்கு வயது 50 ஆகியும், தன் மனைவியை இழந்த பிறகு மறு விவாகமாக மங்கையற்கரசி என்னும் பதினொன்கு வயதுடைய மங்கையை மணந்து, அவர் இல்லறத்தை இன்பமுடன் நடத்த முயற்சி செய்தார்.

வாலிப வயதுடைய மங்கையற்கரசியின் இச்சையைத் தீர்க்க வயோதிகரான தனபால் பிரபுவால் முடியாமல் போகவே, மங்கையற்கரசி தன் கற்பை அந்நிய ஆடவனுக்கு அளிக்க அகமகிழ்ந்தாள்.

மங்கையற்கரசி, எதிர்வீட்டுக்காரனை எல்லப்பன் என்னும் வாலிபனைக் காதலித்து வந்தாள்.

தனபால் பிரபுவிற்கு நன்செய், புன்செய் நாற்பது ஏக்கர் நிலங்கள் இருந்தன. இவ்வாஸ்தியே அவ்விள நங்கையை மணக்க அவருக்குத் துணை கொடுத்தது. அவர் ஏழைக் குடியானவர்களை மிகவும் இம்சித்து வந்தார். அவர் தன் நிலங்களைக் குத்தகையாகக் குடியானவர்களிடம் விட்டிருந்தார். பயிர்த்தொழில் செய்கிறவர்களிடம் அவர் தயவு தாட்சண்யம் காண்பிப்பதில்லை. பயிர்கள் நன்றாக விளையாமல் போனாலும் அவர் குடியானவர்களிடமிருந்து குறிப்பிட்ட அளவு தானியங்களை வாங்கிக் கொள்வார். அவர் ஜனங்களிடமிருந்து நூற்றுக்கு மாதம் 1-க்கு ரூபாய் 2 வீதம் வட்டியாக வாங்குவார். வட்டி அசலுக்குமேல் ஏறினால் கடன்காரனுடைய சொத்துக்கள் தனபால் கையில் சர்க்கார் மூலமாக வந்து விடும்.

உதையக் காடு என்னும் கிராமத்தில் தனபால் பிரபுவின் நிலங்களில் ஐந்து ஏக்கர் நிலம் மட்டும் இருந்தன. அவ்வூரில் கருப்பன் என்பவன் பிரபுவின் நிலங்களைப் பயிரிட்டு வந்தான். அறுவடை காலம் வந்தபடியால் கருப்பன் தனபால் பிரபுவை ஒரு நாள் வரவழைத்தான்.

தனபால் பிரபு மாட்டு வண்டியில் ஏறிக்கொண்டு, தானே வண்டியை ஓட்டி வந்தார். அவர் உதையக்காடு கிராமத்தின் வீதி வழியாக வரும்போது, அவ்வூர் கிராம முன்சீப்பின் மகளைக் கண்டு எப்படியாவது அவளை யடையத் தீர்மானித்தார். முன்சீப்பின் மகள் இருபது வயது நிரம்பப் பெற்று அழகே உருவெடுத்த ஆரணங்கு.

'கருப்பன் ஒருவனால்தான் நம்முடைய காரியம் நிறைவேறும். அவன் அப் பெண்ணை என்னிடம் சேர்த்தால் அவனுக்கு 50 ரூபாய்

கொடுப்பேன். என் மனைவி என்னிடம் சரியாக நடந்துகொள்வ தில்லை. காரியத்தை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும்' என்று தன் உள்ளத்தில் நினைத்துக்கொண்டே கருப்பன் அறுவடை செய்யும் நிலத்தண்டை பிரபு வந்தார்.

சில மணி நேரத்திற்குள் நெல் அறுவடையானது. அறுவடை யான நெல்லை, பிரபு கருப்பனுக்கே கொடுத்துவிட்டார். பிரபு கருப்பனிடம் பெண் விஷயத்தைக் கூறினர்; 50 ரூபாய் கருப்ப னிடம் கொடுத்தார்.

கருப்பன்:—எஜமான் அது பெரிய எடத்துப் பெண்ணுங்கோ. இன்னுங் கலியாணங்கூட ஆவலிங்க. சரி; இன்னிக்கி ராத்திரிக்கி உங்க கையிலெ சிக்க வைக்கிறேங்க.

பிரபு:—கருப்பா! ரொம்ப சந்தோஷம். நான் இங்கேயே இருக்கிறேன். நீ போய் நடக்க வேண்டிய விஷயத்தைக் கவனி!

கருப்பனுக்கும் கிராம முன்சீப்புக்கும் சிநேகம் அதிகரித் திருந்தபடியால், கருப்பன் முன்சீப்பிடம் பிரபு கூறியதைத் தெரியப் படுத்தினன். இருவரும் பிரபுவின் கர்வத்தை அடக்கத் தக்க ஏற்பாடு செய்தார்கள். கிராம முன்சீப்பு, பெண் வேடம் தரித்த ஒருவனை வீட்டின் பின்புறத்தில் உள்ள தோட்டத்தில் குறித்த நேரத்திலிருக்கக் கட்டளையிட்டார். இரண்டு ஆட்களைத் தடிக் கம்புகளுடன் தோட்டத்தில் ஒளிந்திருக்க உத்திரவிட்டார்.

இரவு 11 மணியானதும், கருப்பன் பிரபுவை அழைத்துக் கொண்டு போலிக் கன்னிகை யிருக்குமிடத்தண்டை வந்தான். பிரபு கன்னிகையைப் பார்த்து, 'என் கண்ணே! என்கூட வருகிறுயா?' என்றார். போலிக் கன்னிகை, 'திருடன், திருடன்' எனக் கூக்குரலிடவே, பக்கத்தில் பதுங்கி யிருந்த இரு ஆட்களும் பிரபுவைப் பிடித்து நையப்புடைத்தார்கள். கருப்பன் ஓடிவந்து, 'பிரபுவை அடிக்க வேண்டாம்' என்று சொல்லவே அவர்கள் பிரபுவை அடிக்காமல் பிடித்துக் கொண்டார்கள்.

கிராம முன்சீப்பு, பிரபுவைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனர். அவர் பிரபுவைக் கைதி செய்வதாக பிரபுவிற்கு அறிவித்தார். பிரபு, தான் திருடன் அல்லவென்றும், தன்னை விட்டு விட்டால் தன் நிலங்களைக் கருப்பனுக்கே கொடுத்து விடுவதாகவும், முன்சீப்பினிடம் கூறினர். பிரபு தான் செய்தது பிசகு என்று ஒத்துக் கொண்டார்.

போலிக் கன்னிகையாய் இருந்தவன் முன்சீப்பு வீட்டில்போய் ஒளிந்து கொண்டான். அன்றிரவே, பிரபு அவ்வூரில் உள்ள நிலங் களை மட்டும் கருப்பன் பெயருக்கு எழுதிக் கையொப்ப மிட்டார். தான் அணிந்திருந்த ஆபரணங்களைத் தன்னை அடித்த ஆட்களுக்குக்

கொடுத்துவிட்டார். அவர் அவ்வூருக்கு இனிமேல் வருவதில்லை யென்று முன்சீப்புக்குக் கூறிய பிறகு தன் வீடு நோக்கிப் பிரயாணமானர்.

பிரபு அடிபட்ட அதே இரவு கள்ளக் காதலில் ஈடுபட்ட எல்லப்பன் மங்கையற்கரசியிடம் சென்று, நயமாகப் பேசி, அவளுடைய ஆபரணங்க ளெல்லாவற்றையும் அவளிடமிருந்து பெற்றுக்கொண்டு திருடன் வந்து கொள்ளை அடித்ததுபோல் பாவனை செய்து, கதவுகளுக்குத் தாழ்ப்பாள் போடுமிடங்களைத் துவாரமாகச் செய்து, தன் வீட்டுக்கு அவ்விரவிலேயே போய் விட்டான். சிறிது நேரங் கழித்து மதம் பிடித்த மங்கையற்கரசி திருடன் வந்து தன் நகைகளைத் திருடிக்கொண்டு போய்விட்டான் என்று பாசாங்கு செய்து கூக்குரலிடவே, கிராம ஜனங்கள் அவ்விடம் ஓடிவந்தார்கள். திருடன் அகப்படாமையால் ஜனங்கள் தத்தம் இல்லத்திற் கேகினர்.

தனபால் பிரபு இரவு மூன்று மணிக்கு தன் இல்லத்திற்கு வந்தார். அவர் தன் மனைவியின் ஆபரணங்கள் திருடனுல் கொள்ளையடிக்கப்பட்டனவென்று தன் மனைவியின் மூலமாகத் தெரிந்து கொண்டார். அவர் தன்னையும் திருடர்கள் அடித்தார்களென்று தன் இல்லாளுக்கு அறிவித்தார்.

நாட்கள் பல கழிந்தபின்னர் மங்கையற்கரசி தன் புருடனை ஏமாற்றி எல்லா ஆஸ்திகளையும் தன் பெயருக்கு எழுதி ரிஜிஸ்டர் செய்து கொண்டாள். ஓர் திங்கள் ஓடிமறைந்த பிறகு அவள் தன் கணவனுக்கும் தனக்கும் யாதொரு பாத்தியமுமில்லை என்று நியாயஸ்தலத்தில் சென்று விவாகரத்துச் செய்து கொண்டாள்.

மங்கையற்காசி முன்பு காதலித்து வந்தவனை நிராகரித்துவிட்டு வேருெரு வாலிபனைக் காதலித்து வந்தாள். எல்லப்பனுக்கும் மங்கையற்கரசிக்கு மிடையே காதல் பகை மூண்டது.

மங்கையற்கரசி தன் நகைகளை எல்லப்பன்தான் திருடி யிருப்பான் என்று போலீசுக்கு அறிவித்தாள். எல்லப்பன் வீட்டில் நகைகள் அகப்படவே எல்லப்பன் போலீசாரால் கைதி செய்யப் பட்டான். எல்லப்பன் இரண்டு வருடங்கள்வரை சிறையிலிருக்க நேர்ந்தது.

இரண்டு ஆண்டுகளுக்கப்பால் எல்லப்பன் விடுதலையானுன். அகங்காரம் பிடித்த மங்கையற்கரசி எல்லப்பனுல் கொலை செய்யப் பட்டாள். எல்லப்பனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது!

தனத்தை யிழந்த தனபால் பிரபு, மனவேதனையாலும் உடம்பின் அசௌக்கியத்தாலும் நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

# இலங்கை

[தேவகோட்டை ஸ்ரீ V. இராமநாதன்]

(சென்ற இதழ் தொடர்ச்சி)

உம்! எடுங்கள் மூட்டையை! வாருங்கள் திருக்கேதீஸ்வரத்திற்கு! அதோ தெரிகிறதே மன்னார் ஸ்டேஷன் அதில்தான் இறங்க வேண்டும்! இரயில்வே நிலையத்தில் இரட்டை மாடுகள் பூட்டிய வாகனங்கள் எப்பொழுதும் தயார்! அதில் ஏறிக் கொண்டால் இரண்டு மைல் தூரத்தில் மன்னார் ஊருக்குள் செல்வது மிகச் சுலபம். வண்டிச் சத்தம் அரை ரூபாய்தான். அங்கிருந்து ஆலயம் சுமார் ஆறு மைல்களுக்கப்பால் உளது. ஆலயம் இருக்குமிடத்தையும் அதைச் சார்ந்த வெளியையும்தான் திருக்கேதீஸ்வர மென்றழைக்கின்றார்கள்.

திருக்கேதீஸ்வரர் என்பது சுவாமியின் பெயர். கௌரி என்பது அம்மனின் பெயர். ஆலயம் மிகமிகப் பழமையான நிலையிலிருக்கிறது. தற்பொழுது கொழும்பு நகரத்தார்கள் தங்கள் செலவில் பூஜை முதலியன நடாத்தி வருகிறார்கள். இப்பொழுது அங்கு வேறு வீடு வாசல்களோ குடி யிருப்புக்களோ கிடையாது. கோயில் சம்பந்தமான இரண்டொரு பழய கட்டிடங்கள் மட்டுமே உள. முன்பு ஒரு நல்ல ஊராக இருந்ததென்றும், மண்மாரி பெய்து நகர் அழிந்து விட்டதென்றும் சொல்கிறார்கள். ஏகாங்கியாக இருக்க விரும்புவோர்க்கு அது ஒரு ஏற்ற இடமெனப் பார்க்கும் எவரும் துணிந்து கூறுவர். அதைச் சார்ந்த நிலத்தில் நெற்பயிர் விளைவதாகத் தெரிகிறது. வேண்டிய வேறு பொருள்களை மன்னாரிலோ அல்லது கிடைக்கும் மற்ற இடங்களிலோதான் கொள்ள வேண்டும்.

அடுத்த ஸ்தலத்தைத் திரிகோணமலை என்றும் திருக்கோணமலை (Trincomalie) என்றும் சொல்லுகிறார்கள். இது கொழும்பிலிருந்து 183 மைல்களுக்கப்பா லிருக்கிறது. நல்ல அழகிய இயற்கைத் துறைமுகம். ஆங்கிலேயே சர்க்கார் இலங்கைப் படைகளுக்கு இதனை முக்கிய ஸ்தானமாகக் கொண்டு Naval Place, Military ஆகியவைகளை இங்கு வைத்திருக்கிறார்கள்.

நகரத்திலிருந்து சுமார் 7, 8 மைல் தூரத்திற்கப்பாலுள்ள கின்னியா (Kinniya) என்ற இடத்தில் ஏழு வெந்நீர்க் கிணறுகள் (Seven Hot Wells) தரை மட்டத்திற்குமேல் தொட்டிகளாகக் கட்டப்பெற்று, பார்ப்பதற்கு நமது நாடுகளிலுள்ள ஆலயங்களில் அமைத்திருக்கும் தீர்த்தத் தொட்டிகள் போன்று இருக்கின்றன. ஒவ்வொரு தொட்டியும் ஒன்றிற்கொன்று மிகமிக அருகிலேயே இருக்கிறதெனினும் ஒரு தொட்டியின் ஊற்று

நீருக்கும் மற்றொரு தொட்டியின் ஊற்று நீருக்கும் உஷ்ண பேதமுண்டு. ஒன்று நன்றாகச் சுடும்; மற்றொன்று இலேசாகச் சுடும்; இன்னொன்று சுடவே மாட்டாது. இவ்வாறு பேதப்படும் ஊற்று நீரை ஸ்பரிசித்துப் பார்க்க வேண்டியது அவசியமே. இத்தண்ணீரில் சில உப்புக்கள் கலந்திருப்பதால் சுகாதாரத்திற்கு ஏற்றதென மக்கள் பலர் தினே தினே அங்கு வந்து குளித்துப் போகின்றனர். மேல் நாட்டவரில் சிலர் ஒரு வருஷத்தில் குறிப்பிட்ட கொஞ்ச காலத்தை சுகத்தின் பொருட்டு இங்கு கழிக்க வருகின்றனர். பொதுவாக இது உஷ்ண பூமி.

இது இவ்வாறாக, இனி சுவாமி தெரிசனத்திற்குச் செல்லுவோம். ஆலயங்கள் பல உள. அவற்றுள் டச்சுப் பழங்கோட்டையினுள் பந்தோபஸ்துடன் பதனமாக இருக்கும் கோணேஸ்வரர் தெரிசனம் விசேஷமே! அங்கு, யுத்தப் பேச்சு நிலவும் இக்காலத்தில் சர்வ சாதாரணமாகச் சென்று வர முடியாது. அதனால்தான் கோட்டையினுள் பந்தோபஸ்துடன் பதனமாக இருக்கும் கோணேஸ்வரர் என்று கூற வேண்டியதாயிற்று! முன்பெல்லாம் நினைத்தபொழுது போக இயலுமாம். நாங்கள் சென்றபொழுது வெள்ளி திங்கள் ஆகிய இருநாட்களில்தான் அங்கு செல்ல முடியும். அதற்கும் கோட்டை வாயலில் காத்து நிற்க வேண்டும். மாலை ஐந்து மணிக்குக் குருக்கள் வருவார். அவரைப் பின் தொடர்ந்து அனைவரும் உள் நுழைந்து வருதல் வேண்டும். அக்காக்ஷியானது ஒரு சேனைத் தலைவன் முன்னே நடக்க அவனுட்கள் பின்பற்றி நடப்பதுபோல் தோன்றும்!

கோணேஸ்வரருக்கு ஆலயம் இல்லை. வெய்யல், மழை, பனி அனைத்தும் அவர் மேல்படும். பார்வைக்கு லிங்க வடிவமும் அதன் மேல் நாகக் குடையும் இருப்பதுபோல் காணும். எதிரே மலையின் ஒரு பகுதி. இதற்கும் முன் சொன்ன லிங்கவடிவத்திற்கும் மத்தியில் கடல். மேலும் கீழும் மற்ற ஒரு பக்கத்திலும் மலை வெளி. ஆகவே, செங்குத்தான இடத்தில், மக்கள் அருகில் போக முடியாதபடி உள்ள பாகத்தில்தான் கோணேஸ்வரரின் சிலை உளது. ஆராதனைகள் எல்லாம் எதிரே உள்ள மலைக்குத்தான் செய்யப் பெறுகிறது. மக்கள் கணக்கற்ற தேங்காய்களை அவரவர்கள் நின்ற இடங்களிலிருந்தவாறே சிலையை நோக்கி வீசி எரிகின்றனர். அவைகள் சிதறி கடல் வாழும் ஜந்துக்களுக்கு ஆகாரமாகின்றன. இதுவன்றோ தெய்வத் திருப்தி! கற்பூரம் கொளுத்தவோ தேங்காய் உடைக்கவோ காசு கொடுக்காமல், நின்றவர் நின்றவிடத்திருந்தே விரும்பியவர் விரும்பியவாறு ஆண்டவனுருவத்திற்கு வழிபாடாற்றும் முறை சிலாகிக்கத் தக்கதாகும். இந்த நிலை எல்லாக் கோயில்களிலும் ஒருங்கே எய்தும் நாள் என்நாளோ! அது விரைவில் வருக!

## இலங்கை

சொல்லுகிறேன், இந்தக் கோணேசர் இருப்பிடத்தில், இந்து-கள் பூஜைக்குரிய தெய்வத் திரு உரு இல்லாமல், வேறு மதத்தினர் வழி பாடியற்றும் ஆண்டவனிருப்பின் சர்க்கார் கட்டுப்பாடும் காவலும் இவ்வளவு சட்ட திட்டமாக அங்கு இருக்காது! இருக்கவும் முடியாது! ஜாதி வித்தியாசமின்றிச் சகலரும் சமத்துவமாக வணங்க உள்ள இடத்திற்குச் செல்ல வாரத்தில் இரண்டு நாள்தானய்யா! யுத்தப் பேச்சு இன்னும் கொஞ்சம் மும்முரமானால் அதுவும் இல்லாமல் போனாலும் போய்விடும்! ஆனால், முன் சொன்ன மாதிரி பிறமதத்தினதாயின், யுத்தமே வந்து விடுவதாக இருந்தாலும், நம் நிலை ஒருபொழுதும் அவர்களுக்கு ஏற்படவே மாட்டாது! ஆண்டவனருகில் சென்று தொட்டு வணங்கக் கூட இலக்கான வழி வசதிகளைச் செய்துகொண் டிருப்பார்கள்! நாம், 'எல்லாம் சரி, இறைவா கச்சியேகம்பனே' என்று இருப்பவர்கள் தானே!

(தொடரும்)

---

## கந்தசாமிப் பெரியார் காலஞ் சென்றார்



பிரபல சினிமா நடிகர் நவாப் M. K. ராதாவின் தகப்பனாரும், நாடக உலகிற்குப் பெரிதும் உழைத்துக் கலைக்கழகு ஊட்டியவரும், சிறந்த நடிகருமாகிய பெரியார் M. கந்தசாமி முதலியா ரவர்கள் 8-3-39-ல் இறைவன் திருவடி நீழலெய்தினார். தன் ஏக புதல்வனையும் குழந்தைகளையும் விட்டுப் பிரிந்தது பெரிதும் வருந்தத்தக்கது மல்லாமல், அவரது மரணம் நடிக உலகிற்குப் பெருத்த நஷ்டமு மாகும். அன்னாரின் நினைவு நாள் 23-3-39ல் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

(ப-ர்)

தேவர்களும் நாடகமாம் செந்தமிழை யாவலுறப்
பூவுலகம் நீத்தங்கே போயினார்—காவுலவும்
இந்திரனார் காணவரங் கேற்றிப் புகழுடையக்
கந்தசா மிப்பெரியார் காண். —மாயவரம், தியாகராஜதேசிகர்

202676

## ...சோப்பு செய்யும் விதம்

[மே. மா.]

நம் நாட்டிலே ஏழை மக்கள் தங்கள் துணிகளைத் துவைத்துக் கொள்ளச் சோப்பு உபயோகிக்க முற்பட்டு விட்டார்கள். ஆதலால் பெருவாரியான சோப்புகள் மார்க்கெட்டில் மலிந்து கிடக்கின்றன. கண்மூடிக்கொண்டு மக்களும் அதனை வாங்குகின்றனர். அத்தகைய சோப்புக்களில் பணம் செலவாவதே யொழிய சீக்கிரத்தில் வெளுப்பதில்லை. அப்படி வெளுத்தாலும் துணியும் நாசமாகிறது. ஆதலால் பட்டுத் துணிகள் முதலிய எல்லாத் துணிகளிலுமுள்ள அழுக்குகளைச் சுலபத்தில் போக்கி, துணிகளையும் கெடாமல் காத்துக் கொள்ளும் வகையில் குறைந்த பணச் செலவில், தாங்கள் தாங்களே சோப்பைச் செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் சோப்பு செய்யும் விதத்தை இங்கே குறிப்பிடுகின்றோம்.

### செய்யும் விதம்

காஸ்டிக் சோடா பலம் 10 கைபடாமல் நிறுத்து எடுத்துக் கொண்டு ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் தண்ணீர் பட்டணம்படி $\frac{3}{4}$ அல்லது 36 அவுன்சு விட்டு, அதனோடு 10 எலுமிச்சம் பழத்தின் ரசம் பிழிந்து வடிகட்டி அந்த ரசத்தையும் சேர்த்து $\frac{1}{2}$ தோலா நீலப் பவுடர் கலந்து, நன்றாகக் கலக்கிக்கொண்டு வந்தால் நன்றாய்த் தானாகவே சூடேறி விடும். ஆறும் வரை கலக்கிக்கொண்டே யிருந்து ஆறிய பிறகு $1\frac{1}{4}$ வீசை தேங்கா யெண்ணெய்விட்டு மணி நேரம் நன்றாய்க் கிளறிக் கொண்டே யிருக்க வேண்டும். மணி நேரம் கழித்து நாலு பக்கம் சதுரமாக உள்ள ஒரு தட்டிலோ பாத்திரத்திலோ 1 இஞ்சு அல்லது $1\frac{1}{2}$ இஞ்சு கனத்தில் ஊற்றி ஆற வைக்க வேண்டும். ஆறிவந்து கெட்டிப்படும் சமயத்தில் கத்தியால் இஷ்டப்படி துண்டு செய்து கொள்ளவும். இந்த சோப்பை செய்து வைத்துக் கொண்டு துணி துவைத்தால், வண்ணான் வெளுப்பதைக் காட்டிலும் வெண்மையாகத் துணிகள் காணப்படும். ஆதலால் இதைக் கண்ணுறும் நண்பர்கள் தாங்கள் தாங்களே சோப்பைச் செய்து கொள்வதன்றி தங்கள் உறவினர்களையும் நண்பர்களையும் செய்து கொள்ளும்படி தூண்ட வேண்டும்.

---

குடியானவன்:—ஏங்க! சாமி முன்னே ஒரு கருமாதிக்கு ஒரு ரூபாய் கேட்டிங்க. இந்தக் கருமாதிக்கு 4 ரூபாய் கேக்கிறிங்களே.

புரோகிதன்:—முந்தின கருமாதிக்கு 15 வயது பையன் இறந்ததினால் ஒரு ரூபாய் கேட்டேன். இப்பொழுது 60 வயது கிழவன் இறந்ததினால் 4 ரூபாய் கொடேன். —R. S. கந்தசாமி

# நகைச் சுவை



தாயார்:—ஏண்டி வத்ஸலா! உன்னே ஊஞ்சலிலே போட்டு எவ்வளவு நேரமாச்சு, நீ தூங்காமே யிருந்தா எந்தக் கழுதைதான் ஆட்டும்.

குழந்தை:—அம்மா! அப்பாதான் ஆபீசுக்கு போயாச்சே நீ தான் ஆட்டு.

—G. R. ராஜன், குகை

ஒருநாள் முத்துப் புலவரும் மாணிக்கப் புலவரும் வெகு நேரமாய் யாதோ ஒரு விஷயத்தைப்பற்றிக் காலைப்பொழுதிலிருந்து பேசிக்கொண்டிருந்தனர். நடுப்பகல் நேரமும் வந்து விட்டதாகையால் முத்துப் புலவர் தன் நண்பரைச் சாப்பாட்டிற்கு அழைத்தார்.

முத்துப் புலவர்:—(எந்தவிதமான இலையில் நண்பர் உண்பாரோ என்ற சந்தேகத்துடன்) தையலிலையில் சாப்பிடுவீரோ நீர்!

மாணிக்கப் புலவர்:—தையல் என் இலையில் சாப்பிடுவாளேயொழிய நான் அவள் இலையில் உண்ணும் வழக்கம் கிடையாது.

V. K. சுப்பிரமணி

உபாத்தியாயர்—டே! கோபு. சிவாஜியைப்பற்றி உனக்கென்ன தெரியும்?

கோபு:—ஸார்! அவர் ஏன் உள்ளங்கை அகலம். விரல் உயரம் தாடி மீசை யுண்டு. தலையில் பவூன் குல்லாய் வைத்திருப்பார்.

உபா:—அட மடையா! என்ன உளருகின்றாய்.

கோபு:—இல்லை ஸார். என் புஸ்தகத்தில் அப்படித்தான் இருக்கிறார்.

—கடத்தூர் R. அருணாஜலம்

நாட்டுப் புறத்திலிருந்துவந்த சிறு பெண் சென்னையில் ஒரு கம்பெனிக்கு ஒருவருடன் போனாள். அங்கே (Lift) லிப்டில் மாடிக்கு நின்றபடியே போய்ச் சேர்ந்தாள். வீட்டிற்கு வந்தவுடன் தன் தாயாரிடம்,

பெண்:—அம்மா நான் வேடிக்கையான ஓர் இடத்திற்கு போனேன். நான் போனவுடன் மாடி இரங்கி என்னிடம் வந்தது என்றாள்.

—வேப்பேரி கே. பி. துரைசாமி

தெருவில் ஒரு சிறுவன் அழுதுகொண்டு வந்ததை ஒரு பெரியவர் பார்த்து, தம்பி ஏன் அழுகிறாய்! நீ யார் மகன்!

சிறுவன்:—நான் எங்கப்பா மகன்.

—ஏ. ஜோசப்

தாயார்:—அடே ராமு அண்ணு, ஆர்மோன்யம் வாசிச்சா நீயேண்டா மூக்கை வைத்து முகர்ந்து பாக்றே.

பையன்:—போம்மா! அண்ணு சரி கம கம கமாண்ணு சொல்ரா. வாசனேயே வல்லேம்மா! —ராமசாமி S. N. பாளையம்

ஒரு லோபி:—ஏ! ரெக்ஷா இங்கே வா; ரெயில்வே ஸ்டேஷன் வரையில் என்னை ஏற்றிக்கொண்டு போக என்ன கூலி கேட்பாய்?

வண்டிக்காரன்:—நாலணு கொடுங்கள் சாமி.

லோபி:—இந்தக் குழந்தைக்கு எவ்வளவு கேட்பாய்?

வண்டிக்காரன்:—இதற்குக் கூடவா, இதைச் சும்மா ஏற்றிக் கொண்டு போகிறேன்.

லோபி:—அப்படியானல் இந்தக் குழந்தையை மட்டும் ஏற்றிக் கொள்; நான் நடந்து வருகிறேன். K. N. துரைசாமி

ஒரு வயதான கிழவரிடம், இக்காலத்திய நூதன விசேஷங்களைப்பற்றி ஒரு ஆசிரியர் விளக்கிக் கூறினர். கடல் மூழ்கிக் கப்பல், ஆகாய விமானம், வயர்லஸ், ரேடியோ, முதலியவற்றைப்பற்றிக் கூறி வந்தார்.

கிழவர்:—எனக்கு இவை யெல்லாம் விளங்கிவிட்டன. ஆனல் அந்த சோடா புட்டிக்குள் கண்ணடி கோலியை எப்படி நுழைக்கிறார்கள் என்றுதான் புரியவில்லை என்ருர். —T. S. அப்துல் ரசூல்

பையன்:—எனக்கு ஒரு பெரிய பனியன் வேண்டும்.

கடைக்காரன்:—நான் போட்டுக்கொண்டிருக்கிறேனே, அது மாதிரியா வேண்டும்.

பையன்:—இல்லை, அவ்வளவு அழுக்காய் இருக்கக் கூடாது.

—க. வா. மு. அப்துல்ஸமது

பட்டு:—அம்மா, எனக்கு பட்டுத்தாவணி வேணுமம்மா. அப்பாவிடம் கேளேன்.

தாய்:—(புருஷனை நோக்கி) நம் பொண்ணுக்குப் பட்டுத் தாவணி வாங்கிக் கொடுங்களேன்.

தகப்பனர்:—(மனைவியைப் பார்த்து) நம்ப பெண் பெயர் பட்டு. பட்டுத்தாவணி கட்டினல் நன்ருய் இருக்காது. நூல்த் தாவணி கட்டினல் அழகா யிருக்கும்.

பட்டு:—(தந்தை சொல்லி யதை யறிந்து) அப்பா எனக்குச் சில்க்குத்தாவணி வேண்டும். —ஜி. கண்ணுசாமி கிராமணி

உபா:—மாணவர்களே சர்க்காரால் நமக்கு விதிக்கப்பட்டுள்ள வரிகள் எவை?

மாண:—ஜனவரி, பிணவரி முதலியன சார்.

—ஐ. நடேசன் பொன்னேரி

# வனிதா அல்லது கொலையுண்ட காரிகை

[A. வாசிமலை, கல்லூரி மாணவன், மதுரை]

(All rights reserved with the author)

[முன் கதைச் சுருக்கம்:—காதலர்களான ராமகிருஷ்ணனும் வனிதாவும் கடற்கரையில் வார்த்தையாடிக் கொண்டிருக்கிறார்கள். காதலன் மறுநாள் பக்கத்தூரிலுள்ள தன் நண்பன் வீட்டுக்கு விருந்துக்குப் போவதாகவும் அதற்குக் காதலி வருவதற்காக 8 மணிக்குக் கார் அனுப்புவதாகவும் சொல்கிறான். வேலையில்லாத இராமகிருஷ்ணனின் உதவியால் ஜீவித்து வரும் கோவிந்தனும் ரங்கநாதனும் வனிதாவை ஏமாற்றி நகைகளை அபகரிக்க எண்ணினர். மறுநாள் தாங்கள் திருவனந்தபுரம் போவதாக நண்பனுக்குக் கடிதம் அனுப்பினர். டிரைவருக்குப் பதிலாக கோவிந்தனால் ஓட்டப்பெற்ற கார் வனிதாவை ஏற்றிக்கொண்டு சென்றது. வழியில் ரங்கநாதனும் சேர்ந்தான். சாகசமாக அவள் பக்கம் அமர்ந்து, மயக்க மருந்தை முகத்தில் காட்ட மயக்கமுற்று அவன் கையிலே சாய்ந்தாள். கார் போய்க் கொண்டிருக்கிறது. பள்ளிக்கூட மீட்டிங்கிற்குச் சென்றிருந்த ராமகிருஷ்ணன், தன் கார் வழக்கம்போல் அங்கு இல்லாதது கண்டு காத்திருக்கிறான். ஓடிவந்த டிரைவர் மூலம் கார் திருடப்பட்டது என அறிகிறான். தன் வீடு சென்று விசாரித்தும் பலனின்றி, வனிதாவைக் காணச் சென்றான். அவன் பெற்றோர் இவனிடம் வனிதாவைப்பற்றிக் கேட்டனர். இவன் அழைத்துக்கொண்டு போகவில்லை என்பது தெரிந்ததும், இதில் ஏதோ சூது நடந்திருக்க வேண்டுமென்று எண்ணினர். ராமகிருஷ்ணன் போலீசுக்கு அறிவிக்கச் சொல்லிவிட்டுத் திரும்பி விட்டான். வனிதாவின் பெற்றோர் மிகக் கவலையுற்று ஓர் நற்செய்தி கிடைக்காதா என்று ஏங்கி யிருந்தனர். போலீசார் தீவிர முயற்சி எடுத்தனர். ஓர் நாள் ராமகிருஷ்ணன் 'வனிதா கொலை செய்யப்பட்டாள்' என்று வெளிவந்த செய்திப் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தான். போலீஸ் அதிகாரிகள் அவனை அப்போது ஸ்டேஷனுக்கு அழைத்தார்கள். அச்சமயம் ஒரு சிறுவன் கொடுத்த கடிதத்தின் மூலமும், பிரேத சோதனையில் அகப்பட்ட சாமான்களின் மூலமும், சாக்ஷிகளின் வாக்கு மூலத்தாலும் ராமகிருஷ்ணனே கொலையாளி எனத் தீர்மானித்தனர். சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட ராமகிருஷ்ணன், துப்பறிபவர் உதவியால் காவலிருக்கும் கான்ஸ்டேபிள்களையும் ஏமாற்றி, சிறையினின்றும் விடுவிக்கப்பட்டான். அம் மனிதருடன் ராமகிருஷ்ணன் நள்ளிரவில் தன் மாமா வீடு சென்றான். அவன் எவ்விதக் குற்றமும் செய்யாத நிரபராதி என்று அறிந்த தம்பதிகள் பெரிதும் வருந்துகின்றனர்.]

**இப்பொழுது** அவன் மாமி என்ன சொல்வதென்றறியாது கண்ணீருதிர்த்து நிற்க, அவன் மாமனார், 'ராமகிருஷ்ணா! என்னை நீ மன்னிப்பாயாக! என்னை மன்னித்து விட்டதாகச் சொல்.

நான் நிரபராதியாகிய உன்னை மிகவும் கஷ்டத்திற்குள்ளாக்கி விட்டேன். உன் சந்தோஷமான வாழ்க்கைக்கு நான் இடையூறு செய்தேன். கிருஷ்ணு! நான் அபலையாகிய உன்னைக் கெடுத்த பாவி!' என்று கூறிக் கொண்டே அவனைக் கட்டிப் பிடித்துக் கோவென் றழுதார். ஆனல் கூட வந்தவர் அவரைத் தேற்றி, இனி வருந்து வதில் பயனில்லை யென்றும், அங்கு அதிக நேரம் தாமதித்தால் ஆபத்து விளையுமென்றும் கூறி விரைவில் தங்களுக்கு விடை கொடுத் தனுப்புமாறு கேட்டார். பின்பு கோபால் முதலியார் அவரைப் பார்த்து, 'ஐயா! நீர் யாரென்று எங்களுக்குத் தெரியவில்லையே' என்ருர். அதற்கு அவர் தான் ஒரு துப்பறிபவரென்றும் தன் பெயர் துளசிதாஸ் என்றும் தெரிவித்தார். முதலியார் அவர் கையைப் பிடித்துக்கொண்டு, 'ஐயா துப்பறிபவரே! நாங்கள் ராம கிருஷ்ணனைத் வீட்டிற்குள்ளேயே ஒருவருக்கும் தெரியாமல் வைத் துக் கொள்ளுகிருேம். பின்பு நீர் உண்மைக் குற்றவாளிகளைப் பிடித்தவுடன் அவனை வெளியில் விடுகிருேம்' என்ருர்.

துளசிதாஸ்:—அது மிகவும் ஆபத்தான காரியம். இன்னும் கொஞ்ச நேரத்தில் போலீஸார் தங்களுடைய வீட்டைச் சோதனை போட வருவார்கள். மேலும் ராமகிருஷ்ணன் இல்லாவிட்டால் என்னல் ஒரு காரியமும் செய்ய முடியாது. அவனைக் காப்பாற்று வது என் கடமை. அதைப்பற்றித் தாங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம்.

கோ. மு:—ஐயா! அவன் ஓர் அனுதை. திக்கற்ற ராம கிருஷ்ணனை தாங்கள் ஒருபோதும் கைவிடக் கூடாது.

துளசிதாஸ்:—தாங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். நான் உயிரோடிருக்கும் வரை அவனுக்கு யாதொருவிதமான ஆபத்தும் நேரிடாது. அது சரி, இப்பொழுது தங்களிடத்தில் ஒரு முக்கிய மான விஷயம் கேட்க வேண்டும். அதாவது தங்களுக்கு யாரோ ஒரு கடிதம் எழுதி யனுப்பி யிருப்பதாக ராமகிருஷ்ணன் தெரிவித் திருப்பதால் அதை எனக்குக் காட்ட முடியுமா?

கோ. மு:—மன்னிக்க வேண்டும். நான் அக்கடிதத்தை ராம கிருஷ்ணன் முன்பாகக் காட்ட முடியாதவனு யிருக்கின்றேன். ஏனெனில் நான் அக்கடிதம் எழுதினவனுக்கு எழுத்து மூலம் ராம கிருஷ்ணனிடத்தில் அக்கடிதத்தைக் காண்பிப்பதில்லை யென்று சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன். யாரோ ஒரு போக்கிரிப் பயல் என்னை ஏமாற்றிக் கடிதத்தின் மூலமே சத்தியம் வாங்கிக் கொண்டான். ஆனதால் தாங்கள் சற்று என் பின்னல் வர வேண்டு கிறேன் என்று சொல்லி அவரைச் சிறிதுதூரம் அழைத்துச் சென்று ஒரு கடிதத்தைக் கொடுத்தார். அதில் அடங்கி யிருந்த

விஷயம் யாதெனில், யாரோ ராமகிருஷ்ணனின் நண்பனொருவன் அவனுக்கு எழுதிய கடிதத்தில், அவன் காதலியான வனிதாவின் க்ஷேம லாபங்களைப்பற்றி எழுதும்படி கேட்டதற்கு, பதில் கடிதத்தில் ராமகிருஷ்ணன் அவள் ஒரு விபசாரி யென்றும், அவளைப் பற்றித் தன்னிடம் ஒன்றும் கேட்க வேண்டாமென்றும் எழுதி யனுப்பி விட்டானும். இது உண்மையான விஷயம்தானு அல்லது வீண் அபவாதமா என்றும் அதில் கேட்கப்பட்டிருந்தது. இவ்வளவு தான் சங்கதி. ஆனல் எழுதினவனுடைய பெயர் அதில் காணப்பட வில்லை.

அதைப் பார்த்த துளசிதாஸ், அதுவும் எதிரிகளுடைய சூழ்ச்சி களுள் ஒன்று என்று தெரிவித்துக் கடிதத்தை அவரிடமே கொடுத்துவிட்டு, 'இந்தத் தலையும் காலுமில்லாத கடிதத்தை நம்பிக் கொண்டு, தாங்கள் அநியாயமாக ராமகிருஷ்ணன்மேல் குற்றஞ் சாட்டி விடலாமா? தாங்கள் செய்திருக்கும் காரியத்தைப் பார்த்தால் ராமகிருஷ்ணன் வார்த்தையைவிட, வேறு ஒரு பேர் தெரியாதவன் சொல்லும் வார்த்தையில் தாங்கள் மிக்க நம்பிக்கை வைத்து விடுவீர்கள்போல் தோன்றுகிறதே. உம்; ஆத்திரக்காரருக்கு புத்தி மட்டு.'

கோ. மு:—இது எதிரிகளின் சூழ்ச்சி யென்று நான் அறியாமற் போய்விட்டேன். மேலும் போலீஸாரும் ராமகிருஷ்ணனே கொலை செய்திருப்பானென்று நான் நம்பும்படி எனக்குப் போதித்து விட்டனர். அதனலேயே காரியம் இவ்வளவுதூரம் நடந்தும் நான் ராமகிருஷ்ணனுக்கு யாதொரு உதவியும் செய்ய முயற்சியாதிருந்து விட்டேன்.

துளசிதாஸ்:—சரி; நாங்கள் போய் வருகிறேம். நாங்கள் வந்து போனதைப்பற்றி எவரிடமும் ஒன்றும் தெரிவிக்க வேண்டாம்.

தம்பதிகள் கண்ணீர் வடித்துக் கால்கழுவி நின்றனரே யல்லாது, 'போய் வாருங்கள்' என்று சொல்லும் வழியைக் காணேம். பின்பு ராமகிருஷ்ணன், 'மாமி, நான் சீனிவாசனைப் பார்த்துச் செல்ல வேண்டும். அவனெங்கே?' என்றுன். அவன் மாமி சீனிவாசன் படுத்து நித்திரை செய்யுமிடத்தைக் காட்டினுள். ராமகிருஷ்ணன் அவனருகில் சென்று, அவனது அழகிய வதனத்தைப் பார்த்துக் கண்ணீர் விட்டான் 'நான் என் அருமைக் கண்மணியை விட்டுப் பிரியும் காலமும் வந்ததே' என்று சொல்லி, அவனது நெற்றியில் முத்தமிட்டான். அவனது மழலைச் சொற்களைக் கேட்க ஆவலுடையவனுய், தன் நிலைமையையும் மறந்து அவனை எழுப்ப முயன்றுன். துளஸிதாஸ் அவனைத் தடுத்து, சிறுவனை எழுப்பினல் பின்னும் கொஞ்சநேரம் அங்கு தாமதிக்க

வேண்டி வருமென்றும், மேலும் அவன் சிறவனுகையால் அவர் களைப்பற்றி வெளியில் சொல்லி விடுவானென்றும் தெரிவித்தார். எனவே, ராமகிருஷ்ணன் தன் மாமனைப் பார்த்து, 'மாமா! தாங்கள் சீனிவாசனைப்பற்றி மிகுந்த அக்கரை யெடுத்துக் கொள்ளவேண்டும். என் அருமைக் கண்மணியாவது சுகமே வளர்ந்து குலப்பெயர் சொல்லட்டும். அதுவே என் விருப்பம். நான் இதோ புறப்பட்டு விட்டேன். உண்மையாய்ச் சொல்லுகிறேன்; இனிமேல் நான் இவ்வூரிலிருந்து வாழப் போவதில்லை. மேலும் தாங்கள் என்னை இனிமேல், அதுவும் சுகமாக யிருந்தால் ஒன்று அல்லது இரண்டு வேளைகளில்தான் பார்க்க முடியும். அதுவும் கோர்ட்டுக்கு எப்பொழுதாவது வர நேர்ந்தால்தான்' என்று சொல்லிவிட்டு வீட்டின் பின்புறம்சென்று, அவர்கள் முதலில் ஏறி வந்த ஒரு தூணின் வழியாகவே யிறங்கிச் சென்று, பின் பக்கத் தோட்ட மதிலைக் கடந்து சென்று விட்டனர். துளசிதாஸ் தெரிவித்தபடியே போலீசார் காலை நாலு மணிக்கே வந்து, வனிதாவின் வீட்டைச் சோதனை செய்து பார்த்துவிட்டுச் சென்றனர்.

## அத்தியாயம் 7.

ஒரு தனிமையான அறையில் ராமகிருஷ்ணனும் கான்ஸ்டேபிளுக்கு சர்பத் வாங்கிக் கொடுத்து ஏமாற்றியவராகிய துளசிதாஸும் அமர்ந்திருந்தனர். ராமகிருஷ்ணன் சதா வருந்துவதைக் கண்ட துப்பறியும் துளசிதாஸ், 'ராமகிருஷ்ணு! இனி வருந்துவதில் பயனென்றுமில்லை. ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவதில்லை என்ற விஷயம் உனக்குத் தெரியாதா?' என்ருர்.

ரா. கி:—நண்பரவர்களே! நீங்கள் என்ன சொன்ன போதிலும் சரி; நான் இனிமேல் இவ்வுலகிலிருந்து வாழ விரும்பவில்லை. எனது ஆருயிர்க் காதலி என் மனதைக் கொள்ளைகொண்ட அம்மாதரசி என்னைவிட்டுப் பிரிந்து சென்ற பிறகு எனக்கிங்கென்ன வேலை?

துளசிதாஸ்:—கிருஷ்ணு! நீ அப்படி இறந்தாலும் உன் ஆன்மா சாந்தி யடைய வேண்டாமா? உலகத்திலுள்ளோர் உன்னைச் சதா நிந்திப்பார்களே என்பதை நீ உணரவில்லையா? ஆகவே, நீ முதலில் களங்கமற்றவனென்று உலகத்தார்க்கு தெளிவுற எடுத்துக் காட்ட வேண்டும். இரண்டாவதாக நீ உன் ஆருயிர்க் காதலியைக் கொன்றவர்களை பழிக்குப் பழி வாங்க வேண்டும். என்ன சொல்கிருய்?

ரா. கி:—அப்படியானல் அச்சண்டாளர்கள் யாரென்று நிச்சய

மாய்த் தங்களுக்குத் தெரியுமானல் சொல்லுங்கள். இப்பொழுதே போய் அவர்களைக் கொன்றுவிட்டு நானும் இறந்து விடுகிறேன்.

து. தாஸ்:—எனக்கு இன்னவர்கள்தான் குற்றவாளி யென்று நிச்சயமாய்த் தெரியாது. ஆயினும் நீ அவர்களைப் பிடித்துத் தக்க தண்டனைக்குள் ளாக்கும்வரை, என்னைக் கேளாமல் எக்காரியமும் செய்வதில்லை யென்று வாக்குறுதி கொடுத்தாக வேண்டும்.

ரா. கி:—ஆம்; வாஸ்தவம்தான். அச்சண்டாளர்களைப் பழிக் குப் பழி வாங்கியே தீர வேண்டும். துப்பறியும் என் நண்பரே! நான் இந்நேரத்திலிருந்து உமது அடிமை. இது உறுதியான வார்த்தை.

து. தாஸ்:—மிகுந்த சந்தோஷம். ராமகிருஷ்ணு! சிறிது அமைதியா யிருந்து நான் சொல்வதைக் கேள். நான் எதற்காக அந்நடுநிசியில் எப்படி வந்து உன்னைக் காப்பாற்றி அழைத்துக் கொண்டு வந்தேனென்று அறிய நீ மிகவும் ஆவலோடிருப்பா யென்று தெரிகிறது. சொல்லுகிறேன் கேள் :

நான் குடி யிருப்பது இந்தத் தஞ்சாவூரிலேயே. என் சிஷ்யனும் இங்கேயே என்னேடிருப்பது சகஜம். இங்கிருந்து சுமார் மூன்று மைல் தூரத்திற்கப்பால் ஒரு பாழடைந்த மண்டபமிருக்கிறது. அதனடியிலிருக்கும் சுரங்க அறையில் சிறிது காலத்திற்கு முன்பு சில கொள்ளைக் கூட்டத்தார் வசித்து வந்தனர். பின்பு நானே அவர்கள் அனைவரையும் பிடித்து சர்க்காரிடம் ஒப்படைத்துவிட்ட படியால், யாதொரு பயமுமின்றி நான் அடிக்கடி அங்குபோய் விட்டு வருவது வழக்கம். அப்படியே கடந்த நாலைந்து நாட்களுக்கு முன்பும் நான் அங்குபோய்ச் சுரங்க அறையைச் சுற்றிப் பார்த்து விட்டு வெளியில் வரும்பொழுது, யாரோ இரு பரதேசிகள் அமர்ந்து பேசிக்கொண் டிருப்பதைக் கண்டேன். எனக்கு இக் காலத்துச் சந்நியாசிகளைக் கண்டால் சிறிது வெறுப்பாகவே யிருக் கும். ஆகவே, அவர்கள் என்னதான் பேசிக் கொள்கிறுர்கள் என்பதை அறிவதற்கு, சிறிது அமைதியாய்ச் சுரங்க வாயிலிருந்தே உற்றுக் கேட்டேன். அதில் யாரோ ஒருவன் மற்றவனைப் பார்த்து 'உம் நாம் செய்திருக்கும் ஏற்பாட்டில் ராமகிருஷ்ணன் தப்புவதும் ஒரு கேடா. அவன் வருகிற புதன்கிழமை யன்று நடக்கப்போகும் விசாரணையிலேயே மரண தண்டனை யடைவான் என்பது நிச்சயம். ஒருவேளை அவன் வனிதா கொல்லப்பட்டாள் என்று அறிந்த உடனேயே தானும் இறக்கத் துணிந்திருப்பான். சரி, வா நாம் போகலாம். இனி யிங்கிருப்பது கூட ஆபத்து. நேரே தெற்கே எங்காவதுபோய் ஒரு சிறு கிராமத்திலிருந்து நம் வாழ்நாளைக் கடத்த வேண்டும்' என்று சொல்லி இருவரும் எழுந்தனர். நான் உடனே என் கையில் ரிவால்வாரை எடுத்துக்கொண்டு அவர்களுக் கெதிராகப் பிடித்து, 'அசைந்தால் மடிந்தீர்கள். நில்லுங்கள்

அப்படியே' என்றேன். ஆசாமிகள் இருவரும் திக்பிரமை கொண்டு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். கடைசியாக நான் அவர் களைச் சுரங்க அறைக்குள் போட்டு மூடிவிட்டு வேறு வேலை பார்க் கலாமென் றெண்ணினேன். ஆனால் அவர்கள் மிகவும் கைதேர்ந் தவர்களா யிருந்தார்கள். நான் அவர்கள் முன் துப்பாக்கியை நீட்டினவுடன், இருவரும் கைகூப்பி வணங்கி 'ஓ கருணாகரா! சாம்ப சிவா! நாங்கள் ஒரு குற்றமும் நின் திருவடிகளுக்குச் செய்த தில்லையே. எங்களை சோதனைக்குட்படுத்தாமல் ஏழைகளுக்கிரங்கி கிருபை செய்ய வேண்டும். ஐயா! நாங்கள் பரதேசிகள் எங்களை விட்டு விடுங்கள். உங்கள் காலில் விழுந்து வேண்டுமானாலும் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறோம். சிவனடியார்க்கு ஒருபோதும் இம்ஸையைக் கொடுக்காதீர்' என்று சொல்லிக்கொண்டே இரு வரும் என் காலில் விழுந்து விட்டனர். அவர்களுடைய நடிப்பைக் கண்டு மெய் மறந்திருந்த எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. காலில் விழுகிறேனென்று சொல்லிக் கீழே விழுந்தவர்கள் மறுவிநாடியில் என் கால்களைப் பிடித்திழுத்துக் கீழே விழச் செய்து விட்டனர். பின்பு என்னால் என்ன செய்ய முடியும்? என் கையிலிருந்த துப்பாக்கி அவர்களிடத்தில் போய்விட்டது. எனவே, என்னைச் சுட்டுக் கொல்லத் தீர்மானித்து விட்டனர். மறுவிநாடியில் ஒரு துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்டது. என் துப்பாக்கியை வைத் திருந்தவன் அதை நழுவவிட்டு 'ஆ!' என்று கையைப் பிடித்துக் கொண்டே எப்பக்கமிருந்து குண்டு வந்தது என்று பார்த்தான். அங்கோர் மரத்தின் பக்கத்தில் எனது சிஷ்யன், பாலசந்திரன் கையில் துப்பாக்கியோடு நின்றுகொண் டிருப்பதைக்கண்டு அவர்க ளிருவரும் ஓட ஆரம்பித்தனர். சந்திரனுக்கு அவர்களைப்பற்றி ஒன்றும் தெரியாததலால் நேராக என்னிடம் வந்து 'அண்ணா! அவர்கள் யார்? எதற்காகத் தங்களைக் கொல்ல முயன்றனர்' என்றான். நான் அவனிடத்தில் அவர்கள் ஏதோ ஒரு கொலையைச் செய்துவிட்டு வந்தவர்கள் என்று சொல்லிவிட்டு, எதிரிகளில் ஒருவன் கையில் குண்டு பட்டதால் சக்தியற்றுக் கீழே போட்ட என்னுடைய துப்பாக்கியையும் கையிலெடுத்துக் கொண்டு, இருவரு மாக அவர்களைப் பின்பற்றிச் சென்றோம். இதை யறிந்த அவர்கள் ஓடிக்கொண்டே துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்பொழுது தான் அவர்களிடத்திலும் துப்பாக்கி யிருக்கிறது என்று எங்களுக் குத் தெரிய வந்தது. நாங்கள் ஒன்றும் செய்ய முடியாமல் ஒரு மறைவிலேயே நின்றுவிட்டோம். அவர்கள் உயிரை வெறுத்து ஓடு பவர்களாகையால், நாங்கள் சுடுவதையும் கவனியாது நேராக ஓடி விட்டனர். பின்பு இருவரும் வீடு வந்து சேர்ந்தோம். வரும் வழியில் அவன் எவ்வாறு அப்படிப்பட்ட ஆபத்தான நிலைமையில் வந்து உதவினனென்று கேட்க, பத்திரிகையில் ஒரு முக்கியமான

சங்கதி வெளியாகி யிருந்ததாகவும், அதை எனக்குக் காண்பிக்க அதிக நேரம் காத்துக்கொண்டிருந்தும் நான் திரும்பி வரவில்லை யாதலால், ஒருவேளை எனக்கு ஏதாவது ஆபத்து சம்பவித்திருக்க லாமோ என்று நினைத்துத் தேடி வந்தானும். அப்படி வந்தபொழுது அவர்கள் துப்பாக்கியை எனக்கு நேராக நீட்டிக்கொண் டிருந்த தைக் கண்டு, அவர்களில் துப்பாக்கி பிடித்திருந்தவனைக் கையில் சுட்டதாகக் கூறினன்.

(தொடரும்)


டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால் தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும் கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

முத்துவிநாயகர் ஸ்டோர்,
கல்லல் S. I. R. (இராமநாதபுரம் ஜில்லா.)

லங்கா குரோஸரி ஸ்டோர்,
செட்டித் தெரு, கொளும்பு.

தி. ஞானப்பிரகாசம்,
122, மோகல் வீதி, ரங்கோன்.

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
19, ஜடாமுனி கோயில் தெரு, மதுரை.

A. N. லெட்சுமணன் செட்டியார்,
வலம்புரி, வலையபட்டி,
பொன்னமராவதி போஸ்டு, புதுக்கோட்டை ஸ்டேட்.

A. V. R. A. ADYCAPPA CHETTIYAR,
Lalji Mansing Building, 1st Floor Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.

# தழுவியதும் உயிர் போயிற்று

[வேப்பேரி, கே. பி. துரைசாமி]

வேப்பேரி லக்ஷ்மி நிலையம் என்னும் பங்களாவின் பின்புறமுள்ள நந்தவனத்தில், சூரிய அஸ்தமன வேளையில் ஓர் பெண் புஷ்பம் பறித்துக் கொண்டிருந்தாள். அவளுக்குச் சிறிது தூரத்தில் சுமார் பதினைந்து வயதுள்ள ஓர் பெண்மணி அங்கிருந்த மரத்தின்மீது சாய்ந்தவாறே ஏதோ யோசனை செய்து கொண்டிருந்தாள். அவள் முகத்தில் துக்கம் குடிகொண் டிருந்தது. ஹா! நான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்ததே. என் எண்ணமெல்லாம் வீணாயினவே. நான் எவ்வாறு அவரிடம் இதைக் கூறுவேன். இதைக் கேட்பின் அவர் உயிர் தரியாரே. என் செய்வேன். தந்தை சொல் மீறி நடக்கவோ எனக்குத் தைரியமில்லை. என் விருப்பத்தைக் கேட்டு நடப்பாரென்றல்லவோ எண்ணியிருந்தேன். என் தாயும் என்னைக் கேட்காமல் இசைந்தனளே. ஐயோ நிச்சயார்த்தமும் நடந்தேறி விட்டதே. திருமணத்திற்கும் நாள் குறிப்பிட்டு விட்டார்களே, இப்பொழுது என் செய்வது? இதை அவரிடம் எவ்வாறு தெரிவிப்பது? எனப் பலபல எண்ணிக் கண்ணீர் வடித்தாள் அப் பெண்மணி. புஷ்பம் பறித்துக் கொண்டிருந்த பெண் சிறிது நேரத்திற்கெல்லாம் பறித்த மலர்களைக் கட்டி, அவள் தலையில் சூட்டி அவளை அலங்கரித்தாள்.

அன்றிரவு எட்டு மணிக்கு சுசீலா, பங்களாவின் வெளிப்புறமுள்ள ஓர் அறையில் உட்கார்ந்து, பல கணிவழியாகத் தன் காதலன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் சுந்தரம் வருவதைக் கண்டாள். உடனே தன் கையில் வைத்திருந்த கடிதத்தைத் தெருவில் போட்டு, சுந்தரத்திற்கு ஜாடை காட்டி மறைந்தாள். சுந்தரம் நாலா பக்கங்களிலும் திரும்பிப் பார்த்தான். ஒருவருமில்லை. அவன் அக் கடிதத்தை விரைந்து எடுத்துத் தன் வீட்டை யடைந்ததும் அக் கடிதத்தைப் பிரித்து மிக்க ஆவலோடு வாசிக்க ஆரம்பித்தான்.

ஆ என் அன்பே! இணைபிரியாக் காதலரே!

தாங்கள் என்னை இன்றோடு மறந்து விடுங்கள். இனி என்னைத் தாங்கள் கண்ணெடுத்தும் பார்க்கலாகாது—மனதிலும் நினைக்கலாகாது. என் அருமைக் காதலரே—ஆ! இனி நான் தங்களை அவ்வாறு அழைத்தலும் பாபம். நான் வேறொருவர்க்கு வாழ்க்கைப் பட வேண்டியவளாகி விட்டேன்—என் செய்வேன். யாவும் இறைவன் செயல்.

இங்ஙனம்,

சுசீலா.

சுந்தரம் அக் கடிதத்தைப் பன்முறை வாசித்தான். இது கனவோ அன்றி நினைவோ என எண்ணினன். பிறகு உண்மையென உணர்ந்தான். தன் விதியை நொந்து கொண்டான். தன் கண்களினின்றும் நீர்வடியப் பெருமூச் செறிந்தான். முடிவில் இன்னது செய்வதெனத் தோன்ருது ஏங்கி யிருந்தான்.

குறித்த நாளில் சுசீலாவுக்கும் சம்பந்தனுக்கும் மணமுடிந்தது. சுசீலா தன் கணவனுடன் வெளியூருக்குச் சென்ருள். சுசீலா சுதந்தரத்தையே மணக்க இச்சை கொண்டாளெனினும், விதி வசத்தால் நேர்ந்ததை எண்ணி விசனிப்பதில் பலனில்லையென உணர்ந்து, தன் கணவன் மனங் கோணுதவாறு இல்லறத்தை இனிது நடத்தி வந்தாள். சம்பந்தன் சுசீலாவைத் தன் கண்ணின் மணிபோல் பாவித்து வந்தான். சுசீலா சென்னையைவிட்டுச் சென்ற நாள் முதல் சுந்தரம், தன் காதலியின் பிரிவாற்ருமையினல் மிகவும் வருந்தினன். சரிவர உண்பதையும் விட்டான். இரவில் உறங்குவதையும் விட்டான். அவர்கள் இருவரும் கூடிப் பேசிய இடங்களைக் காணுந் தோறும், பைத்தியம் பிடித்தவன்போல் நின்று கண்ணீர் வடிப்பான். நாளுக்குநாள் அவன் உடம்பு மெலிந்து துரும்பாகி விட்டான். இரவில் சுசீலா தன்னை அழைப்பது போலவும், தன் முன்னின்று தன்னைத் தேற்றுவது போலவும் கனவு கண்டெழுந்து வருந்துவான். ஒரு நாள் அவன் எவ்விதமேனும் சுசீலாவைப் பார்க்க வேண்டுமெனத் தீர்மானித்து, அவளிருக்கும் ஊர் போய்ச் சேர்ந்தான். சம்பந்தனுடைய வீட்டைக் கண்டு பிடித்து எப்போது இரவு வரப் போகிறதெனக் காத்துக் கொண்டிருந்தான்.

இரவு பத்து மணி யிருக்கலாம். எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. சுந்தரம் மெல்ல அவ்வீட்டிற்குச் சென்று ஒருவரு மறியாமல் மறைந்து கொண்டான். சுமார் பதினேரு மணிக்கெல்லாம் எங்கும் நிசப்தமாக யிருந்தது. வேலைக்காரர்கள் எல்லோரும் தூங்கி விட்டார்கள். சுந்தரம் மெல்ல நடந்து படுக்கை அறைக்குள் சென்ருன். அவ்வறையில் (Bed Room Light) பெட் ரூம் லைட் ஒன்று மங்கலாக எறிந்து கொண்டிருந்தது. சுசீலாவும், சம்பந்தனும் கட்டிலின்மேல் அயர்ந்து நித்திரை செய்வதை அவன் கண்டான். சுந்தரம் சற்று நேரம் நின்று ஏதேதோ யோசனை செய்தான். கடைசியில் துணிந்து கட்டிலின் அருகே சென்று சுசீலாவை அதிக ஆர்வத்துடன் கட்டி அணைத்துக் கொண்டான். சுசீலா உடனே விழித்துக் கொண்டாள். தன் அருகில் சம்பந்தன் படுத்துறங்குவதையும், சுந்தரம் தன்னைத் தழுவி யிருப்பதையும் கண்டாள். அவளுக்கு இன்னது செய்வதெனத் தோன்றவில்லை. பழைய நினைவுகளெல்லாம் அவள் மனதில் தோன்றின. சிறிது நேரம் ஒன்றுங் கூருமல் வாளாயிருந்தாள். பிறகு, சுதந்திரத்திற்குப் புத்திகூறி

எவ்விதமாகிலும் அவனை வெளியே அனுப்பிவிட எண்ணங்கொண்டு அவனது கைகளை விலக்க முயன்றாள். அவை சில்லிட்டிருந்தன. பிறகு அவனை மெதுவாகப் புரட்டிப் பார்த்தாள். ஆ! என்ன ஆச்சர்யம்! அவளைத் தழுவியபோதே சுந்தரம் உயிர் போய்விட்டது. இதை யறிந்த சுசீலா இன்னது செய்வதெனத் தோன்றாமல், தேனில் விழுந்த ஈயைப்போல் திகைத்தாள். பின்னர், அவள் தன் மீது சாய்ந்து கிடந்த அவன் உடலை மெதுவாகக் கட்டிலினின்றும் இறக்கித் தரையில் கிடத்தினாள்.

பிறகு அவள் கட்டிலில் வந்து அமர்ந்து சிறிதுநேரம் கடவுளைத் தொழுதனள். என் காதலர் இறந்து விட்டாரே. பாவி நானல்லவோ அதற்குக் காரணமாக இருந்தேன். இப்பொழுது என் கணவர் எழுந்திருந்தால் என்ன நினைப்பார் என்று கண்களில் நீர் ஆறாகப் பெருகி ஓட சுசீலா சுந்தரத்தின் சவத்தைப் பார்த்து நினைந் துருகினாள். அவள் சம்பந்தனை எழுப்ப, அவன் எழுந்திருந்து தன் மனைவியை நோக்கித் தன்னை எழுப்பியதின் காரணத்தைக் கேட்டான். அவளுடைய கண்களினின்று நீர் தாரை தாரையாகப் பெருகுவதையும், பேச முடியாமல் நாக்குளறுவதையும் கண்டு, திகைத்துச் சுற்றுமுற்றும் பார்க்கக் கீழே சுந்தரத்தைக் கண்டான். உடனே கோபங் கலந்த சந்தேகப் பார்வையுடன் சுசீலாவை நோக்கினான். அவள் நடுநடுங்கி வாய் குழற 'நாதா—என்னை—மன்னியும்' என்றாள். 'அவன் ஆஹா எனக்குத் தெரியுமே. அவன் உனது காதலன்' என்றான். 'ஐயோ அபாண்டம் தாங்கள் தயவு செய்து—நான் சொல்வதைக் கேளும்—அவர் இறந்து கிடக்கின் றார்—என்றாள் சுசீலா. அதைக் கேட்ட சம்பந்தன் திடுக்கிட்டு 'என்ன இறந்து விட்டாரா? ஏன்? இவர் யார்?' என்று கேட்டான். உடனே சுசீலா 'இவர் என் இணைபிரியா பால்ய நண்பர். உம்மை நான் மணக்கு முன் இவரையே காதலித்திருந்தேன். அவரும் என்னைக் காதலித்தார். ஆனால் நாங்கள் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒருவிதமாக விதித்தது. நான் தங்களை மணந்து கொண்டதிலிருந்து இவரை மறந்து உங்களையே தெய்வமாகக் கருதி வந்தேன். அது உங்களுக்கு தெரிந்த விஷயமே. சிறிது நேரத்திற்கு முன் யாரோ என்னைத் தழுவுவதாக உணர்ந்து திடுக்கிட்டு எழுந்தேன். இவர் என்னைத் தழுவி யிருப்பதைக் கண்டேன். என்னை விடுவித்துக் கொள்ள முயன்றபோது அவர் பிரேதமா யிருக்கக் கண்டேன். இவர் எப்போது இங்கு வந்தாரோ நான் ஒன்று மறியேன்' என்றாள்.

சம்பந்தன் தன் மனதிற்குள் ஆஹா! என்னே இணைபிரியாக் காதலின் தீரம். வெகு காலமாகப் பாராதிருந்த தன் காதலியைத் தொட்ட மாத்திரத்தில் இவர் உயிர் உடலைவிட்டுப் பிரிந்ததன்றோ!

அவருடைய காதலே காதல். சுசீலா இவ்வாறு காதலித்திருந்ததாக இதுவரையில் அவள் வார்த்தையாலும் செய்கையாலும் நான் அறிந்தேனில்லை. இவள் தன் விதியை நொந்து இவரை முற்றிலும் மறந்துவிட்டிருக்கின்றாள். இவளுடைய மனோநிடமென்னே என்று பலவாறு சிந்தனை செய்திருந்தான். சுசீலா அவர் மௌனமாயிருப்ப தைக் கண்டு பயந்து நாதா என்ன பேசாமலிருக்கின்றீர்? என்றாள். சம்பந்தன் சுசீலா உன்மீது எனக்குச் சந்தேகம் இல்லை. இவர் காதலின் திறத்தை எண்ணி எண்ணி வியப்புறுகின்றேன். உன் பெற்றோர் செய்த அடாத காரியத்தினாலன்றோ இவர் உயிர் துறந் தார். இதை நான் அறியாமற் போனேனே நடந்தது நடந்தேறி விட்டது. கவலைப்படாதே இவரைத் தக்க மரியாதையுடன் அடக்கம் செய்வோம் என்று கூறி அவளைத் தேற்றினான்.

இவ்வாறு கூறியதும் சுசீலாவின் முகம் பூரித்தது. உடனே அவள் சம்பந்தனை நோக்கி, நாதா! இன்றே நான் நல்வாழ்வு பெற் றேன். இனி என் மனம் ஆறுதல் அடையும் என்று சொல்லிக் கொண்டே, மெதுவாகக் கட்டிலின் அருகே சென்று சாய்ந்து மிகவும் அலுத்தவள் போல் கண்மூடினாள். ஏதோ ஆழ்ந்த சிந்தனை யில் இருந்த சம்பந்தன் உடனே தன் மனைவியை நோக்க அவள் உறங்குவதாக நினைத்து அருகே சென்று அவளைத் தொட்டுப் பார்க்க அவள் உடல் சில்லென்று இருந்தது.

சம்பந்தன் அவள் அருங்குணம் நினைந்து நினைந்து அழுதனன். பின்னர், அவர் தம் இணைபிரியாக் காதலின் உயர்வினை அனைவருக் கும் தெரிவித்து உற்றோரும், பெற்றோரும், மற்றோரும் சூழ்ந்துவர, அவ்விருவரது உடல்களையும் மிகவும் மரியாதையோடு மயானத்தில் வைத்து அந்திக் கடன் பலவும் ஆற்றினன். சம்பந்தன் அன்று முதல் அவ்விருவரையும் தெய்வம்போல் போற்றி வரலாயினன்.

---

ஓர் மாலுமி:—(தன் சிநேகிதனைப் பார்த்து) என்னுடைய தகப்பனார் சகோதரர் மாமனார் பாட்டனார் எல்லோரும் கடலில் இறந்து விட்டார்கள்.

சிநேகிதன்:—நானாயிருந்தால் கடலுக்கே போக மாட்டேன்

மாலுமி:—உன்னுடைய பந்துக்கள் எங்கே இறந்தார்கள்?

சிநேகிதன்:—என்னுடைய பந்துக்களெல்லோரும் படுக்கை யில் இறந்தார்கள்.

மாலுமி:—அப்படியானால் நீ இனிமேல் படுக்கைக்குப் போகாதே. —எம். கிருஷ்ணமூர்த்தி மாயவரம்

# சோமு செய்த சிறு பிழை

[நகுலன்]

மாலை ஆறு மணி. சென்னை கடற்கரையில் என்றும் காணப்பெறும் கூட்டமும் குதூகலம் நிலவியிருந்தது. ஆடவரும் பெண்டிரும் திரள்திரளாக உலாவுதலும், சங்கீத இன்னிசை கேட்பதுவும் 'மானினம் வருவபோலும், மயிலினம் திரிவபோலும்' எங்கணும் பரவி யிருந்தது. அங்கிருந்தவர் எல்லார் முகத்திலும் உற்சாகம் தாண்டவமாட, சவுக்குச் சாலை யோரத்தில் தன்னந் தனியனாகப் புஸ்தகத்துடன் மணலிற் சாய்ந்துகிடந்த சிறுவன் முகத்தில் மட்டும் கவலை குடிகொண்டிருந்தது. பதினெட்டுப் பிராயத்துக்குச் சற்றும் அதிகப்படாத இளமையும் கட்டழகும், வசீகரமான முகவெட்டும் உடையவனாய் கண்டவர் மனதைக் கவரும் கூரிய பார்வையும் உடையவன்; அவன் ஆடை தனவந்தரது புதல்வனென்பதைக் காட்டும். அவன் மனம் புஸ்தகத்திற் செல்லவில்லை. யாதோ ஆழ்ந்த எண்ணத்துடண் அடிக்கடி பெருமூச் செறிந்துகொண்டு கன்னத்திற் கைவைத்துக் கிடந்தான்.

சோமசுந்தரன் என்னும் அச் சிறுவன் தஞ்சையைச் சார்ந்த மிராசுதாரருட் சிறந்த தணிகரான இராமலிங்க முதலியாரது புதல்வன். கல்வியினிமித்தம் தாய் தந்தையரைவிட்டுத் தனியாகச் சென்னையில் இருந்து வந்தான். இதுவரையில் படிப்பைத் தவிர வேறு விஷயங்களில் மனதைச் செலுத்தாதவனுக்கு, வழக்கம்போல் தாய் தந்தையரே கலியாணப் பேச்சை ஆரம்பித்து மனதைக் கெடுத்து விட்டனர். சில நாட்களாக நடந்துவந்த வழக்கில், தமது குடும்பத்துச் சொத்துக்கு ஊன முண்டாகுமென்றும், தன் உறவில் பணக்காரர் குடும்பத்துப் பெண்ணைச் சோமசுந்தரனுக்கு மணமுடிக்க வேண்டுமென்றும் அவ்விதம் செய்தால் வழக்கும் ஒருவிதம் முடிந்து விடுமென்றும் தகப்பனார் எழுதி யிருந்தார். விவாகம் என்றவுடன் அவனுடைய மனம் குழம்பிற்று. அதுவரையில் அது விஷயம் நினைக்காதவனும், விவாகம் என்ற சொல்லே விதை யிட்டுவிட்டது; தன்னையும் அறியாமல் மங்களத்தைச் சதா நினைக்கத் தொடங்கினான். மங்களமோ, ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். பனிரெண்டு பிராயத்தினள் என்றாலும் அழகு திரண்டு ஒழுதும் அமைப்பினை யுடையவள். பெயருக்கேற்றபடி முகத்தில் மங்களமான புன்னகை தவழும். ஒரு முறை தான் வகுப்பிற் பாடத்தைக் கவனித்திருந்தபோது, அந் நங்கை அஞ்சி மெல்ல அசைந்து நடந்து வகுப்புட் புகுந்து உபாத்தியாயரிடம் ஏதோ வினவி விட்டு வெளிப்போன தோற்றம் சோமசுந்தரம் கண்ணை விட்டு அகலவில்லை. அவள் அன்று கிழிந்து அழுக்கடைந்த ஆடை உடுத்திருந்தாள்; அதுவும் அவன் கண்ணுக்குச் சந்திரனை

மறைக்கும் மேகம் என்றே கருதினன். அவளது பச்சைத் தாவணி யும், பசிய புன்சிரிப்பும் சித்திரத்தைப்போல் அவனுள்ளத்தைக் கொள்ளை கொண்டது. ஆகவே, விவாகம் என்றவுடன் அவன் மனம் மங்களத்தை நாடியது வியப்பல்லவே! ஆனால் என்ன செய் செய்வான்? அவனோ வேளாள குலம். அவளோ பிராமண மங்கை. இருவருக்கும் மணமேது, குணமேது. தான் கற்ற நூல்களில் ஜாதி மத வேற்றுமைகளைக் கண்டித்தவையெல்லாம் மனப் பாடம் பண்ணி ஏசுவான், என்ன பலன். இம்மூட வொழுக்கம் ஒழியுமா? ஜாதியா, குலமா என்று பழிப்பான். காவலிற் கட்டுண்டவன் விடுதலை அடை வதன் பெருமையைப் பாராட்டுவதில் என்ன லாபம்?

என்றாலும், ஆசை வெட்கம் அறியாது அல்லவா! கிட்டா தாயின் வெட்டெனமற என்னும் உபதேசம் ஏட்டுச் சுரைக்காய் தானே! காளைப் பருவத்தினர், வேளைக்கு ஒரு வெற்றி பெற முடியும் என்ற மனோதிடம் வாய்ந்தவர். ஆகையால் சோமுவும் அசட்டு நினைப்புக் கொண்டிருந்தான். அன்று முதல் மங்களத்தைக் கவனிக்கத் தொடங்கினன். அவள் எட்டாம் வகுப்பில் வாசிக் கின்றாள் என்றும், ஏழைக் குடும்பத்தோடு சேர்ந்தவளென்றும் அறிந்தான். தன்னிஷ்டப்படி நடந்தால் தனி உபாத்தியாயரை வைத்து வீட்டிலேயே படிக்க வைத்துவிடுவான்!

கடற்கரையில் இதே சிந்தனையிற் கிடந்தவன். கீழே நழுவிய புஸ்தகத்தையும் கவனிக்க முடியுமா? சாய்ந்தவண்ணம் 'மங்களம், மங்களம்' என்று மணலில் எழுதிக் கொண்டிருந்தான். அவன் 108 தரம் எழுதினனோ, 1008 முறை எழுதினனோ, யாம் அறியோம், தான் கோரிய மங்களம் தன்னெதிரில் வரக் கண்டான். தன் அகக் கண்ணிற் சதா தோன்றுவதால், கனவா நனவா என்று மயங்கிச் சற்றுத் தெளிவடைந்து கண்ணினைத் துடைத்துக்கொண்டு பார்த் தான்; ஆம், ஐயமில்லை, அவள்தான். 'மங்களம்' என அழைக்க வாயெடுத்தான். அவளுடைய குரல் கேட்டான். புளகாங்கிதம் எய்தி, 'என்ன சிங்காரமான குரல்' என அகமகிழ்ந்தான். அப்பொழுதுதான் அவளுடன் மணி என்னும் தன் சகமாணவன் இருந்ததைக் கண்டான். அவன் துஷ்டனென்பதும் அறிவான். நல்லவனோ கெட்டவனோ, அவன் கழுத்தைத் திருகலாமா என்று கூட நினைத்து விட்டான். இயல்புதானே!

மங்களமும் மணியும் இவனிருந்ததைக் கவனிக்காமல், அவனுக் கடுத்த சவுக்கு மறைவில் உட்கார்ந்தனர். சற்றே தொலை வில் இருந்த சோமசுந்தரன் செவியில் அவளது சிரிப்பும் குரலும், அவனது ஆர்ப்பாட்டமும் விழுந்தன. திடீரென்று 'அடே மணி, இன்னொரு முறை அவன் பெயரைச் சேர்த்து என்னோடு பேசி னையோ பார், உன்னிடம் பேச மாட்டேன்' என்ற கோப மொழி களைக் கேட்டான். சற்று நேரத்தில் மணி அவளைக் கடிந்து உரைப்

பதும், பின்னர் அவளைத் துரத்திக்கொண்டு வந்ததையும் கண்டான். சோமுவும் தன்னை யறியாமல் தன்னிடத்தைவிட்டு எழ, மங்களம் தன்னெதிரே ஓடிவந்து குப்புற விழுந்தாள். விழுந்தவளைத் தூக்கிப் பிடிக்கவும், துரத்தி வந்தவனை ஒரு கைபால் விலக்கவும் ஒரு நிமிஷத்திற்குமேற் பிடிக்கவில்லை.

'அடி, முளைக்கிறதுக்குள்ளே உன் சாகசம் அறிவேண்டி. இந்தப் பயல் இங்கே இருக்கான் இண்ணு தெரிஞ்சுண்டே இப்படிப் பேசினுயா? ஆகட்டும் அம்மாஞ்சியிடம் சொல்லி உன் கொழுப்பை அடக்காவிட்டால் நான் மணிப்பயலல்ல' என்று அதட்டியவண்ணம் மணி அடிக்கக் கையோங்கினுன். சோமு, மங்களத்தைக் கீழே விடுத்து அவ்வடியை விலக்கிக்கொண்டு, 'அடே மணி உன்னை நல்லவனென்றல்லவா நினைத்தேன். சிறுபெண்ணை அடிக்கலாமா?' என்று கடிந்துரைத்தான். அவ்வார்த்தை மணியின் கோபத் தீயில் நெய்விட்டது போலாயிற்று.

'நான் அடிச்சா உனக்கென்னடா? என் அக்கா பெண்ணை என்னென்னமோ செய்வேன். சூத்ரப் பயல் நீ யாரடா கேட்க?' என்று கூறிவிட்டுச் சோமுவின் பிடியினின்றும் திமிறிக்கொண்டு ஓடிவிட்டான். மணியின் கோழைத்தனம் அறிந்த சோமு, அவனைக் கவனியாது, கீழே கிடந்த நங்கையைச் சற்றுநேரம் உற்றுநோக்கிய வண்ணம் நின்ருன். பின்னர் 'நானொரு பால் வாங்க நலன் ஒரு பால் உள் நெகிழ்ப்ப' அவளை மெல்ல வாரி எடுத்துச் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்து யாரும் கவனிக்கவில்லை என்றறிந்து முகத்தோடு முகம் சேர்த்து முத்தமிட்டனன்.

மங்களம் திடீரென்று விழித்துக் கொண்டாள். தானிருந்த நிலை யுணர்ந்து திகைத்து எழுந்து நாணத்துடன் நின்ருள். அப்பொழுதுதான் தான் செய்தது குற்றமென்று உணர்ந்தான் சோமு.

'மங்களம், நான் பெரிய தவறு செய்தேன். மணியிடம் தப்பி வந்த வுன்னை ஆதரிக்காமல்........' என்று சோமு கூறுவதற்குள் 'போதும் மணி பரிகாசமாய்ச் சொன்னுனென்று நினைத்தேன். நீ ஆண்பிள்ளையா யிருந்து சதா என்னையே பார்ப்பதாகவும் என்னைப் பற்றியே விசாரிப்பதாகவும் சொன்னது இப்போதுதான் தெரிகிறது. படித்தவாளுக்குப் புத்தி கொஞ்சம்தான் என்று பரப்பரப்புடன் கூறிவிட்டு மங்களம் ஓடத் தொடங்கினுள். அவள் நின்ற நிலையும் கோபத்துடன் விளங்கிய கண்களும் ஓடிய ஒய்யாரமும், மற்றும் ஒரு முறை காண்பதற்குத் தன் உயிரையே கொடுப்பதற்குச் சித்தமா யிருந்தான். அவள் ஏசியதுகூட அவனுக்குப் புகழா யிருந்தது.

மங்களம் வீடுபோய்ச் சேரும்பொழுது ஏழறை மணி யிருக்கும். அதற்குள் மணி, தன் தமக்கையிடம் பள்ளிச் சிறுவர்களுடன் மங்களம் துஷ்டத்தனமாகப் பழகுவதாகக் கோள்

சொல்லி விட்டான். அவளும் தன் புதல்வி சிறுமியாயிற்றே … விதம் செய்வாளா என்றும் சிந்திக்காமல், மங்களத்தை அடித்து அன்றிரவு பட்டினியாகப் போட்டாள். அவள் தலையணையும் இன்றிப் படுத்து அழுதுகொண்டிருந்த பொழுது மணி, காதொடு காதாய் :இனியும் என் பேச்சுக் கேட்காவிட்டால் இன்னும் உதை தான்' என்று உறுமிவிட்டுத் தன் படுக்கைக்குப் போய்விட்டான்.

மங்களமும், அவள் தந்தை ஜகதீசய்யரும் உறங்கினவரல்லர். உத்தியோக நிலையத்தில் சர்வதா உபத்திரவம் இருந்துவர, அன்று அதிகாரியும் கடிந்து பேசியதால் இன்னும் உத்தியோகம் நீடிப்பது அரிது என்று வருந்திக்கொண்டு வீடுவந்தவர், எவ்விதம் தன் சகதர்மினியிடம் உரைப்பது என்று சிந்திக்கும்பொழுது, அவ்வுத்தமி, தன் சீமந்த புதல்விக்கு விரைவில் விவாகத்தை முடித்துவிட வேண்டும் என்று கண்டிப்பா யுரைத்து விட்டாள்; அவள் வார்த்தைக்கு அத்தாட்சியாக மணி யுரைத்த மணிச் சொற்களையும் எடுத்தோதி 'இன்னும் தாமதித்தால் என்னென்னமோ சொல்வார்கள், அவள் படிப்பையும் நிறுத்திவிட வேண்டும்' என்றாள். 'கலியாணமென்றால் பணம் வேண்டுமே பவானி. வரதக்ஷிணைக்கே ஆயிரம் இரண்டாயிரம் கேட்பாளே' என ஆக்ஷேபனை செய்தார்.

பவானி:—இதென்ன உமக்கு எங்கேதான் போச்சு யோசனை, இப்படித்தான் உத்யோகம் பன்றாப் போலே யிருக்கு. நம்ம வண்டு மணி யிருக்கச்சே வேறென்ன? அவனும் பி. ஏ. வாசிக்கிறான். வரதக்ஷிணையும் குறைக்கலாம். என் தம்பி என்று இல்லை........

'ஆம் ஆம், உத்யோகமே போயிடும் போலிருக்கு என்று மனம் வருந்தி விஷயங்களை எடுத்துரைக்க மணப் பேச்சு அத்துடனின்றது.

மறுநாள் உத்தியோகமும் ஜெகதீசய்யரைவிட்டு விலகியது. என் செய்வாள் பாபம். தன் ஏகபுத்திரியை நன்றாகப் படிக்கவைக்க வேண்டுமென்ற அவா. பணக் கஷ்டம். அதனால் பவானி வார்த்தைக்குக் கட்டுப்பட்டதுபோல் மங்களத்தைப் பள்ளியினின்றும் நின்று விடும்படிக் கூறிவிட்டார். மங்களத்திற்கு, மணமானாலும் சரி, ஆகாவிட்டாலும் சரி, மேலும் வாசித்து விற்பன்ன மடைய வேண்டும் என்ற ஆர்வம் இருந்தும் என் செய்வாள். அடுத்த நாள் பள்ளிக்குச் சென்று உபாத்தியாயரிடம் விடை பெற்றுக்கொண்டு வந்துவிட்டாள். ஆனால், இரண்டு நாட்களுக்குப் பின்னர், பள்ளியினின்றும் 'மங்களம் படிப்பதில் சிரத்தையுடையவள். ஆதலால், நிறுத்திவிடுவது சரியல்ல என்றும், அவள் சம்பளச் செலவினை ஒரு பரோபகாரி பள்ளியிலும் ஏற்றுக்கொள்ள முன் வந்துள்ளார்' என்றும் கடிதம் கிடைத்தது. மங்களம் படித்தால் போதும் என்ற நினைவில் ஜெகதீசய்யர் மீண்டும் பள்ளிக்கு அனுப்பச் சம்மதித்தார்.

இல்லத்தில் நாளுக்கு நாள் வறுமை அதிகரித்தது. மணியும் தமக்கையகத்தில் சௌகரியம் குறைவது கண்டு ஹோட்டலில்

..ருப்பிடம் செய்து கொண்டான். அச்சமயம் பவானியும் பிணி வாய்ப் பட்டாள். கணவனும் மகளும் மாறிமாறி அவளுக்கு உபசாரணை செய்து வந்தனர். உத்தியோகத்துக்காக அலைச்சலுடன் பல கவலைகளுக்கும் இரையான ஜெகதீசய்யரும் நோயில் விழுந்தார். பிணியாளர் இருவரையும் கவனிப்பதென்றால் பேதையாகிய மங்களத்திற்கு முடியுமா? தாயார் மொழிப்படித் தன் பாட்டனுக்குக் கடிதம் எழுதினதிற் சிறுபணம் உதவி கிடைத்தது. அதைக்கொண்டு வியாதியாளரைக் கவனித்து வந்தாள்.

ஒரு நாள் மாலை மூன்று மணி யிருக்கும். அன்னை வியாதியின் கொடுமையாற் பிதற்றுகின்றாள். தகப்பனாரோ கட்டுக் கடங்காத குளிர் சுரத்தில் வேதனைப் படுகின்றார். இக்கோரக் காட்சியைக் காணச் சகிக்காமல் அழுதுகொண்டு என்ன செய்யலாம் என்றும் அறியாமல் ஏங்கி நின்றாள். அச்சமயம் அன்னை பித்தம் மேலிட்டு அலறியது கேட்டு அஞ்சிப் பள்ளியில் உபாத்தியாயரையாவது காணலாம் என்றோடினாள். அன்று விடுமுறை நாள். யாரையும் காணாது தன் சகமாணவிகள் இல்லம் இரண்டொன்று விசாரித்துப் போனாள். 'வாடி அம்மா, ஏன் நல்ல வைத்தியரைக்கொண்டு பார்க்கிறதுதானே' என்ற உபசார மொழிகள் தவிர பயன் ஒன்றுமில்லை. ஏழைகள்தானே! இனிச் சர்வேசுரனைத் தவிர வேறு கதியில்லை என்று நொந்து இல்லம் திரும்பினாள்.

என்ன அதிசயம்! தான் இல்லாதபோது பிரபல வைத்தியர் ஒருவர் வந்து தாய் தந்தையர் இருவருடைய வியாதி நுட்பத்தையும் கண்டறிந்து தக்க மருந்து கொடுத்துக் கொண்டிருந்தார். அவருடன் மருந்து ஊட்டவும் நோயாளிகளை எடுக்கவும் பிடிக்கவும் ஒரு தாதியும் வந்திருந்தாள். இவர்கள் யாருதவியால் வந்தனர் என்று வினவவும் மங்களத்துக்கு ஒழியவில்லை.

வாரம் இரண்டாயின. பிணியாளர்கள் சிறிது தேர்ச்சி யடைந்து உட்கார்ந்து பேசும் நிலைமை யடைந்தனர். இவ்வளவு செலவுக்கும் நாம்தானே கொடுக்க வேண்டும் என்று கவலை கொண்ட மங்களம் தந்தையாரை வினவினாள். அவரோ திகைப்புண்டு வைத்தியரைத் தான் கேட்டறிய வேண்டுமென்றார். அன்று மாலை வழக்கம்போல் வந்த வைத்தியரை மங்களம் விசாரித்தனள். வைத்தியர் அன்பு கலந்த மொழியுடன் 'அம்மா, இதற்கு முன்னரே இதைப்பற்றி விசாரிப்பாயென்று அறிவேன். இதுவரையில் உன் பெற்றோர் தேக நிலைமையில் மறந்தனை போலும். இதுவரையில் உங்கள் குடும்பத்துக்குத் தோன்றாத் துணையாயிருந் துதவிய உத்தம சீலனை நீங்கள் தெய்வமாகக் கொண்டாட வேண்டும். நான் எவ்வளவு மன்றாடியும் தன் பெயரைக் கூறலாகாது என்று கூறிவிட்டான்.

(அடுத்த இதழிற் முடிவு)

207676

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் இயற்றிய

## அரிய நூல்கள்

# அனுபவ வைத்திய நூல்

(2 - ஆம் பதிப்பு)

இப் புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவேயிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூலின் உதவியைக்கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூலில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

இதன் விலை ரூபா 2. தபால் சார்ஜ் வேறு.

# ஜீவ இரகசியம்

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர்களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மையெனப் பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை —தேகம் சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட்டிருக்கிறது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந் நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1. தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.